
சமூகப் பணியில்

கதிர் துரைசிங்கம்



# கதிர் உலா

## பாராட்டுப் பனுவல்

ஆகஸ்ட் 12, 2012


சமூக சேவையாளர் திரு. கதிர் துரைசிங்கம்

அவர்களைத் தந்த பெற்றோருக்கு நன்றி !



# கதிர் உலா

சமூகப் பணியில் கதிர் துரைசிங்கம் அவர்களின் 25 ஆண்டுகால சேவையை மனதில் கொண்டு "பவதாரணியின் பாரதி கலைக்கோயில்" முன்னெடுத்த பாராட்டு விழாவில் வெளியிடப்பட்ட மலர்




பதிப்பாசிரியர்கள்:

**திரு. த. சிவபாலு**

**திரு. எஸ். மதிவாசன்**

## மலர் வெளியீட்டுக்கு ஆதரவு நல்கியவர்கள்:

திரு. பொ. கனகசபாபதி
திரு. வி. கந்தவனம்
திரு. மனுவல் ஜேசுதாசன்
திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம்
திரு. த. சிவபாலு
திரு. எஸ். மதிவாசன்
பொன். சுந்தரலிங்கம்
மா. செ. அலக்சாந்தர்

# உள்ளே


1. பதிப்பாசிரியர் மொழிவு
2. ஆசிச்செய்தி: ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
3. ஆசிச் செய்தி: மேருபுரம் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
4. ஆசிச்செய்தி: சைவ சித்தாந்த மன்றம், கனடா திரு. சு. விசுவலிங்கம்
5. பாராட்டுவிழா சிறப்படைய வாழ்த்துகின்றோம் - வ. இ. இராமநாதன் (பவா) பிரித்தானியா
6. எளிமை நிறைந்தவர் - இராமநாதன் லம்போதரன்
7. இருபத்தைந்து ஆண்டு சேவைப் பாராட்டுப் பாமாலை - பண்டிதர் எம். எஸ். அலெக்ஸ்சாந்தர்
8. சம்பியா நண்பர்களின் வாழ்த்து
9. கவின்கலாலயாவின் நல்வாழ்த்து - வைரமுத்து திவ்வியராஜன்
10. மணிக்கு மணிப்பொருளாக வாழும் கதிர் துரைசிங்கம் - மு.சு.க. சிவகுமாரன்
11. 'நம்பர் வண்' நண்பர் கதிர் துரைசிங்கம் - ஆர். ஏன். லோகேந்திரலிங்கம்
12. நட்பின் திலகம் - திரு. எஸ். திருச்செல்வம்
13. நன்மையை உழுது அன்பை விதைப்பவர் - டி.ஜே.திலீப்குமார
14. இருவரும் ஒன்றாகவே பிரயாணிக்கிறோம் - அதிபர். பொ. கனகசபாபதி
15. பாடறிந்தொழுகும் பண்பாளர் - கவிநாயகர் வி. கந்தவனம்
16. பணியின் மகத்துவம் - மனுவல் ஜேசுதாசன்
17. எங்கள் நகைச்சுவை மன்னன் - புத்திரசிங்கம், இலண்டன்
18. என் பார்வையில் இவர் எங்களுக்கு ஒரு வழிகாட்டி - நா. சாந்திநாதன்
19. ஓர் உற்சாக மனிதர் - இளவாலை எஸ். ஜெகதீசன்
20. எல்லோருக்கும் அவர் அன்பர் - சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன்
21. தமிழன் வழிகாட்டியின் வாழ்த்துச் செய்தி - செந்தி செல்லையா
22. உதாரணம் ஒன்று - அ.புராந்தகன்
23. நல்ல நட்புக்கு எடுத்துக்காட்டு - குரு அரவிந்தன்
24. Kathir Thuraisingam - Dr S. Navaratnam
25. காலம் இடம் அறிந்து உதவும் பண்பாளர் - பொன் சுந்தரலிங்கம்
26. K.Thuraisingham - the Multi-Talented Mahajanan. M.Karthigesu
27. கதிரா? துரையா? - க. முத்துலிங்கம்
28. இன்சொல்லன் இன்முகத்தன் இனிய சமூகசேவகன் நண்பர் துரைசிங்கம் - Dr. இ. பாலசுந்தரம்.
29. கோடை நாடகத்தின் நாயனக்காரர் 'இவர்' - பார்வதி கந்தசாமி
30. எல்லோருக்கும் இனியவர் கதிர் - கே. எஸ். பாலச்சந்திரன
31. 'கடி டாக்டர். துரைசிங்கம் அவர்கள்.- செல்வன்
32. எனது அயலவர் - வே. நந்தீஸ்வரன்
33. உள்ளத்தாலும் உயர்ந்தவர் - வேலா சுப்பிரமணியம்
34. இன்முகக் கலைஞர் - ஸ்ரீ முருகன்
35. பெருமை இல்லாதவர் பெருமைக்குரியவர் - எஸ். ஜெயானந்தசோதி
36. ஒரு தொலைபேசி அழைப்பில் வந்து நிற்பவர் - மகேந்திரன்
37. பாரதி கலைக்கோயிலின் மாலுமி அவர் - எஸ். மதிவாசன்
38. கரும வீரன் கதிர் துரைசிங்கம் - த.சிவபாலு

# சிறந்த தொண்டர் 'கதிர் துரைசிங்கம்' அவர்களின் சமூகநல சேவைகளைப் பாராட்டுகின்றோம்

"நான் இந்தச் சமூகத்திற்கு என்ன செய்தேன்" என்று தன்னைத்தானே ஒரு கணம் கேட்டுப்பார்ப்பவர்கள் இந்த உலகில் மிக மிகக் குறைவு என்றுதான் சொல்லவேண்டும். சிலர் சமூத் தொண்டாற்றவென்றே பிறக்கின்றார்கள். மகாத்மா காந்தி தனக்கென வாழாப் பிறர்க்குரியராக வாழ்ந்தவர். அவ்விதம் எல்லோரும் வாழ்ந்துவிட முடியாது. நம்மில் ஒரு சிலர் தாம் வாழும் சமுதாயத்தை நேசிப்பவர்களாகவும் மக்கள் சேவையாளர்களாகவும் வாழ்கின்றார்கள். மற்றவர்களுக்கு உதவுவதில் மன நிறைவுகொள்வோர் ஒரு சிலரே! அவ்விதம் மக்களுக்கு உதவி செய்வதன் மூலம் மற்றவர்களின் மனங்களில் இடம்பிடிப்பது என்பது மிகவும் எளிதான காரியமல்ல. பொதுப் பணி என தம்மை அர்ப்பணித்துக் கொள்பவர்கள் மற்றவர்களின் நன்மதிப்பைப் பெறுகின்றனர். ஆனால் சிலரோ எதிர்ப்பையும் அதன்வழி பகையையும் அவப் பெயரையும் சம்பாதித்துக் கொள்வதும் நாம் காணும் உண்மைகள். ஆனால் எம் அன்புக்கும் நட்புக்கும் மதிப்பிற்கும் உள்ள கதிர் துரைசிங்கம் அவர்கள் கனடா மண்ணில் கால் பதித்த காலந்தொடக்கம் பொதுப்பணி செய்வதில் முன்னின்று உழைத்துவருகின்றார். பாராட்டுதல், வாழ்த்துதல், போற்றுதல், நயத்தல் என்பன ஒருவர் செய்யும் சேவைகளைப் பாராட்டுவதன் மூலம் அவரின் தொண்டுகளை நாம் கணித்துக்கொள்கின்றோம், அந்தப் பணியால் பலர் பயன் அடைகின்றார்கள் என்பதனைச் செய்பவர்களுக்கு அறியத்தருவதன் மூலம் அவர்களின் மனதில் தென்பு ஊற்றெடுக்க வழி சமைப்பதாக அமையும். அவர்கள் தமது பணிக்கு வரவேற்புக் கிடைக்கின்றது என்பதனால் மேலும் உற்சாகத்தோடு ஈடுபட வழி வகுப்பதாக அமையும். மற்றவர்களின் நன்மதிப்பு, கணிப்பு, பாராட்டு என்பன ஒருவர் வாழும் போதே செய்யப்படவேண்டும். அது அவரது சேவைக்குக் கிடைக்கும் மதிப்பு மட்டுமல்ல ஒரு வரலாற்றுப் பதிவாகவும் ஆகிவிடுகின்றது. இன்று எமது சமூகத்திற்காகப் பணிசெய்த பலரது வரலாறுகளை நாம் அறியமுடியாத நிலையில் இருக்கின்றோம் என்றால் அது அவர்களைப் பற்றிய பதிவுகள் இல்லாமையே ஆகும். ஏதிர்காலச் சந்ததியினருக்கு எம்மத்தியிலே பல்துறைகளிலும் பணியாற்றிவயர்களின் வரலாறுகள் இத்தகைய திரட்டல்களால் கிடைக்க வழி வகுக்கப்படுகின்றன.

அவரிடம், "ஐயா நீங்கள் இதனைச் செய்துதரவேண்டும்" எனக்கேட்டால் எந்தநேரத்திலும் மனமுவந்து வந்துநின்று செய்யும் தன்மை அவரிடத்தே குடிகொண்டுள்ள மிகப் பெரும் பண்பு. காலத்தால் செய்யும் நன்றி ஒருவருக்கு ஞாலத்தின் மாணப்பெரிது என்பார்களே! காலம் இடம் அறிந்து உதவுவதில் அவருக்கு நிகர் அவரேதான்.

உதவி செய்வதற்கு என்றே பிறந்தவர்கள் உலகில் மிகச் சிலரே. ஊதவி செய்வதற்கு தனியான உள்ளம் தேவை. அந்த உள்ளத்தை நாங்கள் திருவாளர் கதிர் துரைசிங்கம் அவர்களிடம் கண்டோம். அதனால் அவரை நாம் அணுகாமலே வந்து உதவிசெய்யும் பாங்கினை எமக்காக பெற்றுக்கொள்ளும் நட்புடைமையை நாம் பெற்றுக்கொண்டோம்.

சமூகம் உனக்கு என்ன செய்தது என்பதனைவிட நீ சமூகத்திற்கு என்ன செய்தாய் என்பதே அவரிடம் குடி கொண்டுள்ள தாரக மந்திரமாக் காணமுடிகின்றது. நாம் உயிரோடு இருக்கும்போது ஏதோ ஒரு வழியில் உதவி, ஒத்தாசைகளை நல்கவேண்டும் என்பது அவரது அடிமனத்தில் மிக ஆழமாகப் பதிந்துள்ள மாபெரும் மனித விழுமியமாகும்.

அன்பு, பண்பு, மற்றவர்களை வசீகரிக்கும் ஆற்றல், நகைச்சுவை ததும்ப மற்றவர்களின் மனங்களைக் குளிரவைக்கும் உரையாடல் அவர் பால் ஈடுபாட்டை ஏற்படுத்தும் மனிதப் பண்புகளாகும். மனிதனாக வாழக் கற்றுக் கொள்ளவேண்டிய பல பண்புகளை நாம் அவரிடம் இருந்து கற்றுக் கொண்டுள்ளோம்.

"எங்கிருந்தோ வந்தான் கண்ணன்" என்பதற்கேற்ப எங்களோடு வந்து உறவாடி எங்களில் ஒருவராக அவர் இணைந்துகொண்டார். வந்தவர் தானுண்டு தன்பாடு உண்டென்றல்லாமல் மிகவும் நெருக்கமாகப் பழகி எங்கள் அனைவரதும் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட "கண்ணனாகவும்" அவர் இருக்கின்றார். கேட்டவற்றைக் கேட்டமாத்திரத்தே நிறைவேற்றித் தரத் தக்க ஒருவராக அவர் எமக்கு வாய்த்துள்ளார். அவர் கலந்து கொள்ளும் எந்தவொரு நிகழ்வாக இருந்தாலும் அந்த நகிழ்வில் ஒரு கலகலப்பு, புதுமை, நகைச்சுவை எனப்பல்வேறு நிலைகளைத் தோற்றுவிக்கின்ற நற்பண்பினைத் தன்னகத்தே கொண்டவர்.

கடந்த இரண்டு தசாப்பங்களுக்கு மேலாகக் கனடா மண்ணில் தனக்கென ஒரு தனியிடத்தை ஆக்கிக்கொண்டு பல்வேறு அமைப்புக்களோடும் நண்பர்களோடும் உறவாடி உதவி வருபவர் திருவாளர் கதிர் துரைசிங்கம் அவர்கள். "ஈங்கிவனை நாம்பெறவே என்னதவம் செய்துவிட்டோம்" என்று நாம் எண்ணும் அளவிற்கு தனது பணியினாலும், பராவலாலும் அனைவரதும் உள்ளத்தில் இடம்பிடித்துள்ளவர் அவர்.

நிமிர்ந்த நன்நடை, உயரிய தோற்றம், நேர்கொண்ட பார்வை, அன்பொழுகப் பேசும் இன்மொழி, இன்பத்திலும் துன்பத்திலும் சிரித்திருக்கும் சீர்மைமிகு சால்பு கைவரப் பெற்ற சான்றாண்மை அவரிடம் குடிகொண்டிருப்பதே அவர் அனைவரோடும் பழகும் தன்மை கைவரப் பெற்றவராக உள்ளார்.

பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடின்றி அனைவரோடும் ஒரே தன்மையில் பழகும் பாங்கும், பக்குவமும் அவரின்பால் அனைவரையும் விருப்பம் கொள்ளவைக்கும் தன்மையை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. சிரித்தமுகத்தோடு அனைவரையும் வரவேற்று உபசரிக்கும் தன்மை அவரிடம் உள்ள நற்பண்புக்குச் சான்றாக அமைகின்றது.

தான் துணிந்த கருமத்தைச் செய்துமுடிக்கும் வரை ஓய்வோ, உறக்கமோ அவரை அணுகப் பயப்படும். அந்த அளவிற்குத் தான் எடுத்த செயலை நிறைவேற்றத் துடிக்கும் செயல் வீரராக அவர் திகழ்கின்றார்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவது என்பது இழுக்கு" - குறள்

என்னும் பொய்யாமொழிக்கேற்ப திரு. துரைசிங்கம் அவர்கள் தான் செய்ய ஒப்புக்கொண்ட எந்தப் பணியாயினும் அதனை நிறைவேற்றும் வரை உறங்கவே மாட்டார். அதனை நிறைவேற்றும் வரை சதா அதுபற்றியே அவரது சிந்தனை வட்டமிட்டவண்ணம் இருக்கும். அதனைப் பற்றி விசாரித்துத் தெரிந்துகொண்டவற்றைக் குறித்துப் பட்டியல்போட்டு வைப்பதிலும் அவர் ஒரு திறன்மிக்க ஒழுங்கமைப்பாளர் என்பதனை எடுத்துக்காட்டும் தன்மை "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்பதற்கு பலவிதமான பொருட்கள் விளக்கமளிக்கப்பட்டது போன்று அவரது செயற்பாடுகள் அவரை எத்தகைய பண்பினைக் கொண்ட ஒரு மனிதர் என்பதனைக் படம்பிடித்துக்காட்டுவதாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக அவர் ஒரு கூட்டத்தில் பேசப்போகின்றார் என்றால் அதனைப் பற்றி பலரிடமும் விசாரித்து அதனை தக்கமுறையிலே சபையோர் சிரித்து மகிழ்ந்து கேட்கக்கூடியதாக உரையாற்றும் வல்லமை கைவரப்பெற்றவர். சபையோர் சிரிப்பார்கள். ஆனால் கதிரோ தனது செயலில் மிகவும் கவனமாகச் சிரிக்காமலே மற்றவர்களைச் சிரிக்கவைத்துச் சாதனைபுரியும் ஒருவராக நாம் அவரைக் காண்கின்றோம்.

"செய்வன திருந்தச் செய்" என்னும் முதுமொழிக்கேற்ப அவர் மேற்கொள்ளும் எந்தக் கருமமும் மிகச் சிறப்பும் சீர்மையும் செம்மையும் உள்ளதாக அமைந்திருக்கும். "எல்லாமே அவற்றின் அழகினைக் கொண்டுள்ளன. ஆனால் அதனை ஒவ்வொருவரும் காண்பதில்லை" என்னும் சீனத்தத்துவமேதை கொன்பியூசியசின் சித்தாந்தத்திற்கேற்ப எதிலும் அழகைக் கண்டு ரசிப்பதோடு நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனப் பெருமனது கொண்டு அதனை மற்றவர்கள் அறிந்துகொள்ள வைக்கும் பரோபகாரக் குணவியல்பு அவரிடம் குடிகொண்டுள்ளது.

கதிரின் செயற்றிறன் புகழ்பாடி நிற்கும் அரும்பெரும் வரலாற்றுப் பதிவாக வெளிவரும் இந்தநூலின்கண் அவரோடு நன்கு பழகி உறவாடிய அன்புள்ளங்களின் வாயிலாகக் கிடைத்த அருமுத்துக்கள் தெளிந்தவானில் வெண்ணொளிபரப்பும் தாரகைகளாக மின்னொளி பரப்புவதனை வாசகர்கள் மனங்கொள்வர் என்பது எமது துணிபு.

அவரோடு மிகவும் நெருக்கமாகப் பழகும் அன்புள்ளம் படைத்த அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் கட்டுரை இந்த நூலுக்கு முத்தாய்ப்பாய் அமைகின்றது. எங்கு கண்டாலும் அன்பொழுக மிகவும் அன்னியோன்னியமாக சிரித்துப் பேசி மகிழும் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின் எழுத்து இன்பம் பயக்குமாற்றாய் அமைந்துள்ளது. அத்தோடு அவரை மனதார நேசிக்கும் அவரது அன்பர்கள், மிக நெருக்கமாகப் பழககியவர்கள் என்று பலரது கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

"He wanted to live life in such a way that if a photograph were taken at random it would be a cool photograph. Things should look right. Fun; there should be a lot of fun and no more sadness than absolutely necessary." -David Nicholls இன்பம் என்பதுபற்றி டேவிட் நிக்கலொஸின் மேற்கோள் கதிர் துரைக்கு ஏற்பவே சொன்னாரோ எனத் தோன்றுகின்றது. "இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு அது எங்கிருந்தபோதும் அதை நாடியோடு" என்று கண்ணதாசன் பாடிவைத்தமை எவ்வளவிற்கு பொருத்தமானது என்று எண்ணிப்பார்க்கும்போது தானும் இன்பத்தை அனுபவிப்பதோடு மற்றவர்களையும் அதற்குத் தூண்டுகின்ற ஒரு அன்பராகவே அவரைக் காணலாம்.

ஒளியைப் பரப்பி உலாவரும் கதிரவன் போன்று எம்மத்தியிலே பவனிவரும் கதிர் துரைசிங்கம் அவர்களைப் பற்றிய இந்த "கதிர் உலா" பல்வேறு வளங்களில் இருந்து திரட்டப்பட்ட பனுவலாக அமைந்துள்ளது எமக்கு மனத்திருப்தியையும் மகிழ்வையும் தருகின்றது. உங்கள் கரங்களில் தவழும் இந்தக் "கதிர் உலா" அன்பரின் வரலாற்றுச் சம்பவங்களை ஒட்டுமொத்தமாகத் திரட்டித்தரும் ஒரு ஆவணமாகும். இந்த ஆவணம் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று.

***த. சிவபாலு***

***எஸ். மதிவாசன்***

ரொறன்ரோ


# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

## "என்னுடன் கதிர்"

கதிர் துரைசிங்கம் அவர்களுடன் எனக்கு 20 வருடங்களிற்கும் மேலான நட்பு. அவர் கனடாவில் 25 வருடங்களாக வாழ்ந்து வருகிறார். என்னேடு பலர் நட்புடன் பழகிவருகின்றனர், இருப்பினும் அவர்களில் சிலருடைய நட்பை பெருமையாக கருதுவதுண்டு. அத்தகைய பெருமைக் குரிய நண்பனாக திரு கதிர் துரைசிங்கம் அவர்களைக் கருதுகின்றேன். திரு கதிர் அவர்கள் சிறந்த பண்பாளர் நகைச்சுவையுடன் சிந்திக்கவைக்கும் நற்கருத்துக்களை பகிர்து கௌ்வார். எனக்கு நல்ல நல்ல நண்பர்களை எல்லாம் அறிமுகம் செய்துவைத்தவர். ரொறன்ரோவில் சமூகப் பெரியேர்களாக இருப்வர்பகளுடன் எனக்கு நட்பை ஏற்படுத்தித்தந்தவர். என்னுடைய சமூகப்பணிகள் பலவற்றுக்கு ஆலோசகராக இருப்பவர். அனைவருடனும் நடுநிலையாக பக்கச்சார்பின்றி எவ்வாறு நட்புடன் பழகவேண்டும் என்ற சூத்திரத்தை கற்றுத்தந்தவர். தன்னுடைய கருத்துக்களை எங்கும் திணிக்காது நல்லது எது, தவிர்க்கவேண்டியது எது என தக்கதருணத்தில் சரியான முடிவுகளை எடுப்பதற்கு உதவுபவர். இவ்வாறு என்னுடன் கதிர் துரைசிங்கம் அவர்கள் இன்றுவரை நட்புடன் பழகிவருகின்றார்.

ரொறன்ரோ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்து வருகிறார். குறிப்பாக இந்துக் கல்லூரியினால் நடத்தப்படும் 'சிவத்தமிழ் விழா' நிகழ்ச்சியின் முக்கிய ஆலோசகராக விளங்குவதுடன் விழாவினை நேரக் கட்டுப்பாட்டுடன் நடத்துவதிலும் வருடம்தோறும் நடைபெறும் விழாவில் ஏற்படும் தவறுகளை சுட்டிக்காட்டி மறுவருடத்தில் அதனை சீர்திருத்தி விழாவினை மிகச்சிறப்பாக நடத்துவதற்கு மிகவும் உறுதுணையாக விளங்கிவருபவர். இங்குமட்டுமன்றி எங்கும் அவரை அன்பினால் அழைத்தாலும் அங்கெல்லாம்சென்று தன்னுடைய சமூக நற்பணியை மிகவும் பொறுப்பாகவும் சிறப்பாகவும் செய்துவருகின்ற சிறந்த "சமூக நற்பணித் தொண்டர்" திரு கதிர் துரைசிங்கம் அவர்கள்.

தன்னலம் கருதாது, உண்மை அறம் உரைத்து, தீயது நீக்கி, நற்பண்புடன், நட்பிற்கு இலக்கணமாக விளங்கும் கதிர் துரைசிங்கம் அவர்களின் "கனடாவில் 25 வருட" சமூகபணியினை கௌரவித்து நடைபெறும் பாராட்டு விழா சிறப்பாக நடைபெறவும், அவரது நற்பணிகள் தொடரவும் ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருவருளினால் சரீர தைரியம், மனத்தைரியம், நீண்டஆயுள், நோயற்ற வாழ்வு, குறைவற்ற செல்லம் பெற்று பல்லாண்டுகாலம் வாழ பிரார்த்தித்து நல்லாசிகூறி வாழ்த்துகின்றேன்.



**மேன்மை கொள் சைவ நீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகை செய்வோம்**

*"சிவாச்சார்யகலாநிதி"* *"சிவாச்சார்ய குலபூஷணம்"*

**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள்** (ஐயாமணி சிவம்)

ஆலயஸ்தாபகர், முதல்வர், பிரதமகுரு

**SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO**
**3025 KENNEDY RD. UNIT-10, SCARBOROUGH, ON. M1V 1S3 CANADA.**
**416.291.8500 www.vinaayagar.com**

# மேருபுரம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

**Merupuram Sri Bhatrakali Ampal Thevasthanam**
**1510 Birchmount Road, Scarborough,**

"அரிது அரிது மானிடராதல் அதனினும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல்" என்றார் தமிழ்ப் பெரு மூதாட்டியான ஔவையார். மானிடரப் பிறத்தல் என்பது ஜீவாத்மா முற்பிறப்பில் செய்த பாவ புண்ணிய பலனாலேயாகும். இவ்வையகத்தில் மானிடராகப் பிறப்பவர்கள் தாம் வாழும்போது இந்த உலகியல் வாழ்வோடு ஒட்டி வாழ்ந்து தமக்கும் தன்னைச் சார்ந்த சமூகத்திற்கும் நற்பணியாற்றவேண்டும் என்பது எமது மதம் முன்வைத்துள்ள நற்சிந்தனையாகும். இப்புவி வாழ்வைப் பெற்றுக்கொண்டவர்கள் எல்லோரும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்வது அரிது. அவ்விதம் பிறப்பெடுக்கும் ஜீவாத்மாக்களில் ஒரு சிலவே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களில் கூறப்பட்டுள்ள அர்த்தங்களைப் புரிந்துகொண்டு அதன்வழி நடந்து தமக்கும் தாம்சார்ந்த சமூகத்திற்கும் பயன் உள்ளவர்களாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள், அவ்விதம் வாழ்ந்து காட்டியும் வருகின்றார்கள். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதற்கமைய பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல் இந்த மண்ணில் நாம் என்ன செய்தோம் என்று மற்றவர்கள் சிந்திக்கத்தக்க வகையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதலே சிறந்த மார்க்கமாகும். எமது வாழ்க்கையைச் சீருற அமைததுக்கொள்வது மட்டும் ஒரு மனிதனுக்கு மன நிறைவைத் தந்துவிடாது. வாழும்போது நாம் யாருக்கு என்ன செய்தோம் என்பதிலேயே பூரண மன நிறைவு தங்கியுள்ளது.

திரு. கதிர் துரைசிங்கம் அவர்கள் தனக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் வாழ்ந்து வருபவர். அவருக்குப் பிடித்தமான துறையைத் தேர்ந்தெடுத்து அந்தந்தத் துறையிலே தனது உள்ளத்தைப் பதியவைத்து உண்மையுள்ளத்தோடு செயற்பட்டு வருபவர் அவர். "எம் கடன் பணி செய்து கிடப்பதே". என்பதனை அவரது செயற்பாடுகள் எடுத்துக்காட்டி நிற்கும். உதவி தேவைப்படுவோரின் தேவைகளை அறிந்து கைகொடுத்து உதவும் உயரிய பாங்கு அவரிடம் குடிகொண்டுள்ளமையை பல நிகழ்ச்சிகளிலும் கண்டுள்ளோம். அவரது பணியைப் பார்த்து வியந்துள்ளோம், மெச்சியுள்ளோம்.

ரொறன்ரோவில் உள்ள எமது தமிழர்களின் பல்வேறு அமைப்புக்களோடு தொடர்பு கொண்டு தன்னாலான பணியினை செய்து அந்தந்த நிகழ்வுகள் சிறப்பாக நிறைவேற முதுகெலும்பாக உதவுபவர் அன்பர் கதிர் துரைசிங்கம் என்றால் மிகையாகாது. தான் பொறுப்பாக எடுத்துக் கொண்ட பணியை நிறைவேற்றும் வரை மிகவும் உற்சாகத்தோடு செயலாற்றிவரும் பண்பு கொண்டவர். சினமோ, சீற்றமோ அவரின் முகத்தில் எப்போதுமே காணமுடியாதவை. தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், நெருக்கமானவர்கள், நெருக்கமற்றவர்கள் என்ற வேறுபாடின்றி எல்லோரையும் ஒரே சமமாக வைத்து மதிப்பவர். "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற குறளுக்கேற்ப அவர் யார் என்ன சொன்னாலும் அவற்றிற்குச் செவிமடுத்து அதன் வண்ணம் செயற்படுபவர். "உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது" என்பார்கள். அவ்விதமே கதிர் துரைசிங்கம் அவர்களின் உள்ளமும் தான் செய்யவேண்டிய கருமங்கள் ஏதும் இருந்தால் ஊன் உறக்கத்தைவிடுத்து உதவி செய்வதனை நாம் பாரதி கலைக்கோயில் நிகழ்ச்சிகளில் கண்டு கொண்டுள்ளோம். நீண்டநேர நிகழ்ச்சியாகவோ அன்றி, திறன்காண் நிகழ்ச்சியாகவோ இருப்பினும் ஒரு அங்கத்தவராகவே அவர் முன்னின்று செயற்படுவதினைக் காணமுடியும்.

அவரது பணி கனடா மண்ணில் ஏறத்தாழ இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்று வருவதினை யாவரும் அறிவர். அவரது சமூகப் பணியை நயந்து உவந்து அவருக்கு பாரதி கலைக்கோயில் எடுக்கும் இந்தப் பாராட்டுவிழா சாலவும் பொருத்தமானது. அவ்விதமே நண்பர்கள் சேர்ந்து அவரது சேவைகளை நினைவு கூர்ந்து பதிவாக்குவது பாராட்டிற்குரியது. ஒருவர் உயிரோடு இருக்கும்போதே கௌரவிக்கப்படவேண்டும், நன்றி தெரிவிக்கப்படவேண்டும் என்பதனை நன்கு உணர்ந்து கொண்டவர் பாரதி கலைக்கோயிலின் பணிப்பாளர் திரு. மதிவாசன் அவர்கள். அவர் மேற்கொள்ளும் இந்த அரும்பெரும் விழா சிறப்புற்று நிகழவும், திருவாளர், கதிர் துரைசிங்கம் அவர்களும் அவரது குடும்பமும் சீரோடும் சிறப்போடும் எல்லாப் புகழும் நலன்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல எமது அம்மை ஸ்ரீபத்திரகாளியை வேண்டி வாழ்த்துகின்றோம்.



*லிங்க சுரேஸ்வரக் குருக்கள்*
*லிங்க ரமேஸ்வரக் குருக்கள்*

உ
சிவமயம்

# சைவ சித்தாந்த மன்றம், கனடா

Saiva Sidhdhantha Manram, Canada - தோற்றம் (Established): 1-12-1995
1008-50 Elm Drive East, Mississauga, ON, Canada. L5A 3X2
Email: saivamanram@gmail.com Fax/Tel: (905) 566-4822

## சிவநெறித் தொண்டர் சிவத்திரு. கதிர் துரைசிங்கம் அவர்கள்

பாரதி கலைக்கோயில், சிவநெறித் தொண்டர் சிவத்திரு. கதிர் துரைசிங்கம் அவர்கள் கனடாவில் இருபத்தைந்து ஆண்டுகாலம் ஆற்றிய தொண்டு, சேவைகளைப் பாராட்டிக் கௌரவிக்க இருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அன்பர் துரைசிங்கம் அவர்களை 1963 இல் ஸ்ரீலங்காவில் குருநாகலில் கண்டு அறிமுகமானேன். அவர் குருநாகல் அரச பொது வைத்திய சாலையில் உதவி மருத்துவராகக் கடமை புரிந்து வந்தார். நான் அங்குள்ள புனித அன்ஸ் கல்லூரியில் ஆசிரியராக கடமை ஆற்றி வந்தேன். பின்னர் மீண்டும் கனடாவில் 1988 இல் சந்தித்தேன். மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். நைஜீரியாவில் நாங்கள் போர்ணோ மாநிலத்தில் இருந்தபொழுது, அவர்கள் சொகொற்றோ மாநிலத்தில் இருந்தனர். அங்கு நாம் சந்திக்க முடியவில்லை. அன்பர் துரைசிங்கம் அவர்கள் சிறந்த ஊடக, சமூக, சமயத் தொண்டர். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்த் துறைகளில் நல்ல ஈடுபாடும் இரசனையும் கொண்டவர். நாடக நடிகர், இயக்குநர், எழுத்தாளர் ஆக இயங்குபவர். ஊடக, சமய, சமூக, கல்லூரி பழைய மாணவர்சங்க விழாக்கள் போன்றவற்றில் அர்ப்பணிப்புடன் முன்னின்று உழைப்பவர். அவர் எல்லோருடனும் அன்புடனும் பண்புடனும் பழகுபவர். நகைச்சுவையாகப் பேசி எல்லோரையும் ஈர்ப்பவர். எல்லோருக்கும் உதவுபவர். எல்லோருக்கும் இனியவராக, மனிதநேயம் மிக்க தொண்டராக விளங்குபவர்.

சைவசித்தாந்த மன்றம், சைவசமயகுரவர் பாடசாலை, அன்புநெறி என்பனவற்றிற்கு திரு. துரைசிங்கம் அவர்கள் இந் நிறுவனங்கள் ஆரம்பமாகிய காலங்களிலிருந்து நல்லாதரவு நல்கி வருபவர். அவர் தந்தையார் சைவப்பெரியார் கதிர்காமத்தம்பி அவர்கள் போன்ற பல பெரியோர்களை எங்களுக்கு அறிமுகம் செய்து தரமான ஆக்கங்களை அன்புநெறி என்ற சஞ்சிகையில் வெளிவரச் செய்து வருபவர். அன்புநெறி சந்தாதாரர்கள் பலரை அறிமுகம் செய்து, அவர்களிடம் அன்புநெறிச் சந்தாவைப் பெற்று உதவுவதோடு, தாமே அவர்களுக்கு விநியோகமும் செய்து வருபவர். இதனை அவர் பல ஆண்டுகளாகச் செய்து வருகிறார். “தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.” சிவநெறித் தொண்டர் கதிர் துரைசிங்கம் அவர்கள் கனடாவில் இருபத்தைந்து வருட காலமாக ஆற்றிவரும் சிவதொண்டுகள் மேன்மேலும் சிறந்து விளங்கவும், அவரும் அவர் குடும்பத்தவரும் உடல் நலமும் உள நலமும் பெற்று, வளமுடன் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழவும், அருள்மிகு சிவகாமி உடனுறை அம்பலவாணர் திருவருளை மன, மொழி, மெய்களால் வணங்கி, என் குடும்பத்தினர் சார்பிலும், கனடா சைவசித்தாந்த மன்றத்தினர், சைவசமயகுரவர் பாடசாலையினர், அன்புநெறி திங்கள் இதழ் நிறுவனத்தினர் சார்பிலும் உளமாரப் போற்றி வாழ்க வாழ்க என வாழ்த்துகிறேன். “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் வாக்கிற்கு இணங்கத் தொண்டு புரியும் சிவதொண்டர் கதிர் துரைசிங்கம் அவர்கள் கனடாவில் இருபத்தைந்து ஆண்டுகள் ஆற்றி வரும் தொண்டுகளைப் பாராட்டி வெள்ளிவிழா எடுக்கும் பாரதி கலைக்கோயில் நிறுவனத்தினரைப் போற்றிப் பாராட்டி அவர்கள் பணிகளை உளமார வாழ்த்துகிறேன்.

***தி. விசுவலிங்கம்***

***தலைவர், சைவ சித்தாந்த மன்றம் – கனடா***

சிவமயம்

# பாராட்டு விழா சிறப்படைய வாழ்த்துகின்றோம்

இலங்கையின் வடபால் பசுமை நிறைந்த பன்னாலைக் கிராமத்தில் பிறந்த நண்பர் கதிர் துரைசிங்கம் அண்ணை இயல்பிலேயே இலக்கிய ரசனையும் நகைச்சுவை ரசனையும் மிக்கவர். இவரது தந்தையார் அமரர் கா.கதிர்காமத்தம்பி ஆசிரியர் எனது குருநாதர். எனக்கு வித்தியாரம்பம் செய்து வைத்த பெரியார். இன்று நான் சைவத் தமிழ் வாழ்க்கை வாழ்வதற்கு காரணமான சான்றோன். எனது அயல் வீடு என்பதனால் நாம் இருவரும் மிகுந்த அந்நியோன்னியமாக பழகினோம். நாம் மகாஜனாவின் மைந்தர்கள் என்று எண்ணும் போது பெருமிதம் அடைகின்றேன். எதையும் எதிர்பாராமல் உறவு கொண்டாடுவதே நட்பு. நாங்கள் காலத்தின் கட்டாயத்தால் பிறந்தமண்ணை விட்டு புலம்பெயர்ந்தாலும் எமக்கிடையிலான பாசப்பிணைப்பு என்றென்றும் தொடர்கின்றது. கனடா சென்றாலும் தமிழ்ப் பற்றும் இலக்கிய ரசனையும் சிங்கத்தை சும்மா இருக்கவிடவில்லை. சமுதாயத்திற்கு, இலக்கியத்திற்கு ஏதாவது வகையில் பணியாற்றிக்கொண்டே இருக்கின்றார். இது எமது மண்ணின் மகிமை.



ராம் விருது பெற்ற போது

எமது இளமைக்காலத்தில் வாழ்க்கையை பண்படுத்தி வளப்படுத்திய பன்னாலைக் கிராமத்தையும், மகாஜனக் கல்லூரியையும் எண்ணிப்பார்க்கின்றேன். எனது நண்பர் கதிர் துரைசிங்கம் அண்ணை அவர்கள் கிராமத்தின் முன்னேற்றத்திற்கு ஆற்றிய பணிகள் எண்ணற்றவை. நகைச்சுவையாக பல கவிதைகளை வரகவிபோல் சொல்லி எம்மை எல்லாம் மகிழ்விப்பார். இன்றும் அப்படித்தான். மற்றவர்கள் மனம் கோணாமல் ஒரு விடயத்தை எடுத்துச்சொல்லி செய்விக்கும் ஆற்றல் மிக்கவர். இப்படி பல நற்குணங்களையும், சமூக சிந்தனையையும் தன்னகத்தே கொண்ட எனது ஆருயிர் நண்பனுக்கு பாராட்டுவிழா எடுப்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் தருகின்றது. எமது மணிவிழா இலண்டனில் நடைபெற்றபோது வந்து வாழ்த்துக்கூறி மகிழ்ந்து எம்மையும் மகிழ்வித்த பெருந்தகை.

இவ்விழாவை ஏற்பாடு செய்த விழாக்குழுவினருக்கு எனது பராட்டுதலையும் பசுமையான நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நண்பர் கதிர் துரைசிங்கம் அண்ணை தம்பதியினர் எல்லா நலன்களும் பெற்று இன்னும் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல எமது குலதெய்வமான பன்னாலை மயிலை ஞானவைரவரைப் பிராத்திக்கின்றேன்.

அன்புடன்,

***வ. இ. இராமநாதன் (பவா)***

***பிரித்தானியா***

# எளிமை நிறைந்தவர்

கதிர் துரைசிங்கம் அவர்களின் கலைத்துறை ஈடுபாடும், அதிலும் சிறப்பாக நாடகத் துறையில் அவரின் நேரடிப் பங்களிப்பும் நம்மில் பலர் அறிந்ததே. கதிர் துரைசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற மகாஜனாக் கல்லூரியின் தலைசிறந்த மாணவர்களில் ஒருவர் என்பது கல்லூரி சார்ந்த வட்டத்தில் பலருக்கு தெரியும். கதிர் துரைசிங்கம் அவர்களின் மருத்துவத்துறை பின்புலத்தினையும் ஒரு சிலர் அறிவர். தன் கல்லூரியில் படிப்பித்த ஆசிரியருக்கே திருமணம் பேசி முடித்து வைத்த பெருமையும் இவருக்கு உண்டு.

யான் அறிந்த கதிர் துரைசிங்கம் இந்த எல்லா அம்சங்களுக்கும், அறிமுகங்களுக்கும் அப்பாற்பட்டு நிற்பவர். எப்போதும் இனிய புன்முறுவலுடன் கூடிய முகத்துடன் எளிமையாக கதைத்துப் பழகுவார். எந்தவித பரபரப்போ, ஆடம்பரமோ இன்றி எளிமையாக வந்து கலை மற்றும் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்பவர். மொத்தத்திலே அவர் ஒரு பண்பான மனிதர்.

புறநானூறு கூறும் "ஆன்று அவிந்த கொள்கைச் சான்றோர்" என்ற வரிகளுக்கு முன்னுதாரணமாக விளங்கும் இவருக்கு பாராட்டு விழா நடப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் மேலும் பல்லாண்டு காலங்கள் சீரும் சிறப்புடன் வாழ்ந்து, எமது சமூகத்துக்கு மேலும் தனது பங்களிப்பினை வழங்க வேண்டும் என்று கூறி எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றேன்.

*வைத்திய கலாநிதி. இ. லம்போதரன்* MD.



வரசித்தி விநாயகர் ஆலயம் வழங்கிய சமூக நற்பணித் தொண்டர் விருது பெற்றவேளை

# சமூகத்தின் மேன்மைக்காய் கடந்த 25 வருடங்களாய்த் தொண்டாற்றிய வெள்ளிவிழா நாயகன் திரு. கதிர் துரைசிங்கம் பாராட்டுப் பாமாலை

கதிர்காமத் தம்பி துரைசிங்கம் தொண்டை
மதிக்கும் சமூகமெலாம் மாண்பாய் - பதிக்கவெண்ணி
வெள்ளி விழாவெடுத்து வாழ்த்தியே போற்றுசெய்தி
உள்ளம் உவக்கச் செய் ஓர்ப்பு

அன்பர்கள் பார்வையிலே ஆருக்கும் சென்றுதவி
நன்மைபல ஆற்றுகின்ற நற்கதிரை - என்றுமே
நண்பர் மகாஜனர்கள் நன்கறிந்தோர் வாழ்த்துக்கள்
பண்பார் பெரும்நற் பரிசு.

உள்ளம் எழுத்தாக ஓர்ந்து நகைச்சுவையை
தெள்ளத் தெவிட்டும் தமிழாலே - வெள்ளச்
சிரிப்பாக்கிச் சிந்தனையைத் தூண்டும் கலைஞர்
உரித்துடையார் ஓங்கு கலைக்கு.

தந்தை அதிபரே! தாரமே பூமணியே!
சந்ததமும் சாற்றும் சமாதானம் - எந்நாளும்
இன்சிரிப்பில் வாழ இதயத்தால் வாழ்த்துதும்மே
நன்றியுள்ள நண்பர் நயந்து.

செய்தொழிலே முந்நாள் மருத்துவமே ஆகியது
கொய்கனியோ சால்சமுகத் தொண்டாமே - ஆய்ந்தால்
பண்டையநிலை மாறாப் பழந்தமிழ் வாழ்வியலை
நண்ணுமிவர் நட்பின் நயம்.

பார்வையிலே பண்பும் பழகுகின்ற நல்லுறவும்
ஆர்வநட்பு ஆக்கும் அருங்குணமும் - தேர்ந்து
இறையாசி வேண்டுகிறோம் இல்லறத்தில் நீவிர்
நிறைமாட்சிப் பேறு பெற.

என்பேனா இந்நல்லார் இன்வாழ்த்து ஈட்டவே
நன்றாய் எழுதியதே நம்மெண்ணம் - பண்பாம்
துரைசிங்கம் வாழ்க! பாரியாரும் வாழ்க!
வரையில் வளம்பெறவென் வாழ்த்து.

*பண்டிதர். மா. சே. அலெக்ஸ்சாந்தர்*

# சம்பியா நண்பர்களின் வாழ்த்து
## துரைசிங்கம்

வரையற்ற மக்கள் சேவை மாறாத உன் அன்பு
உரைக்க முடியவில்லை வெறும் வார்த்தைகளால்
உன் உத்தம சேவைகளை!

பிணி தீர்க்கும் பணியில் துணைவி பூமணியும்
தூணாக முன்னின்றாள் உன் அணியில் அந்த
உத்தமிதன் சேவையும் உத்தமமே!

நேர்மை தவறாத நெறியாளன் நல்ல பண்பாளன்
ஆர்வமும் அயராத உன் உழைப்பும்
ஊர் போற்றும் என்றும் ஊர் போற்றும்

பக்கத் துணையாய் சிவனும் இருந்ததனால்
மக்கள் சேவையே மகேசன் சேவையென
உத்தமனாய் சேவை செய்தாய் துரைசிங்கமே
வாழ்க உன் பணி! என்றும் வளர்க உன் பணி

சம்பியாவில் நாம் வாழ்ந்த காலத்து நினைவலைகள்
இம்மண்ணில் நீடிக்க நீயும் இணைந்து பலபணிகள்
எம்மோடு இருபத்து ஐந்தாண்டுகள் ஆனதுவோ?
எம்மால் நம்பமுடியவில்லை நண்பா உன்னன்பு

*உன்பணியால் பயனுறும்*

*கனடாவாழ் சம்பியாவில் பணிபுரிந்த இலங்கையர்*
Zambian Sri Lankan Friends Association



வைரவிழாவில் சம்பியா நண்பர்களுடன்

# கலைஞர் கதிரை 'கவின் கலாலயா' பாராட்டுகின்றது.

கலகலப்பை எப்போதும் சுமந்தே திரிபவர்
களிப்பை மனங்களில் விதைத்தே மகிழ்பவர்
கடமை உணர்வோடு தொண்டுகள் புரிபவர்
காய்தலின்றி கருமங்கள் செய்பவர்

சூரியன் உறக்கம் கலையும் முன் எழுபவர்
வீரம் மிக்கதாய் வேலைகள் முடிப்பவர்
ஈரமும் இனிமையும் கருணையும் நெஞ்சிலே
இடரினில் துடிப்போர்க்கு உதவிடத் துடிப்பவர்!

நாடகம், வில்லிசை நயந்தே இயற்றுவார்!
நடிப்பிலும் திறமைகள் காட்டியே இயக்குவார்
திரைப்படக் கலைஞராய்த் திறம்படத் துலங்குவார்
எங்கள் "உறவு" சினிமாவில் அரச அதிபர் இவர்
இதைவிடச் சிறப்பாய்ச் செய்திட எவர் உளர்?
பார்த்தவர் இவர் திறன் நயந்தே வியந்தனர்.

கண்ணியம் மிகுந்தவர், களைக்கா நெஞ்சினர்
எளிமை, இனிமை இரண்டும் இணைந்து
களிப்பாய் கடமை ஆற்றும் வல்லவர்
எல்லாம் நிறைந்த சமூக மருத்துவர்
கதிர் துரை சிங்கம் எனும்கலைஞனை
கவின்கலாலயா வினர் வாழ்துகிறோம்!

*அன்பின் நெகிழ்வுடன்*
*வைரமுத்து திவ்வியராஜன்*



பாரட்டு வைபவம் ஒன்றில்

# மணிக்கு மணிப்பொருளாக வாழும் கதிர் துரைசிங்கம்

கதிர் துரைசிங்கம் என்ற பெயருக்கு மணிக்கதிர், மணித்துளி என்று புதுப்பொருள் கொள்ளலாம். விழாக்களுக்கு முக்கியமானது இந்த மணித்துளிகளே!

வெற்றிமணிக்கும் கதிர் துரைசிங்கம் அவர்களுக்கும் 1999 முதல் தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பு ஏற்பட்ட நாள் முதலாய் வெற்றிமணியும் ஏற்றம் பெற்றது. காரணம் எத்தகைய சேவை என்றாலும் முழுமனதோடும் முழுமூச்சோடும் இதில் ஈடுபடும் அருங்குணம் படைத்தவர் அவர்.

அவரை நம்பி எந்த நாட்டிலும் எந்த விழாக்களுக்கும் ஒழுங்குப் பொறுப்பினை ஒப்படைக்கலாம். 2008ஆம் ஆண்டு யேர்மனியில் நடைபெற்ற வெற்றிமணி விழாவினை பொறுப்பேற்று நெறிப்படுத்தினார். அத்தோடு கனடாவில் இருந்து பாரதி கலைக்கோவில் இசைக்கலைஞர்களையும் அழைத்து வந்து விழாவினைச் சிறப்பித்தார்.

விழா 3:28க்கு ஆரம்பமானது. சரியாக விழா 9:58 க்கு நிறைவு பெற்றது. அழைப்பிதழில் 3:28 என்று இருப்பதைப்பார்த்த மக்கள் "என்ன வெற்றிமணி விழா முகூர்த்த நேரம் அதுவோ" எனக் கேட்டனர். ஆம். தமிழர்கள் விழாக்களையும் குறித்தநேரத்தில் ஆரம்பிக்கப் பழகவேண்டும். குறித்த நேரத்தில் ஆரம்பித்தால் அது விழாவிற்கு சுபநேரம்தான் என்று பதில் கொடுத்தார் கதிர் துரைசிங்கம் அவர்கள். அவரது பேச்சில் நகைச்சுவை இருக்கும். அதற்கு மேலாக பல பொன்னான மணிக் கருத்துக்கள் தெறிக்கும். இதனை அவதானித்த நான் "காதோடு காதாக" என்னும் தலைப்பில் வெற்றிமணியில் சில துணுக்குகளை வெளியிட்டேன். அவற்றை 2005 ஆண்டு சிறு நூலாக்கி "காதோடு காது" என்னும் பெயரில் வெற்றிமணி வெளியீடு செய்தது.

அவரது முதலாவது நூலை வெளியிட்டதில் வெற்றிமணி மகிழ்வு கொண்டது. இன்று கனடாவில் 25 வருட கலைச்சேவை செய்த கலைக்கதிர் டாக்டர். துரைசிங்கம் அவர்களுக்கு பாரதி கலைக்கோவில் விழா எடுப்பது அறிந்து மட்டற்ற மகிழ்வு கொள்கின்றேன். அவரது பணி சிறக்க வெற்றிமணி - சிவத்தமிழ் - யாழ் - வெற்றிமணி யாவும் இணைந்து மணிஒலி எழுப்பி கதிர் துரைசிங்கம் அவர்களை வாழ்த்துகின்றது.

மணிக்கு மணிப்பொருளாக வாழும்
கதிர் துரைசிங்கம் வாழ்க!

*என்றும் தமிழுடன்*
*மு. க. சு. சிவகுமாரன்*
*ஆசிரியர்: வெற்றிமணி – சிவத்தமிழ்*
*யேர்மனி*



வெற்றிமணி சிவகுமாரனின் பாராட்டுவிழாவில்

# 'நம்பர் வண்' நண்பர் கதிர் துரைசிங்கம்


பல வருடங்களுக்கு முன்னர் இந்த கனடிய மண்ணை நோக்கிய எங்கள் பயணங்களை மேற்கொண்ட நாம், எம்மிடமிருந்து பலவற்றை இழந்தவர்களாகவே இங்கு கால்பதித்தோம். சொத்துக்களை இழந்தவர்கள்.., அரசுப் பதவிகளை உதறித்தள்ளியவர்கள்.., இராணுவத்தின் கோரப்பிடிக்கு தங்கள் உறவுகளைப் பறிகொடுத்தவர்கள்.., தங்கள் அறிவின் சொத்தாக சேகரித்து வைத்த அரிய நூல்களை அக்கினிக்கு இரையாக்கியவர்கள்.. என எங்கள் ஒவ்வொருவரோடும் சோகங்களும் சேர்ந்து இந்த தேசத்தை அடைந்தன.

இவ்வாறு பலவற்றை பறிகொடுத்தவர்களாக இந்த கனடிய தேசத்தில் நமது வாழ்வைத் தொடருவதற்கு வந்த நாம், இங்கு எவற்றைப் புதிதாய்ப் பெறப்போகின்றோம் என்ற எதிர்பார்ப்புக்கள் எதுவுமின்றி, ஒவ்வொரு காலைப்பொழுதையும் வரவேற்கத் தொடங்கினோம். இரவும் அதனோடு இணைந்து இருட்டும் தினமும் தோன்றி எம்மை திணற வைத்தாலும் ஒவ்வொரு காலைப் பொழுதும் தொடர்ந்து வரும் அந்த நாளின் கணங்களும், படிப்படியாய் நமக்கு புதிதான பல விடயங்களை தேடித் தரத்தொடங்கின.

புதிய தேசத்தில் புதிதான வாழ்வில் பல வாய்ப்புக்கள் கிட்டியது போன்று நமக்கு சில நல்ல நண்பர்களும் கிடைத்தார்கள். பொதுவாகவே நமக்கு நண்பர்கள் கிடைப்பது, வெவ்வேறு தளங்களிலிருந்துதான். வர்த்தகம், கலை இலக்கியம், அரசியல், பொதுச்சேவை, ஏன் மது பரிமாறப்படும் மேசைகளிருந்தும் நண்பர் இணைந்து கொள்வதுண்டு. இவற்றில் எவ்வாறான தளங்களிலிருந்து நம்மோடு இணையும் நண்பர்கள், தமது நட்பைத் தொடருவார்கள் என்பதும் ஒரு கேள்விக்குறியாக இருந்தாலும், எனக்கு கலை இலக்கியம், மற்றும் பொதுச்சேவை போன்ற துறைகளில் கொண்ட ஈடுபாடு வழங்கிய நட்புத்தான் மிகவும் விருப்பத்திற்குரிய ஒன்றாக தோன்றியது. இவ்வாறு நான் விரும்பி ஏற்றுக்கொண்ட நட்பிற்கு உரித்தானவர்தான் திரு. கதிர் துரைசிங்கம் ஆவார்.

இருபது வருடங்களுக்கு முன்னர் நான் நண்பர் கதிர் துரைசிங்கத்தை முதன் முதலில் சந்தித்தேன். அப்போது அவர் எனக்கு நெருங்கிய நண்பர் அல்ல. பல கலை இலக்கியக் கூட்டங்களிலும், பொதுச்சேவை தொடர்பான வைபவங்களிலும், அவரை நான் கண்டு புன்னகைப்பது உண்டு. ஆனாலும் முதலில் புன்னகையை "உதிர்த்தது" யார் என்று எனக்கு ஞாபகம் இல்லாவிட்டாலும், நிச்சயமாக அது அவராகத்தான் இருக்கும் என்று நான் இன்றும் நம்புகின்றேன். காரணம் அவரது பண்பு பற்றி தெரிந்ததும் தெளிந்ததுமான எனது அனுபவம் அந்த நம்பிக்கையை எனக்குத் தருகின்றது.

நாம் வாழும் கனடாவில் வருடத்தில் அரைவாசி நாட்கள் தான் எம்மீது சூரியக் கதிர்கள் பட்டுத் தெறிக்கும். அதுவும் சில வேளைகளில் நமது மேற்தோல்களைச் சுட்டெரித்து வாட்டும். ஆனால் எம்மைப் போன்ற நண்பர்கள் மத்தியில், குளிரோ, வெயிலோ, கோடையோ, மழையோ எப்போதும் எம்மோடு தனது நட்புக் கதிர்களை வீசி நிற்கும் நல்லதோர் பண்பாளர் திரு. கதிர் துரைசிங்கம் என்று எம்மில் பலர் குறிப்பிடுவதை நான் பல தடவைகள் செவிமடுத்துள்ளேன்.



இயக்குநர் விருது -
"என்னத்தைச் சொல்லி"

எனது பத்திரிகைத்துறையிலான ஈடுபாடு மற்றும் கலை இலக்கிய பங்களிப்பு போன்ற விடயங்களை மரியாதையோடு அங்கீகரிக்கின்ற ஒர் அன்பராகத்தான் நான் அவரை முதலில் அடையாளம் கண்டேன். ஒரு தீவிரமான கலை இலக்கியப் படைப்பாளியாக அவர் இல்லாவிட்டாலும் இலக்கியவாதிகளை அவர்களது படைப்பின் தரம் மற்றும் பண்பின் அடையாளம் போன்றவற்றை மிகவும் நேர்த்தியாகக் கணித்து நட்புக் கொண்டாடும் கதிர் துரைசிங்கத்தின் கனதியை நான் அன்றே அறிந்துகொண்டேன். இதனால் நான் அவரோடு அன்றும் இன்றும் மிகவும் அவதானத்தோடுதான் பழகிவருகின்றேன்.

நாங்கள் வாழுகின்ற கனடிய மண்ணில் எல்லாமே தேவைக்கு அதிகமாக உள்ளன. இன்னும் விபரமாகக் கூறுவதானால், நமக்கு எது தேவையோ அவை எண்ணிக்கையில் இங்கு அதிகமாக உள்ளன. பலசரக்கு கடைகளாக இருக்கட்டும், ஆலயங்களாக இருக்கட்டும், ஆலயங்களின் அந்தணப் பெருமக்களாக இருக்கட்டும், நடிகர்களாக இருக்கட்டும், பேச்சாளர்களாக இருக்கட்டும், வீடு விற்பனை முகவர்களாக இருக்கட்டும், எல்லா வகையினரும் நூற்றுக்கணக்காக நம் மத்தியில் நடமாடிக்கொண்டே உள்ளார்கள். ஆனால் உண்மையான நட்புக்கு ஓரிருவரை அடைவதே அபூர்வம். இதே போன்றுதான் பொது விடயங்களில் "தூரத்தே" நிற்காமல் "அருகில்" நின்று, எவ்விதமான சுயநலம் கருதிய நோக்கும் இன்றி உதவிகளை நல்கும் அன்பர்களைத் தேடினால் அவ்வாறானவர்கள் ஓரிருவரை அடையாளம் கண்டுகொள்வதே


மிகவும் கடினமான விடயம். ஆனாலும் மேற்கூறிய இரண்டு வகையான பண்புகளையும் தனக்கே உரிய அணிகலன்களாகக் கொண்டு நம் மத்தியில் உலாவரும் நண்பர் கதிர் துரைசிங்கத்தை போன்றவர்களும் ஓரிருவர் தான் நம்மத்தியில் உள்ளார்கள் என்பது எனது இருபது வருட அனுபவம், கனடாவில் எனக்கு கற்றுத் தந்த பாடமாகும்.

உதவிகள் செய்தல், ஆதரவு வழங்குதல், அன்பைத் தருதல், தேவையான நேரத்தில் அருகில் நின்று நமது சுமையின் பாரத்தை பகிர்ந்து கொள்ளல், விசேட தினங்களில் அன்பையும் அக்கறையையும் தகுந்த நேரத்தில் காட்டுதல் போன்ற விடயங்கள் எப்போதும் ஒரு வழிப்பாதையாய் அன்றி இருவழிப்பாதையாய் இருத்தல் அவசியம் என்று நான் எப்போதும் நம்புகின்றவன். அவ்வாறான ஒரு போக்கை என்னால் முடிந்தளவிற்கு கடைப்பிடிக்க முயற்சி செய்கின்றவன். ஆனால் எனது பார்வையில் மேற்கூறிய அனைத்து விடயங்களிலும் ஒரு வழிப்பாதையோ அன்றி இருவழிப் பாதையோ அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், தனது கடமையை தவறாது ஆற்றி வருகின்ற ஓரிருவரில் நண்பர் கதிர் துரைசிங்கம் தான் "நம்பர் வண்" என்று நான் துணிந்து கூறுவேன்.

எனது பத்திரிகை நிறுவனம் நடத்துகின்ற வருடாந்த விழாக்கள் மற்றும் சிறு வைபவங்கள் அனைத்திலுமே அவரது பங்களிப்பு இன்றி நிகழ்ந்தவை ஒன்று கூட இருக்க முடியாது. வெளியில் உள்ளவர்கள் சிலவேளை எண்ணலாம், உதயன் பத்திரிகையோடு நெருக்கமான நட்பை வைத்துக்கொண்டு, பல நன்மைகளை நண்பர் கதிர் துரைசிங்கம் அடைகின்றார் என்று. ஆனால் உண்மை ஒன்றுதான். நண்பர் கதிர் துரைசிங்கம் எனது உதயன் பத்திரிகையினால் அடைந்த நன்மை ஒன்றாக இருந்தால், உதயன் பத்திரிகை நிறுவனமும் நானும் அவரது பக்கத்துணையினால் அடைந்த நன்மைகள் நூறு அல்ல ஆயிரம் என்று "அடித்துக்" கூறுவேன். வயது எழுபதைக் கடந்தாலும், இன்னும் உற்சாகமான ஒரு இளைஞனாகவே தன்னை கணித்தபடி எங்களோடு உறவாடி வரும் அவருக்கு மேலும் மேலும் பாராட்டுக்கள் குவிய, எனது குடும்பத்தின் சார்பிலும் "உதயன்" குடும்பத்தின் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

***ஆர். என். லோகேந்திரலிங்கம்***

***பிரதம ஆசிரியர், கனடா உதயன்***



40வது திருமணநாள் கொண்டாட்டத்தில் குடும்பத்தினருடன்

# நட்பின் திலகம்

நண்பர் கதிர் துரைசிங்கம் அவர்களது கனடிய மண்ணின் கால் நூற்றாண்டுப் பணிகளை வியந்து எடுக்கப்படும் பாராட்டு விழாவின் நீண்ட நினைவுப் பரிசாக வெளியிடப்படும் மலரில், அவர் பற்றியதாக எழுதுவது மனதை மலரச் செய்து மகிழ்ச்சி ஊட்டுகின்றது.

தோற்றத்தில் உயர்ந்தவர் மனதாலும் செயலாலும் கூட.

பேச்சிலும் எழுத்திலும் சுவையானவர். அங்கு "நகை" குலுங்கும்.

எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும்வரை தூங்க மாட்டார். கண் துஞ்சாத் தொண்டர்.

நட்பைப் பேணவும் பழகவும் இனியவர். நட்பின் திலகம் இவர்.

பெரியாரைக் கனம் பண்ணவும், சிறியோரை அரவணைக்கவும் தெரிந்த நல்லவர். பிறப்பால் வந்த பண்பு இது.

இவைகள் பற்றி இம்மலரில் பலர் நிச்சயம் எழுதியிருப்பர். எனவே சொல்லப்பட்டவை சொல்வதை தவிர்க்கிறேன்.

எனது நீண்டகால நண்பராகவிருந்த விமலச்சந்திரனால் (கலிபோர்னியா) காலமறிந்து தரப்பட்ட பரிசு நண்பர் கதிர் துரைசிங்கம் என்று சொல்வதில் உண்மையில் அகமகிழ்கின்றேன். எங்கள் நட்புக்கு அகவை இருபதாகப் போகின்றது. இன்று எங்கள் குடும்பத்தில் அனைவருக்குமே இவர் விருப்புக்குரிய அன்பர்.

இவருடனான நட்பு மிகவும் வலிமையானது, இறுக்கமானது, நீண்ட தொடர்பை உருவாக்குவது. இவரது பெற்றோரின் திருமண சஷ்டியப்த பூர்த்தி (1998) மலரைத் தயாரிக்கும் பொறுப்பை என்னிடம் தந்தபோது அந்த வலிமையைப் புரிந்து கொண்டேன். 2000ஆம் ஆண்டில் நண்பரின் அகவை அறுபது மணி விழா மலரை அவரது அனுமதி பெறாமலே தயாரிக்கும் பணியை நான் பொறுப்பேற்றபோது, அதே நட்பின் ஆழத்தைப் புரிந்து கொண்டேன்.

"தமிழர் தகவல்" வெளியீட்டுக் குழுவின் மூத்தவர்களில் ஒருவராக விளங்குகின்றார். இதனூடான தன்னார்வச் சேவைக்காக ஒன்ராறியோ அரசின் விருது 2001ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டது. 2007ஆம் ஆண்டு கனடாவின் 140வது பிறந்ததின விழாவின்போது இவரது சமூகப் பணிகளுக்காக தமிழர் தகவலின் சிறப்பு விருதுடன் தங்கப்பதக்கமும் சூட்டி மதிப்பளிக்கப்பட்டார்.

நண்பர் தொடர்பான சில முக்கிய அம்சங்களை இங்கு எழுதத் தவறினால் எனது மனதில் குற்றவுணர்வு நீளும்.

பிரித்தல் என்பது இவருக்குத் தெரியாதவைகளில் முதலாவது. எவரொருவர் பற்றியும் இன்னொருவரிடம் 'சிண்டு' முடிந்து அவர்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்க இவருக்குத் தெரியாது.

பெருக்கல்கூட இவருக்குத் தெரியாதுதான். ஒருவர் கூறும் விடயத்தின் மறுபக்கத்தை ஊதிப் பெருப்பித்து இருவருக்கிடையே கலகத்தை ஏற்படுத்த விரும்பாதவர்.

கழித்தல் என்பதை தமது வாழ்வில் கழித்துவிட்டு வாழும் அற்புத மனிதர் இவர். நல்லதை நினைப்பது, நல்லதை அறிவது, நல்லதைச் செய்வது என்னும் நற்பண்புகளின் பயனாக "கழித்தல்" இவரிடம் இணைய முடியாமற் போயிற்று.

கூட்டலில் இவர் வல்லவர். தமது நண்பர்களை மற்றவர்களுக்கும் அறிமுகமாக்கி, அந்தக் கூட்டத்தை அகலிப்பதில் கைதேர்ந்தவர். இதனால் அடையும் மகிழ்ச்சியிற் திளைப்பது இவரது உயரிய மாண்புகளில் முதன்மையானது.

இவரிடமில்லாத இரு"மை"களையும் குறிப்பிட வேண்டும். அவை முதுமை, இயலாமை.
இன்னும் இரண்டு ஆண்டுகளில் வரவிருக்கும் நண்பரின் எழுபத்தைந்தாவது பிறந்தநாள் மலருக்கும் கட்டுரை எழுத வேண்டுமல்லவா? எனவே இப்போதைக்கு இவை போதும்!
அன்பு மனைவி, ஆசைப் பிள்ளைகள், நேசமான மருமக்கள், பாசமுள்ள பேரக் குழந்தைகளோடு நண்பர் கதிர் துரைசிங்கம் நீடு வாழ்ந்து, தாம் பெறும் இன்பங்களை எமக்கும் தந்து மகிழ்விக்க இறையருள் கிடைக்க வேண்டுகிறேன்.

*திரு எஸ். திருச்செல்வம்*

*முதன்மை ஆசிரியர்*

*தமிழர் தகவல் – கனடா*

# நன்மையை உழுது அன்பை விதைப்பவர் நண்பர் துரைசிங்கம்

தீமையை நன்மையென்றும் நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமாயும் வெளிச்சத்தை இருளுமாயும் பாவித்து, கசப்பை இனிப்பென்றும் இனிப்பைக் கசப்பென்றும் சாதிக்கின்ற மனிதக் கூட்டத்தின் நடுவே மெழுகுதிரியாக வாழுகின்ற ஒரு மனிதர்தான் நண்பர் கதிர் துரைசிங்கம்.

வானத்தை அண்ணாந்து பார்க்கின்றவர்கள் மத்தியில் முகத்தைக் கூர்ந்து பார்த்துப் பேசும் மனிதர் இவர்.

நட்புக்கு சிறந்த நிலை என்பது, எப்போதும் வேறுபடுதல் இன்றி முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கி நிற்பது. வள்ளுவன் வாக்குக்கமைய ஒருவரைப் பார்க்க முடியும் என்றால் என்னைப் பொறுத்தமட்டில் அவர் நண்பர் கதிர் துரைசிங்கமேதான்.

"இவர் எமக்கு இத்தன்மையானவர், நாம் இவர்க்கு இத்தன்மையுடையோம்" என்று எண்ணினாலே நட்பு சிறப்பிழந்து விடும் என்றும் திருவள்ளுவர் சொல்கின்றார். நண்பர்களுக்காக, கைம்மாறெதுவும் எதிர்பார்க்காமல், தானாகவே எல்லா இடங்களிலும் ஓர் அணியைப் போல நிற்கின்ற நண்பர் துரைசிங்கம் அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

பிறருக்காக வாழ்வது என்பது ஒரு கொடை. இதை நாம் இவரிடம் இருந்து கற்றுக்கொள்வோம்.

அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள் அதையே அறுவடை செய்கின்றார்கள். கோபம் எம்மைக் கொல்லும். பொறாமை எம்மை வதம் செய்யும்.

நண்பர் துரைசிங்கம் நன்மையை உழுகின்றவர். அன்பை விதைப்பவர். நன்மையும் அன்பும் நிறைந்த அறுவடை அவருக்காகக் காத்திருக்கின்றது.

*டி. ஜெ. டிலிப்குமார்*
*தாய்வீடு*

Thaiveedu
P.O. Box 63581, Woodside Square,
1571 Sandhurst Circle,
Toronto, ON
M1V 1V0



சமூக சேவை விருது பெற்ற வேளை



நூல் வெளியீட்டில் பதிலுரை யாற்றியவேளை

# இருவரும் ஒன்றாகவே பிரயாணிக்கிறோம்

பாடசாலையில் வகுப்பறை எப்படி இருக்கும் என்பதை ஐந்து வருடங்களின் பின்னர் அன்று தான் முதன்முதலாக அனுபவ இரீதியாகக் காண்கின்றேன். பன்னிரண்டாம் வகுப்புத்தான் நான் மகாஜனாவில் முதலில் அடிவைத்த வகுப்பு. முன்வரிசையில் நான்கு பெண்கள். அவர்களுக்குப் பின்னர் 12 ஆண்கள். ஸ்கந்தவரோதயாவில் இரசாயன ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. V. T. கந்தசாமி எனது நண்பர். உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு எவ்விதம் பாடம் எடுக்க வேண்டும், அவர்களை எவ்விதம் கையாள வேண்டும் என இரண்டு நாட்கள் பாடம் எடுத்த பின்னரே என்னை மகாஜனா செல்ல வைத்தார். முதல் நாள் வகுப்பினில் பாடம் எடுப்பதாயில்லை. மாணவர்களுடன் பரிச்சயப் படுத்தும் நேரமாக அமைந்தது. கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்தவர்கள் கொஞ்சம் இடக்கரடக்குத் தனமாகப் பேசினார்கள். அவர்களில் நடுநாயகமாக அமைந்திருந்தவர் பின்னாளில் எனது தோழராய் பல்துறைகளிலும் எனக்குத் தோள் கொடுத்தவர். அவர்தான் அந்த வகுப்பினரின் அங்கீகாரம் பெற்ற தலைவராக இருக்க வேண்டும். ஒத்தவயதுடையோர் குழுவிலே ( Peer Group) தலைமைத்துவம் ஏற்பதற்கெனச் சில பண்புகள் வேண்டும். சண்டித்தனம் அல்லது சமயோசிதம், நகைச்சுவையுணர்வு, சாதுரியம், அரவணைத்துச் செல்பண்பு போன்ற தலைமைத்துவப் பண்புகளை அவர் சிறந்த அளவினுக்குக் தன்னகத்தே கொண்டிருந்தார் என்பதை நான் காலகதியில் அனுபவரீதியாக வெகுவாக உணர்ந்தேன். ஆச்சரியப்பட்டேன். தோளுக்கு மிஞ்சிவிட்டார், ஆகவே தோழனாகினார்.

இரண்டாவது நாளே அந்த வகுப்பு மாணவர்களும் நானும் மிகச் சகஜமாகப் பழகத் தொடங்கி விட்டோம். வகுப்பின் உள்ளே மாத்திரம் நான் ஆசிரியர், வெளியே அவர்களின் உற்ற நண்பன். எனது பட்டப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்ததும் தங்கள் யாபேரையும் திரைப்படத்திற்கு அழைத்துச் சென்று ஒரு விருந்துபசாரமும் செய்ய வேண்டும் என்றனர். அவர்தான் இந்தக் குழுவினது அங்கீகாரம் பெற்ற தலைவராக இருந்தார். எனவே அவர் மேலும் இருவருடன் என்னிடம் வந்து எல்லோர் சார்பிலும் என்னிடம் கோரிக்கையை வைத்தார். நான் சம்மதித்ததன் பேரில் எல்லோருமாக ஒரு சனிக்கிழமை யாழ்ப்பாணம் சென்றோம். திரைப்படம் எனக்கு ஞாபகத்திற்கு வரவில்லை. ஆனால் அவரது சமயோசித சிறு குறிப்புரைகள் (Comments) அவர் நண்பர்களைக் கொல்லெனச் சிரிக்க வைத்தன. நானும் சிரித்தேன். அந்தப் படத்தினை அவர் ஏற்கனவே பார்த்திருப்பாரோ என்ற சந்தேகம் எழுந்தது. ஆனால் அவர் அது தான் முதல் தடவையாகப் பார்க்கிறார் என்றனர் நண்பர்கள். அதில் எனக்கு அத்தனை தூரம் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால் பின்னாட்களில் அவரோடு மிக நெருக்கமாகப் பழகிய காலத்தில் அவரது சமயோசித விமர்சனங்கள், குறிப்புரைகள் நண்பர்கள் சொன்னது சரிதான் என எண்ண வைத்தன. பின்னாளில் அவர் ஜெர்மனியில் பிரசுரமாகும் "வெற்றி மணி" பத்திரிகைக்கும், தொடர்ந்து கனடாவின் "தாய் வீடு" பத்திரிகைக்கும் எழுதும் துணுக்குகளைக் கண்டதும் அன்றைய மனிதரின் ஆற்றல் இன்று எத்தனை பரிமாணம் எடுத்து நிற்கிறது என்பதைக் காண முடிந்தது. அன்றாடம் நம் கண்முன்னே நடைபெறுகின்ற சிறு சம்பவங்கள், எங்கள் கண்களிற்கோ காதுகளுக்கோ வெறும் கவனத்தில் கூட எடுக்க வேண்டாத சம்பவங்களாக அமைய அவர் கண்களுக்கும் காதுகளுக்கும் இத்தனை பெரிய நிலைபெற்று வாசிப்போரது சிரிப்புக்கும் சிந்தனைக்கும் காரணமாக வருவது விந்தையிலும் விந்தை என்பேன்.

உயர் தர வகுப்பிற்கான அரசாங்கப் பரீட்சை நடைபெற்றது. அவர் அதில் தேர்ச்சி பெறவில்லை. ஆனால் இரண்டாவது முறை முயற்சி செய்யாமல் துணை மருத்துவ சேவையாளருக்கான பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்றார். பாடசாலையில் அவர் கற்ற காலம் முடிவிற்கு வந்தது. ஆனால் நமக்கிடையான தொடர்பு முன்னிலும் பார்க்க ஸ்திரமாக அமைந்ததைக் காண முடிந்தது. உயர்தர வகுப்பினுக்குரிய நான்கு பாடங்களையும் போதித்த நாம் இளைஞர்களாகவும் மாணவர்களுடன் சினேகபூர்வமாகப் பழகுபவர்களாகவும் இருந்தமையால் விடுமுறைக் காலங்களில் ஊருக்கு வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் பாடசாலை வராமல் செல்வதில்லை. தேனீர்ச்சாலையில் இருந்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருப்போம். பாடசாலையில் கற்பித்த எல்லா ஆசிரியர்களோடும் இங்கிதமாக அவர் பழகிய போதும் திருமதி. சுந்தரராஜன் (செல்வி. தவமணி முருகேசபிள்ளை) உடனும் என்னோடும் மிகவும் நெருக்கமாகப் பழகினார். திருமதி. சுந்தரராஜனுடன் ஏற்பட்ட நெருக்கம் சிறந்த ஒரு வாழ்க்கைத் துணையைப் பெறுவதற்கு உதவியது. ஆனால் என்னுடன் ஏற்பட்ட நெருக்கம் நண்பனாய், ஆலோசகனாய், உதவியாளனாய் என் சாரதியாகக் கூட இன்று வரை நிலைத்து நிற்கிறது. சினேகம் வலிது என்பதை உணர்த்தியது.

மோட்டார் சயிக்கிள் வாங்கவேண்டும் என்ற ஆவலை எனது அண்ணர் மதிப்பளித்து ஒன்றினை வாங்கிக் கொடுத்தார். அது எனக்கு எலும்பிலும் இரும்பு வலுவானது என்பதை அனுபவ பூர்வமாக எடுத்துக் காட்டிற்று. மாட்டு வண்டி ஒன்றின் சில்லின் அச்சு மோட்டார் சயிக்கிளில் சவாரி செய்த எனது வலது கணைக்காலைப் பதம் பார்த்தது. கணைக்கால் என்புகள் இரண்டும் நொருங்கின. காலைச் சுற்றி பத்துடன் வீடே கதியென கட்டிலிலும் கதிரையிலும் மாறி மாறி வாழ்க்கையை மூன்று மாதங்கள் ஓட்ட வேண்டி வந்துவிட்டது. அவரது வருங்கால மனைவியே எனக்காகப் பாடசாலையில் பதில் கடமையாற்றினார். எனது கால் முறிந்ததை அறிந்ததும் ஓடோடி வீடு வந்து என்னைப் பார்த்தார். இருவருமே நடிகர் திலகத்தின் தீவிர விசுவாசிகள். ஆகவே நடிகர் திலகத்தின் நூறாவது திரைப்படம் வெளியிட்டதற்கான சிறப்பு

மலர் ஒன்றுடன் வந்தார். எனது உடல் உபாதையும் மனக்கிலேசமும் அவர் இருந்த நேரம் எப்படி மறைந்தன என்பதைச் சொல்லி விளக்க முடியாது. கலகலப்பாகப் போனது. புகைப்படம் எடுக்கும் கருவியுடன் வந்தவர் குறுந்தாடியுடன் இருந்த என்னுடன் ஒரு படமும் எடுத்துச் சென்றார். பிரதி ஒன்றினை எனக்கு அனுப்பியும் வைத்தார். அண்மையில் நான் எனது வலப்புற முழங்கால் சிரட்டை நீக்கும் அறுவைச் சிகிச்சை செய்த போது எனது பிள்ளைகள் என்னைக் குறுந்தாடி வளர்க்க வைத்தார்கள். அவருடன் அருகே அமர்ந்து அன்றைய புகைப்படம் போல் ஒன்று எடுத்த பின்னரே முகத்தினைச் சவரம் செய்ய ஒப்புதல் கொடுத்தார்கள். பிள்ளைகளுக்கும் அங்கிள் மிகவும் வேண்டப் பட்டவராக வந்துள்ளமையே அதற்கான காரணம். எல்லோருக்கும் நண்பராகி நிற்கிறார்.

எனக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் பெற்றோர்களுக்கு எழுந்தது. சம்மதித்தேன். பெண்ணுக்கு எங்கே போவேன்? அலையாத அலைச்சல். எப்படியோ கொழும்பில் அரச தபால் திணைக்களத்தில் நூலகராகக் கடமையாற்றும் பெண் ஒன்றினைத் தேடிப்பிடித்தனர். ஆனால் நான் பெண்ணைப் பார்க்கவில்லை. பார்க்கப்போய், அது என்னைப் பார்த்து மாட்டேன் என்று சொன்னால் என்ன செய்வது என்ற பயம் காரணமாக இருந்திருக்குமோ? ஆனால் என்மேல் கரிசனம் உடைய அவர் பொது நூலகம் சென்று பார்த்து விட்டார். எனது சுவைபற்றி மிகவும் தெரிந்து வைத்தவர் என்பதால் பெண் திருப்தி என்பதை எனக்குத் தெரிய வைத்தார். திருமணப் பதிவு அன்று தான் நாம் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தோம். அவருக்குத் திருப்தியென்பது எனக்கும் திருப்தியாக இருந்தது. எமது குடும்பத்திற்கே மித்திரனாக மிளிர்ந்தார்.

எனது உறவினர் ஒருவர் உடல் நலத்திணைக்களத்தில் பிரதம கணக்காளராக வேலை பார்த்தார். தனது இடமாற்றத்திற்கு அவர் உதவியை பெறுமாறு என்னை ஏவினார். ஆச்சரியம் என்னவென்றால் யாழ்ப்பாணத்திற்கோ கொழும்பு மாநகரத்திற்கோ மாற்றம் கேட்கவில்லை. பின்னர் தான் விசயம் வெளிச்சத்துக்கு வந்தது. தனது காதலியின் வேலை பார்க்கும் பாடசாலைக்கு அண்மையாகச் செல்வதற்காகவே இடமாற்றம் கேட்டார். நடந்தது திருமணம். ஆனால் அங்கேயும் ஆச்சரியம். எனது பிறந்த நாளும் அவரது திருமண நாளும் ஒன்றாக அமைந்தன. இதனால் இன்று வரை ஒருவரையொருவர் தவறாது அத்தினத்தில் வாழ்த்துக் கூறிக் கொள்வோம். பெண் வீட்டாரின் அலங்காரப் பொறுப்பும் என் தலைமேல் விழுந்தது. 1981ல் நைஜீரியா வாழ்க்கை ஆரம்பமானது. அவரது மனைவி ஆசிரிய நியமனம் பெற்றார். எனக்கும் நியமனம் கிடைத்தது. நான் எனது மனைவியையும் அழைத்துக்கொண்டு போக எடுத்த எத்தனத்தினால் நாள் போய்க் கொண்டிருந்தது. முடிவில் முயற்சி தோல்வியுற தனியே சென்றேன். ஆகவே அவ்வருடம் நைஜீரியாவில் கால்வைத்த கடைசி ஆசிரியன் என்ற பெயரைச் சம்பாரித்தேன். அவரது மனைவி அவரில்லாமல் சென்றமையால் எனக்கு முந்திவிட்டார். அதுவும் நன்மைக்கே. நான் நைஜீரியா சென்று என்ன செய்வது என்று திக்கு முக்காடிய சமயம் அவர் மனைவி தான் வழிகாட்டியாக நின்று உதவினார். சிறிது காலத்தில் எனது மனைவியும் அதன் பின்னர் அவரும் நைஜீரியா வந்து சேர்ந்தனர். எனக்கு வழங்கிய பாடசாலை சொக்கற்ரோ நகரத்தில் இருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் இருந்தது. எனக்குத் தரப்பட்ட விடுதி விசாலமானது. தண்ணீர் தான் பிரச்சினை. அவரது மனைவிக்கு சொக்கற்ரோ நகருக்கு அண்மையாக வழங்கப்பட்ட பாடசாலை அப்பொழுதுதான் நிர்மாணிக்கப் பட்டுக் கொண்டிருந்தது. ஆகவே அவர் குடும்பம் எமது வீட்டிலே ஒரு மாதம் வரை தங்க வேண்டி வந்தது. சொக்கற்ரோவின் வறண்ட சீதோஷ்ண நிலையிலும் அவர் எம்முடன் இருந்தமையால் பொழுது வளமாக இன்பமாகப் போனது. மாலை வேளைகளில் திரு. புத்திரசிங்கம் வருவார். விடுமுறை நாட்களில் பூரணச்சந்திரனும் சரவணபவனும் வருவார்கள். கடுதாசி விளையாட்டிலும் அவரது நகைச்சுவைப் பேச்சுக்களாலும் பொழுது போவதே தெரியாமல் போனது. மழை பெய்கின்ற நாட்களில் இரவோ பகலோ பாராமல் உள்முற்றத்தில் மழையில் நின்று shower bath எடுப்போம். அவரது பாம்புக் கண்களுக்கு எமது வீட்டிற்கு அண்மையில் உள்ள ஒரு குண்டுக் கிணறு பட்டு விட்டது. மழை பெய்யும் பொழுது அது நிரம்பி விடும். ஆகவே அந்த நீர் வற்றுமட்டும் தினசரி குளியல். அது வறண்ட பின்னர் இடையிடையேதான். மற்ற வேளைகளில் dry cleaning.



அதிபரின் பவளவிழாவில்

அவரது மனைவிக்கு குசோ எனும் ஊரில் உள்ள பாடசாலைக்கு இடமாற்றம் கொடுத்தார்கள். சொக்கற்ரோவிலிருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நகரம். வசதியான வீடு கொடுத்தார்கள். தண்ணீர் பிரச்சினை இருக்கவில்லை. அத்துடன் அங்கே உள்ள ஒரு தனியார் மருத்துவ மனையிலும் அவருக்கு வேலை கிடைத்தது. அவரது சமூக சேவை அங்கேயே ஆரம்பமாகி விட்டது. மாதம் இருமுறையாவது அவர் சொக்கற்ரோவினில் உள்ள கல்வி அமைச்சகத்துக்கு வருவார். வரும் பொழுது Stethescope மற்றம் சில நோய்களுக்கான மருந்துகளுடன் வருவார்.மெல்ல மெல்ல அவரைப் பரிச்சயம் செய்து கொண்ட ஊழியர்கள் அவர் வருகையை எதிர்பார்த்து நிற்பார்கள். மிக விரைவிலே அவர் பிரபலமாகி விட்டார்.வைத்திய சாலையிலும் மொழி பிரச்சினையாக அவருக்கு அமையவில்லை. அவர் சாதுரியம் நற்பெயரைப்

பெற்றுக் கொடுத்தது. பாமர மக்கள் அவர் சேவையை நாடினர். தொழிலைக் கடமையாகப் பார்க்காமல் ஊழியமாகப் பார்த்தார். எல்லோருக்கும் அன்பரானார்.

நண்பர்கள் சிலரைத் தொடர்ந்து நாமும் கனடா சென்று அகதி நிலை கோருவோமே எனத் தீர்மானித்தோம். கனடாவிற்கு நேரடியாக வரமுடியாது. அமெரிக்கா செல்வதற்கான நுளைவு அனுமதி கிடைத்தது. அவருக்குக் குடும்பசகிதமாக நுளைவனுமதி கிடைத்தது. எனது மகனுக்குக் கிடைக்கவில்லை. இரு குடும்பமும் ஒரு நாள் நியூயோர்க் நகரில் உள்ள அவரது மைத்துனர் டொக்டர். கணேசனுடன் தங்குவதாகத் தீர்மானம். நான் மகனைத் திரும்ப ஊருக்கு அனுப்ப வேண்டியதால் ஒரு நாள் சுணங்கி விட்டேன். அவர் என்னிலும் ஒரு நாள் முந்தி அமெரிக்காவில் அமெரிக்கையாகப் புகுந்தார். அதுவும் நல்லதாகப் போனது. என்னையும் மனைவியையும் வரவேற்க அவர் விமான தளம் வந்திருந்தார். ஒரு நாள் மிகவும் சந்தோசமாகக் கழிந்தது. மறு நாள் கணேசன் எம்மை மொன்றியால் நகரம் செல்வதற்கான பேருந்தில் ஏற்றி விட்டார். அங்கேதான் அகதி நிலை கோரினோம். ஒவ்வொரு குடும்பத்தினையும் குடும்பம் குடும்பமாக அழைத்து விசாரித்தார்கள். எம்மோடு இன்னொரு இளம் குடும்பமும் வந்திருந்தது. அவர்களை அழைத்துப் போவதற்காக இங்கே அகதி நிலைகோரிய ஒரு புண்ணியவானும் வந்திருந்தார். அவர் தன்னைப் பற்றி எனக்குப் பெருமையடித்துக் கொண்டிருந்தது மாத்திரமல்லாமல் இடையிடையே விசாரணையாளர்களையும் போய் அவர்களை எப்போ விடப்போறாய் என இம்சை கொடுத்துக் கொண்டிருந்தார். விசாரணையாளர்கள் தமது ஆதங்கத்தினை, அவர் அழைத்துப் போக வந்தவர் நான் என எண்ணி என்னைப் பழி வாங்கி விட்டனர். எமது குடும்பம் வந்துள்ளது போன்ற எண்ணமே இல்லாதவர்கள் போல செயற்பட்டார்கள். நண்பர் குடும்பத்தின் விசாரணை முடிந்தது. கதிர் சிரித்துக் கொண்டு வந்தார். உங்களிடம் எவ்வளவு டொலர் உள்ளது என்றார். 250 வரை உள்ளது என்றேன். அதைத் தாருங்கள் என்றார் கொடுத்தேன். 20 டொலரினைத் திருப்பி தந்து இதனை வைத்துக் கொள்ளுங்கள். மிகுதி பிறகு தருகிறேன் என்றார். இதென்னடா பகல் (இரவு) கொள்ளை என எண்ணினேன். அவர்கள் எத்தனை டொலர் வைத்துள்ளாய் எனக் கேட்பார்கள். நீங்கள் உண்மை விளம்பி. ஆகவே இப்போ நீங்கள் உண்மை பேசலாம் என்றார் முறுவலுடன். அவர் சென்று விட்டார். அந்த உபத்திரவக்கேசும் தான் அழைத்துப்போக வந்த தனது ஆட்களுடன் சென்று விட்டது. நான் பொறுமையை இழந்தேன். விசாரணை செய்பவர்களிடம் சென்று என்னை ஏன் விசாரிக்கவில்லை எனக் கேட்டேன். உனக்குத்தானே அழைத்துப்போக ஒருவர் வந்துள்ளார். ஆகவே பொறுமையாக இரு என்றார்கள். நண்பர்களே! அவர் என்னை அழைத்துப் போக வரவில்லை. அவர் அழைத்துப் போகவந்தவர்களை அழைத்துக் கொண்டு போய்விட்டார். நான் தான் அநாதரவாய் நிற்கிறேன் என்றேன். பின்னர் அவசர அவசரமாக விசாரணையை முடித்து என்னையும் அனுப்பி விட்டார்கள். நான் மொன்றியாலினை அடைய மறுநாள் அதிகாலையாகி விட்டது. ஆகவே இங்கேயும் அவர் என்னிலும் ஒரு நாள் முந்தியே மொன்றியால் வாசியாகி விட்டார்.

மொன்றியாலில் அவர் வாசஸ்தலம் "நமூர்" இல். எனது "கோர்டினேஷ்" இல். இடையே தூரம் மிகக்குறைவு. எனவே காணல் மிக அதிகம். சும்மா பொழுதைப் போக்குவானேன் என்பதால் இலவசமாக பிரெஞ்சு மொழி கற்பிக்கும் வகுப்புக்கும் கணக்கியல் கற்பிக்கும் வகுப்பிற்கும் மாலை வேளைகளில் சென்றோம். ஏற்கனவே அவருக்கு தமிழ், ஆங்கிலம், சிங்களம், ஹௌசா (நைஜீரியா) அத்துபடி, இங்கே பிரெஞ்சு மொழியுடன் பன் மொழிப்புலவராகி விட்டார். ஏதோ நான்கு ஐந்து சொற்கள் தெரிந்தாலும் அவற்றினைச் சாதுரியமாக உபயோகித்து தனது எண்ணங்களை எடுத்து விளக்குவதில் அவர் வல்லவர். சமத்தர். எப்படியோ சாதித்து விடுவார். அதில் எனக்கும் பங்கு. ஆகவே எங்கு சென்றாலும் அவர் முன்னே நான் பின்னே. அப்படியே தான் ரொறன்ரோ நோக்கிய இடப் பெயர்வும் அமைந்தது. எனது மனைவியாருக்கு நடந்த அறுவை வைத்தியம் காரணமாக நான் மொன்றியாலில் மேலும் சிறிது காலம் தங்க வேண்டி வந்தது. அவர் ரொறன்ரோ வந்துவிட்டார். அவரைத் தொடர்ந்து நான் ரொறன்ரோ வந்த போது அவர் இங்கே வேலை பார்க்கவும் ஆரம்பித்துவிட்டார். சும்மா வீட்டிற்குப் பாரமாய் இருப்பது என்பது அவருக்கு எட்டிக்காய் என்பதை இன்று 73 வயதாகியும் அவர் வேலைக்குச் செல்வதிலிருந்து அறிந்து கொள்ளலாம். செய்யும் வேலை முடிந்த பின்னரும் வேறு வேலைகளைத் தலைமேல் தூக்கிச் செல்வது அவருடன் கூடப் பிறந்த குணம்.அதிலும் வேறு எவரிலுமே காணமுடியாத தனித்துவம் அவரிடம் உள்ளமையை நான் கூறியே ஆக வேண்டும். பார்க்கத் தொடங்கிய தொழில் பாதுகாப்பு அலுவலர். ஆனால் இதுவரை அவர் தொடர்ந்து அதே நிறுவனத்தில், அதே பதவியில், அதே இரவு வேலையில் அமர்ந்திருப்பது ஆச்சரியமாயில்லை? எனக்குப் பின் இரவு நேரங்களில் தொலைபேசி அழைப்பு வருவதாயிருந்தால் 11:00 முதல் 12:00 மணியாக இருந்தால் அது அவர், 12:00 முதல் அதிகாலை 1:00 மணியாக இருந்தால் அது ஜெர்மனியிலிருந்து சிவகுமாரன். அது இடையிடையே ஆனால் இவரது தினசரி.



பாரதி ஆர்ட்ஸ் விருந்தில் நண்பர்களுடன்

அன்றைய தினம் அவர் கேட்டதைக் கண்டதை எனக்கு தெரிய வைப்பார். குறிப்புக்களில் குறும்பு இருக்கும், குசும்பு இடையிடையே தெறிக்கும். அவரது தொலைபேசி அழைப்பு வராவிட்டால் எனக்கு ஏதோ போலிருக்கும்.

அவர் விரும்பியிருந்தால் அந்த நிறுவனத்தில் பதவி உயர்வு பெற்றிருக்கலாம். அவரது தொழில் பற்று, கடமை உணர்வு, நேரம் தவறாமை பற்றிக் கண்ணுற்ற நிறுவனம் பல முறை பதவி உயர்வு வழங்கத் தயாராயிருந்தது. மேலே நகர மறுத்து விட்டார். வேறு தொழில் பார்க்கவும் முனையவில்லை. செய்யும் தொழிலே தெய்வம் என்ற பரந்த மனப்பான்மையுடன் சேவையாற்றுகிறார். இப்போ இரண்டு வருடங்களாகத்தான் இரவு வேலையைப் பகல் வேலைக்கு மாற்றியுள்ளார்.

எனக்கு முன்னர் அவர் ரொறன்ரோ வாசியானது மிகவும் நல்லதாகப் போய்விட்டது. நான் ரொறன்ரோ வரும்பொழுது இராச வரவேற்பு. எமது பாடசாலைப் பழைய மாணவர்கள் யாபேரையும் சல்லடை போட்டு தேடி வைத்திருந்தார். ஆகவே அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு செய்யக் கூடிய உதவிகள் செய்தனர். எனக்கும் உடனடியாகவே வேலை கிடைத்தது. அவர் வேலை பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைத்தது. ஆனால் நான் குணாகரன் என்ற நண்பர் Gas station இல் வேலை பெற்றுக் கொடுக்க அதனை ஏற்றேன். சுகவீனமுற்றிருந்த எனது மனைவியாரைப் பேணுதற்கு அந்த வேலை அனுகூலமாக இருந்தது. துரதிருஷ்டவசமாக எனது மனைவியை இழந்தேன். திக்குத் திசை தெரியாமல் திண்டாடி நின்ற எனக்கு கைகொடுத்து நின்றவர்கள் அவரும் திரு. சாமி அப்பாத்துரையுமே. எனது இரு மகன்களும் வந்து சேர்ந்தமையால் மெல்ல மெல்ல சுயத்திற்கு வந்தேன். அவர் என்னைச் சோம்பியிருக்க விடுவதாயில்லை. சில பழைய மாணவர்களுடன் என் இல்லம் வந்தார். மகாஜனாக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கிளை ஒன்றினைக் கனடாவில் ஆரம்பிக்க வேண்டும் என்றார். அவர் எதனைச் சொன்னாலும் நன்றாகச் சிந்தித்தே சொல்வார். சொல்லும்போது ஆணித்தரமாகச் சொல்வார். கேட்பவர்கள் மறுத்துக்கூறுதற்கு முடியாதவையாக இருக்கும் அவர் விளக்கம். சம்மதித்தேன். நீங்கள் தான் தலைவர் என்றார். நான் வசித்த தமிழர் கூட்டுறவு இல்ல மண்டபத்திலேயே ஆரம்பக் கூட்டம் நடைபெற்றது. எனக்கு உதவும் முகமாக அவர் உபதலைவர் பதவியை ஏற்றார். கனடாவில் தோன்றிய இரண்டாவது பழைய மாணவர் சங்கமாக மகாஜனாவினுடையதைக் கொள்ளலாம். சில நாட்களுக்கு முன்னதாக அமெரிக்கன் மிஷன் பழைய மாணவர் சங்கம் உருவாகியது. அவர் பின்னர் மகாஜனா சங்கத்தின் தலைமை ஏற்றபோது அது U.S.A யிலும் கால் பதித்தது மாத்திரமல்லாமல் பல ஆயுட்கால உறுப்பினரைக் கொண்ட வலுவான அமைப்பாக மாறியது. மகாஜனா கலைவிழா பல்லோராலும் பேசப்பட்டதாக அமைந்தது. அவர் நடிகராக, இயக்குனராக, தயாரிப்பாளராக, மேடை நிர்வாகியாக பல்லோராலும் பாராட்டிப் பேசப் பட்டார். மளமளவென பாடசாலைச் சங்கங்கள், ஊர்ச் சங்கங்கள், தொழில் ஆற்றிய நிறுவனங்கள், தொழில் பார்த்த இடங்கள் எனப் பல்வகையான சங்கங்கள் எழுந்தன. ஒவ்வொன்றின் சார்பிலும் விழாக்கள், ஒன்று கூடல்கள் என ஊரே அமர்க்களப்பட்டது.

நேர வசதி இருக்குமாயின் அவர் விழாக்களுக்குத் தவறாது சமூகமளிப்பார். எந்தவித காழ்ப்புணர்ச்சியும் அற்றவராக விழா முடிந்த பின்னர் அதன் அமைப்பாளர்களிடம் சென்று பாராட்டத்தவறியதும் இல்லை, சில திருத்தங்கள் தேவையென்றால் அதனை நசூக்காக அவர்களுக்கு எடுத்துக் கூறவும் பின்நின்றதில்லை. சில சந்தர்ப்பங்களிலே, அங்கே நியாயம் உள்ளது, உதவவேண்டிய தேவை உள்ளது என்பதை உணர்வாராகில் தானாகவே வலிந்து போய் உதவுதற்குத் தயங்கியதுமில்லை. அவரது இந்தச் செயற்பாடு அவரை மிகப் பிரபலமாக்கியது. அவரது ஆலோசனைகளைக் கேட்கவும் அவரது ஒத்துழைப்பினைப் பெறவும் பலர் முயற்சித்தனர். சில அமைப்புக்கள் அவரைக் கௌரவ உறுப்பினாராகவே அங்கீகாரம் செய்தன.அவர் இன்றேல் அந்த அமைப்பு இயங்காது எனக் கூறக்கூடிய அளவினுக்கு அவரது பங்களிப்பு இருந்தததைக் கண்டு நான் ஆச்சரியமுற்றுள்ளேன்.

நகைச்சுவை என்பது அவர் கையாளுகின்ற பிரதான ஆயுதம். நகைச்சுவையுடன் ஒன்றினைச் சொல்கையில் அது நறுக்கெனக் கேட்பவரின் செவியூடாகச் சென்று மூளையை அடையும். பாம்பின் கால் பாம்பறியும் என்பார்கள். "வெற்றிமணி" மாதாந்த சஞ்சிகை ஆசிரியர் சிவகுமாரன் ஜெர்மனியிலிருந்து கனடா வந்த போது இருவருக்கும் அறிமுகம் ஏற்பட்டது. இவரது நகைச்சுவை கலந்த உரையாடல் சிவகுமாரனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டது. "உங்களுக்கு பொதுவுடைமைக் கொள்கையில் பற்றுண்டா" என்றார். ஏன் அப்படிக் கேட்கிறீர்கள் என்றதற்கு "ஒருவர் மட்டும் அனுபவித்தால் அது சுயநலம், எல்லோரும் அனுபவித்தால் தான் அது பொது நலம்" என்றார். அப்படி என்றால், எனக் கேட்கு



முன்னரே, சிவகுமாரன் "உந்த வகையான துணுக்குகளை வெற்றிமணியில் எழுதுங்கள் என்கிறேன். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றார். அதன் விளைவு வெற்றி மணி சஞ்சிகையில் யாபேரது வரவேற்பினையும் பெற்ற "காதோடு காதாக" பகுதியின் பிரசவம். வெற்றிமணியில் காதோடு காது வாசிப்பதற்கென்றே காத்திருப்பவர்களைக் கண்ட சிவகுமாரன் தனது நன்றி உணர்வினைக் காட்டுமுகமாக "காதோடு காதாக" என்ற நூலினையே ஆக்கி விட்டார். அது ஜெர்மனி மட்டுமன்றி கனடா, இலங்கை, இங்கிலாந்து எனப் பல்வேறு நாடுகளிலும் வெளியிடப் பட்டு அவரை பிரபல நகைச் சுவை எழுத்தாளர் வரிசையில் ஒருவராக்கி விட்டது. விடுவார்களா மற்றவர்கள். இலண்டன் "புதினம்" ஆசிரியர் இராஜகோபால், கனடா "தாய்வீடு" ஆசிரியர் டிலிப்குமார் அவரை விட்ட பாடில்லை. ஆகவே அவர் தன் கைவரிசையைக் காட்டுகிறார். "தமிழர் தகவல்" ஆண்டு மலரில் வருடாவரும் நகைச்சுவையாக சில நல்ல சமூகத்துக்குத் தேவையான விஷயங்களையும் சொல்லி வருகிறார். இங்கேயும் முந்தி விட்டார். எனக்குச் சுட்டுப் போட்டாலும் அவரைப் போல எழுத வராது.

மகாஜனக்கல்லூரியில் கல்வி கற்கையில் நடந்த அவரது நாடகப் பிரவேசம் கனடா வந்த பின்னர் பல்பிரமாணம் பெற்றுள்ளது. எமது பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்துக்கான நாடகத்தை எழுதித் தயாரித்து நெறியாள்கையும் செய்யுமளவினுக்கு அவரது ஆற்றல் மிளிர்ந்ததைக் காணமுடிகிறது. மஹாகவியினுடைய "கோடை" நாடகத்தினை நாம் மேடையேற்றிய பொழுது அதில் நாயினக்காரராக மிகத் தத்துரூபமாக நடித்து பார்வையாளரின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்ற காட்சி இன்று 20 வருடங்களுக்குப் பின்னரும் கூட என் கண் முன்னே காட்சி தருகிறது. ஆகவே இந்நாட்டிலே தயாரிக்கப் பட்ட படங்கள் பலவற்றிலே அவரது பங்களிப்பினை நாடிப் பெற்ற தயாரிப்பாளர்கள் நிறையவே உண்டு. இது மாத்திரமல்லாம் சில விளம்பரப்படங்களிலும் அவர் நடிப்பினை நாடிப் பெற்றவர்களும் உண்டு. விளம்பரப் படங்களில் நடிப்பதற்கு சில அருகதைகள் தேவை. ஆள் கவர்ச்சியுடையவராக இருக்க வேண்டும், யாபேருக்கும் தெரிந்த பிரபலமாயிருக்க வேண்டும், இயற்கையான நடிப்பாற்றலைப் புலப்படுத்த வேண்டும். இவை யாவும் அவரிடம் இருந்தமையால் அந்த விளம்பரம் பார்ப்போரை ஈர்க்கும் படியாக இருந்தது.

ரொறன்ரோ சமூகத்தில் அவரது பிரவேசம் நடந்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் ஆலோசனை, பங்களிப்பு, வழிநடத்தல், உதவி, ஊக்குவிப்பு பெறாத அமைப்போ, சங்கங்களோ மிக மிகக் குறைவாகவே இருக்கும்.

கூட்டாக எம் பயணம் 55 வருடங்களாகத் தொடர்கிறது. அவர் எனக்கு சற்று முன்னர் போகிறார், முதுமை ஒன்றினைத் தவிர. பல சந்தர்ப்பங்களில் என்னை எங்கு செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் அழைத்துச் செல்லும் சாரதியாக உள்ளார். நேரம் தவறாமை அவரது உயர் பண்பு. காக்க வைக்கமாட்டார். என்னைக் காக்கவே வந்தவர் எனலாம்.

நாம் இருவர். நான் இருக்கும் இடமெல்லாம் அவர் இருப்பார். ஆனால் அவர் இருக்கும் எல்லா இடங்களிலும் நான் இருக்க? அப்பப்பா! முடியாது சாமி முடியாது!!

*பொ. கனகசபாபதி*

*அதிபர், மகாஜனாக் கல்லூரி*

# பாடறிந்தொழுகும் பண்பாளர்

நண்பர் மருத்துவர் கதிர் துரைசிங்கம் அவர்கள் பன்னாலை மையிலப்பையில் காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி அவர்களுக்கும் வரதலட்சுமி அம்மை யாருக்கும் மூத்த புதல்வராக 06.11.1939 ல் பிறப்பதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஒரு புலவர் அவரைப்பற்றி ஒரு பாடல் பாடியிருக்கின்றார். அது,

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

என்பது. துரைசிங்கம் அவர்கள் என்னைக் காணவந்தாலென்ன அல்லது அவர் தொலைபேசி எடுத்தாலென்ன அல்லது அவரது பெயரை வேறு யாரேனும் உச்சரித்தாலென்ன வள்ளுவர் பெருமானின் இந்தக் குறள் எனக்கு ஞாபகத்துக்கு வந்துவிடும். அவர் போன்றவருக்குத்தான் இந்தக் குறள் மிகவும் பொருத்தமாகும் - பொருத்தமாகும்படி பாடியிருக்கின்றார் பொய்யாப் புலவர்.

பண்பு என்பது ஒரு பக்குவப்பட்ட பெண்ணைப்போன்ற பதம், பொற்குடம் போன்ற ஓர் அற்புதச் சொல். அதற்குள் அன்பும் அடக்கமும் நாணமும் அடங்கும், ஒழுக்கமும் செப்பமும் வாய்மையும் ஒளிரும், இன்சொல்லும் நகையும் ஈகையும் இருக்கும். நடத்தையில் பாடறிந்து ஒழுகும் நல்லியல்பும் குடைபிடிக்கும்.

பாடறிந்து ஒழுகுவதுதான் பண்புடைமை என்கிறது கலித்தொகை. பாடு என்ற சொல்லும் பல பொருள்களைக் கொண்டது. இயல்பு, தகுதி என்பன இந்தக் கலித்தொகை அடிக்கு அத்திபாரம் இடுகின்றன. ஒழுகுவது ஒழுங்காக நடப்பது.

இந்த நடத்தையில் துரைசிங்கம் ஒரு கைதேர்ந்த கலைஞர். நடிக்கிறவரைக் கண்டால் அவரோடு சேர்ந்து நடிப்பார், புகை பிடிக்கிறவரைக் கண்டால் அவரோடு சேர்ந்து பிடிப்பார். கடிக்கிறவரைக் கண்டால் கடிக்கவுஞ் செய்வார். கடி இரட்டை அர்த்தங்களில் இருக்கும். விளங்காதவருக்கு அவற்றை அவர் விளங்கப்படுத்துவார். விளங்கப்படுத்தியும் ஒருவர் சிரிக்கவில்லை யென்றால் சிரிக்கும்வரை விளக்கம் தொடரும்.

துரையர் நல்ல நகைச்சுவைகாரர். கனதியான சங்கதிக்குள்ளும் நகைச்சுவை துள்ளும். "வெற்றிமணி"யிலும் "தாய் வீடு" இதழ்களிலும் இவரது நகைச்சுவைக் கட்டுரைகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. இவரது நகைச்சுவைத் துணுக்குகள் பலவற்றைத் தொகுத்து "காதோடு காதாக" என்ற பெயரில் வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் வெளியிட்டிருக்கின்றார்.

எழுத்தில் மட்டுமன்றி பேச்சிலும் சிரிப்பு வாணவேடிக்கை காட்டும். நகைச் சுவை இக்காலத்தில் இவரை ஒரு நல்ல பேச்சாளன் ஆக்கியிருக்கின்றது. பேச்சென்றால் என்ன, நடிப்பென்றால் என்ன, எழுத்தென்றால் என்ன எல்லாவற்றிலும் இமாலயத் திட்டமிடல் வேலை நடைபெறும். ஆயத்த மில்லாமல் கடைசிவரையும் அரங்கேற மாட்டார்.

உதவி தேவைப்படுகின்றவரைக் கண்டால் உடனே வேண்டிய உதவிகளைச் செய்வதில் இவருக்கு நிகர் இவரே. அது செய்யும்வரை இவருக்கு நித்திரை வராது. மற்றவரையும் நித்திரைகொள்ள விடமாட்டார்.

உதவி வேண்டும் என்று இவரை யாரும் கேட்க வேண்டியதில்லை. தேவையை உணர்ந்து தானாகவே அதனைச் செய்ய முன்வருதல் இவரது குணம். இதனையே செய்ந்நன்றி என்றார் வள்ளுவர் பெருமான்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

இதில்வரும் செய்யாமல் செய்த உதவியே செய்ந்நன்றி என்பது. அதாவது தான் எந்த உதவியும் செய்யாமல் இருக்கவும் தனக்குப் பிறர் செய்யும் உதவியே செய்ந்நன்றி ஆகும். இந்தச் சொல்லில் உள்ள நன்றிக்கு உதவி என்று பொருள்.

துரைசிங்கத்தின் உதவி பெரிதும் திருநாவுக்கரச நாயனார் பாணி. அதாவது சரியைத் தொண்டு வகை. இன்னும் தெளிவாகச் சொன்னால் சரீர உதவி. அவர் தேவாரங்களாகவும் சொல்லுவார், செய்துங் காட்டுவார். இவர் ஆலோசனைகளாகவும் சொல்லுவார், செய்துங் காட்டுவார்.

மாதிரிக்கு ஓர் உதாரணம்: ஒரு கூட்டம். அதில் முதன்முறையாக கதிர் து. கலந்துகொள்கின்றார். பேசாமல் வந்துவிடுகிறார். வந்தபின் தொலைபேசி எடுக்கப்படுகின்றது. தொடக்கம் நல்ல கூட்டம் என்று பாராட்டாகத்தான் இருக்கும். இருந்தாலும் இப்படிச் செய்திருந்தால் நன்றாக இருக்கும் என்று தன்னுடைய ஆலோசனைகளையும் சொல்லிவைப்பார். எல்லாம் நல்லதுக்குத்தான். முதற்கூட்டத்திற் பேசாமல் இருந்தவர் அடுத்த கூட்டத்தில் அங்கும் இங்குமாக சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார். கூட்டம் நன்றாக நடக்கும். மிக முக்கியமாக உரிய நேரத்துக்குத் தொடங்கி உரிய நேரத்துக்கு முடியும். அடுத்த கூட்டத்தில் கூட்டம் நடத்துகின்றவரோடு தானும் ஓர் ஆளாக இணைந்துவிடுவார்.

இவ்விதம் கனடாவில் முதல் முதல் மகாஜனக் கூட்டங்களை நன்கு நடத்திக் காட்டினார். பின்னர் தமிழர் தகவல் கூட்டங்களுக்குச் சிறுசிறு உதவிகள் செய்யத் தொடங்கினார். பின்னர் மதிவாசனின் இசைநிகழ்ச்சிகளுக்கு உதவினார். மதிவாசன் மதிநுட்பமாகத் துரையரை நன்கு பயன்படுத்தத் தொடங்கினார். இக்காலத்தில் துரைசிங்கம் இல்லாமல் மதிவாசனின் நிகழ்ச்சிகள் நடப்பதில்லை என்றாகிவிட்டது. அடுத்து உதயன் விழாக்கள். கடைசியாக இணைந்துகொண்டது இயல்விருது நிகழ்ச்சி.

இத்தகைய பண்புடையவருக்குப் பாராட்டு விழா நடத்துவது மிகவும் பொருத்தமானது. அது அவருக்கு ஒருவகையில் நன்றி பாராட்டுவதற்குச் சரியானது.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையாரை உலகம் பாராட்டவே செய்யும்.

வாழ்த்துக்கள்!

***வி. கந்தவனம்***



# பணியின் மகத்துவம்

அண்மையில் உறவினர் ஒருவரின் 50வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டேன். அவரது 14 வயது நிரம்பிய, கனடாவில் பிறந்து வளர்ந்த சிறுவன் நல்ல தமிழில் ஆற்றிய உரை வித்தியாசமாகவிருந்தது: "எனது அப்பா நல்லவர், வல்லவர், பொய் சொல்லமாட்டார், நேர்மையானவர், கோவிக்கமாட்டார், மற்றவரில் அன்பாய் இருப்பார் (சற்று இடைவெளி) என்றெல்லாம் சொல்லமாட்டன். ஒன்றுமட்டும் சொல்லுவன், அவர் எனது நண்பன் (தகப்பனைக் கட்டிப்பிடித்தான்). நாங்க ஒன்றாக சொக்கர் அடிப்பம், ரிவி பார்ப்போம். நான் கேட்பதெல்லாம் வாங்கி கொடுப்பார்........." கதிர் அவர்கள் என் உள்ளத்தில் ஏற்படுத்திய நல்ல தாக்கத்தை எண்ணும் பொழுது இச் சிறுவனின் உரை நினைவில் வருகிறது.
கதிர் அவர்களுக்கும் எனக்கும் 16 வருடம்......நெருங்கிய உறவு. ஆனால் பல முன்ஜென்மங்களில் ஒட்டி உறவாடிய கனமான உணர்வு. சில வேளைகளில் பொழுது போவது தெரியாது தொலைபேசியில் உரையாடி மனைவிமாரின் சினத்தை சம்பாதிக்கும் நிலை.

மனிதநேயம், தன்னலமற்ற தன்னார்வ பொதுநல சேவை எனும் வித்தானது கதிர் அவர்கள் 3 வயது நிரம்பிய பச்சைப்பாலகனாக இருந்த பொழுது அவரது தந்தையால் இவரது உள்ளத்தில் வித்திடப்பட்டது. இந்த வித்து 70 வருடங்களுக்கு முன் அவரது தந்தை காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி அவர்கள் இந்தியாவில் நடைபெறுவது போல் தமது கிராமத்திலும் கூட்டுப் பிராத்தனை சபையொன்றை அமைத்து விடியற்காலை 4 மணியளவில் வீதிகளில் திருவெம்பாவைப் பாடல்களை கூட்டுப்பிராத்தனையாக ஆரம்பித்த அன்று ஆழமாகப் புதைக்கப்பட்டது. அன்று தொட்டு இன்றுவரை இந்த திருவெம்பாவை பிராத்தனை தொடர்ந்து இவர்களின் கிராமமாகிய மைலப்பையில் நடைபெற்று வருகிறது. தந்தையார் தன் மகனின் மணிவிழா மலரில் கூறுகிறார், "11 வயதில் சிவதீட்சையும் பெற்றவர். வீட்டில் மார்கழி மாதத்தில் கோலமிட்டு பிள்ளையார் பிடித்து வைத்துத்தான் பாடசாலை செல்வார். விடியற்காலையில் திருவெம்பாவைக் கூட்டுப்பிராத்தனைச் சபையினருடன் சேர்ந்து திருவெம்பாவை பாடல்களைப் பாடி வருவார்...." எனப் பெருமையுடன் கூறியிருக்கிறார். சிறுவனாக இருந்த காலந்தொட்டு தன் தந்தையின் தன்னார்வ பொதுநல சேவையை பார்த்து பிரமித்து வளர்ந்துள்ளார். காணிப்பிசகு, குடும்பத்தகராறு, கிராம கல்வி வளர்ச்சி, கோவில் விவகாரங்கள், விவசாயிகளுக்கான கடன் வழங்கும் ஐக்கிய நாணய சங்கம் போன்ற விடயங்களில் இவரது தந்தையார் முன்னின்று ஆற்றிய சீரிய பங்கினையும் ஊர்மக்கள் இவர் தந்தைமேல் வைத்திருந்த நல் மதிப்பினைக் கண்டு உணர்ந்து அதன் நிழலில் வளர்ந்தவருக்கு தந்தைபோல் மைந்தனாய் பிரகாசிக்க வேறு காரணங்கள் தேவைப்படவில்லை.

"எனது செயலால் ஒருவர் நன்மை அடைகிறார், மகிழ்வடைகிறார் என்றால் அதுவே அன்றைய நாளில் எனக்கு கிடைக்கும் வெகுமதி" என கதிர் அவர்கள் என்னிடம் பலதடவைகள் கூறியிருக்கிறார். "என்னிடம் உதவி என்று எவரும் கேட்கவேண்டியதில்லை. நிலை அறிந்து நானாக முன்வந்து என்னால் முடிந்த உதவியை எவருக்கும் செய்யவேண்டுமென்பது தான் எனது ஆசை. இதற்காக ஊதியம் பெற்றதும் இல்லை, பெறப்போவதுமில்லை" என பிறருக்கு உதவுவதில் தான் பெறும் இன்பத்தையும் எமது உரையாடல்களில் கூறியுள்ளார். "தன்னார்வ பொதுநல சேவைகளால் எனக்கு மட்டற்ற மகிழ்சி மட்டுமல்ல விலை மதிக்க முடியாத நன்மைகளும் கிடைக்கின்றன" என இவர் கூறும்பொழுது இயற்கையின் விதியை (Rule of Natural Justice) எங்ஙனம் புரிந்துள்ளார் என்பது தெளிவாகிறது. 'What you do unto others will come back to you multiplied many times." நீ பிறருக்கு செய்வது பன்மடங்காக பெருகி உன்னை வந்தடையும்" என்பது அந்த விதி. இந்த விதியின்படி இவர் பெற்ற விலைமதிப்பற்ற நன்மைகள் பல. இவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்:

மஹாஜனா கல்லூரியில் கதிர் அவர்கள் பயின்ற பொழுது இவரது தாவரவியல் ஆசிரியையாக திருமதி. சுந்தரராஜா அவர்கள் பயிற்றுவித்தார்கள். இந்த மாணவனின் தன்னார்வ தொண்டில் ஆசிரியைக்கு பற்று ஏற்பட்டு விட்டது. இதனால் பாடசாலை பொது நிகழ்வு காரணமாக மாணவன் ஆசிரியையின் வீட்டிற்கு செல்லவேண்டிய தேவை ஏற்பட்டது. முதல் விஜயத்தை தொடர்ந்து ஆசிரியையின் வீட்டுக்கான விஜயத்தின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் இடைவெளியும் குறுகத்தொடங்கியது. இது திருமதி. சுந்தரராஜன் அவர்களுக்கு வியப்பை ஏற்படுத்தியது. இந்த மாணவனுக்கு பாடசாலை பொது சேவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போனது மர்மமாகவும் இருந்தது. தன் அழகிய தங்கையை மாணவன் மன்மத வலையில் விழுத்தியதை அறிந்த பொழுது மர்மம் உடைக்கப்பட்டது. பின் ஒரு நாள் அவுஸ்திரேலியாவில் இருந்து கனடா வந்திருந்த திருமதி. சுந்தரராஜா அவர்கள் இது பற்றி வேடிகையாக, "பாடசாலையில் பொது நிகழ்வுகள் என எனது வீட்டிற்கு வந்த நேரத்தை படிப்பில் செலவு செய்திருந்தால் முதல் தடவையே பல்கலை கழக அனுமதி இவருக்கு கிடைத்திருக்கும்" எனக்கூறியது ஞாபகமிருக்கிறது. திருமதி. சுந்தரராஜா அவர்கள் இறைவனடி சென்றிருந்தபொழுதும் அவர் பற்றிய சுகமான நினைவுகள் என்றும் கதிர் அவர்களின் உள்ளத்தில் பதிந்துள்ளன. நமது நாயகன் ஆசிரியையின் தங்கை பூமணி அவர்களை மணமுடித்து 44 வருடங்கள் பூர்தியாகியுள்ளன. இந்த 44 வருடங்களும் திருமதி. துரைசிங்கம் அவர்கள் தனது கணவனின் சகல தன்னார்வ தொண்டிற்கும் முழு ஆதரவு கொடுத்து வருவது போற்றுதற்குரியது. இவரது இரு பிள்ளைகளும்கூட தந்தையின் தொண்டுகளுக்கு ஆதரவு வழங்குவதுடன் அவர்களும் தந்தைபோல் பொது சேவையில் ஈடுபடுபவர்கள். இவரது பிள்ளைகள் பாமினியையும் ரதினியையும் முதலில் நான் சந்தித்தது ஆறாவது உலக

தமிழ் பண்பாட்டு கழகம் ரொறொன்ரோவில் நடாத்திய சர்வதேச மகா நாட்டில் தொண்டர்களாக. இன்று மனைவி மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் என நிறைவான குடும்ப வாழ்வுக்கு அத்திவாரமிட்டது அவரது தன்னார்வ தொண்டேயன்றி வேறல்ல.

கதிர் அவர்களின் மனித நேயத்திற்கும், பிறர் மேல் கொண்டுள்ள கருணைக்கும், பலன் கருதாது ஆற்றிய பொது தொண்டுகளுக்கும் கிடைத்த பலன் மற்றும் ஒரு திகில் ஊட்டும் நிகழ்வு. அது ஜுலை மாதம் 1983ம் ஆண்டு நிகழ்ந்தது. கணவனும் மனைவியும் நைஜீரியாவில் பணிபுரிந்தவேளை. அவர்களது இரு புதல்விகளும் கொழும்பில் உறவினர்களுடன் வாழ்ந்த காலம். ஜுலை மாதம் 23ம் திகதி 1983ம் ஆண்டு திரு. விக்னேஸ்வரன் அவர்களின் படைப்பில் "சத்தியவான் சாவித்திரி" நாடகத்தில் பங்கேற்றியபின் வீடு திரும்பும் பொழுது பிள்ளைகளுடன் தொடர்பு கொண்டு பேசிய பெற்றோர்களுக்கு அதன் பின் ஜுலை 31ம் திகதி வரை பிள்ளைகள் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. தமிழினப்படுகொலைகள் நடந்த காலகட்டம். பிள்ளைகள் தங்கியிருந்த வீட்டை அண்டிய பகுதிகளில் உயிர் சேதங்கள் இடம்பெற்ற செய்திகள் பெற்றோர்களுக்கு கிடைத்தவண்ணம் இருந்தன. வாழ்க்கை தொலைந்து விட்ட நிலை. அதிர்ஷ்டவசமாக பிள்ளைகளுக்கு எது வித தீங்கும் இடம்பெறவில்லை. இவர்களைக் காப்பாற்றியவர்கள் கதிர் அவர்கள் மனிதநேயத்துடன் மருத்துவ சேவையாற்றிய பாமர சிங்கள மக்கள். "எங்களைக் கொன்றபின்தான் மஹாத்யாவின் பிள்ளைகளை நீங்கள் அணுகலாம்" என கதிர் அவர்களின் தன்னலமற்ற மருத்துவ சேவை பெற்ற வீதியோர வாசிகளான சிங்கள மக்கள் கூறியதாக அறிந்த கதிர் தம்பதியினர் இறைவனுக்கு நன்றி கூறினர்.

அண்மையில் பவதாரணியின் பாரதி ஆட்ஸ் நிகழ்வொன்றில் உரையாற்றும் பொழுது கதிர் அவர்கள் வெளிப்படுத்திய தனக்கு நிகழ்ந்த தனிப்பட்ட சம்பவம் அவரின் தூய்மையை வெளிக்கொணர்கிறது. "பாரதி ஆட்ஸுடன் இணைந்திருப்பதால் நான்தான் பயனடைகிறேன். நான் செய்யும் சிறு சிறு கைங்கரியங்களுக்கு எனக்கு கிடைக்கும் நன்மைகளோ பெரியன. எனது முழங்கால் சத்திரசிகிச்சைக்காக நான் சென்ரெனியல் வைத்தியசாலையில் வைத்தியருடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அந்த வைத்தியசாலையின் பிரதம அதிகாரி எனது வைத்தியரை சந்திப்பதற்காக அங்கு வந்திருந்தார். அவரைக்கண்டதும் எனது வைத்தியர் எழுந்து மரியாதைசெய்து அவரது தேவைகளை விசாரிக்க முன் வந்த பொழுது அந்த அதிகாரி அவரை இடை மறித்து முதலில் இவரை கவனியுங்கள். இவர் நமது வைத்தியசாலைக்காக நிதி சேகரித்துக் கொடுத்த பாரதி ஆட்சின் அங்கம் எனக்கூறி சென்றது என்னை நிலை தடுமாறச் செய்தது." இந்நிகழ்வை பகிரங்கப்படுத்தி பாரதி ஆட்ஸ் குழந்தைகளின் மகத்தான சேவையை உணரச்செய்தார்.

கனடாவில் தான் பங்கேற்கும் அமைப்புக்களில் பவதாரணியின் பாரதி கலைக்கோவிலுடன் இணைந்து செயற்படுவது கதிர் அவர்களுக்கு மிகுந்த மனநிறைவை கொடுக்கிறது என நான் அறிவேன். இந்த கலைக்கோவிலின் மாணவர்களின் நற்பண்பு, ஆசிரியர்களுக்கும் முதியோருக்கும் இவர்கள் கொடுக்கின்ற மரியாதை, இசையில் இவர்களுக்குரிய பற்று, இசையை கற்கும் தேடுதலுக்கான விடாமுயற்சி, ஒழுங்கு செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்கு இவர்களினதும், பெற்றோர்களினதும் மனமுவந்த பங்களிப்பு, இக் கலைக்கோவிலை நிர்வகிக்கும் மதிவாசன் அவர்களின் நிதானமான நெறியாள்கை தன்னை கவர்ந்துள்ளது என பெருமை பேசுவார் நமது நண்பர். பாரதி ஆட்ஸின் றூஸ்வலி மருத்துவ நிலையத்துக்காக நிதிசேர்ப்பதற்கு நடத்திய மரதன் இசை நிகழ்ச்சியும் 22 மாணவர்கள் பங்கு பற்றிய ஜேர்மனி, லண்டன் இசைப்பயணமும் தனக்கு ஏற்படுத்திய அனுபவமும் அதனால் கிடைத்த மனம் நிறைந்த மகிழ்வையும் வாழ்நாளில் மறக்கமுடியாது எனக்கூறுகிறார்.

திரு. கதிர் துரைசிங்கம் அவர்கள் தான் சந்திக்கும் ஒவ்வொருவரையும் தன் வசப்படுத்தும் இயற்றியல்பு கொண்டவர். இதற்கு துணைநிற்பது இவரது ஆளுமையும், கலை இலக்கிய ஈடுபாடும் அதிலுள்ள ஆற்றலும். செய்வன திருந்தச் செய்யவேண்டும் என்பது இவரது மந்திரம். பொது நிகழ்வுகளில் பங்கேற்றபின் அதிலுள்ள குறை நிறைகளை சுயவிமர்சனம் செய்வது இவருக்கும் எனக்குமிடையில் நடக்கும் சம்பிரதாயம்.

கதிர் நல்லவர், வல்லவர், பொய் சொல்லமாட்டார், நேர்மையானவர், கோவிக்கமாட்டார், மற்றவரில் அன்பாய் இருப்பார் என்றெல்லாம் நான் சொல்லமாட்டன். அவரது செயல்கள் அதற்கு கட்டியம் கூறும். ஒன்றுமட்டும் சொல்லுவன்... அவர் எனது நண்பன், மக்களின் தோழன். வேண்டிய நேரம் வேண்டியோருக்கு நாடிச்சென்று தன்னலமற்று சேவையாற்றும் நல்ல மனிதன்.

*மனுவல் ஜேசுதாசன்.*

# எங்கள் நகைச்சுவை மன்னன் - டாக்டர். கதிர் துரைசிங்கம்

சிலரைச் சந்திக்காமல் இருக்கலாம் போல் தோன்றும், வேறுசிலரைச் சந்திப்பது ஒரு கடமை போலிருக்கும். எண்ணிக்கையில் மிகக்குறைந்த ஒரு சிலரை அடிக்கடி காணவேண்டும் போலவிருக்கும். ஆனால் எங்கள் துரையை விட்டுப்பிரிவதே கவலையாக இருக்கும். அவரில் காணப்படும் மிகவும் சிறந்த இயல்புகள் தான் இதற்குக் காரணமாகும். முக்கியமாக அவருடன் சேரந்தோரை எப்பொழுதும் குதூகலமாக வைத்திருப்பது அவரில் காணப்படும் சிறந்த இயல்புகளி லொன்றாகும்.

இவரை நான் முதன்முதலாக நைஜீரியாவில் சொக்கட்டோவிலுள்ள கெஸ்ட் இன்னில் (Guest House) கடதாசி ஆடிக்கொண்டிருக்கும் பொழுது சந்தித்தேன். என்னை அவருக்கு முன் ஒருபோதும் தெரியாதிருந்தும் ஒரு குறும்புச்சிரிப்புடன் "ஏன் நீங்களும் எங்களுடன் சேர்ந்து ஆடலாமே" என்று கேட்டார். அவர் கேட்டமாதிரி என்னால் அவருடன் ஆடமுடியுமோ என்ற ஐயத்தைக் கொடுத்தது.

காலப்போக்கில் அவரின் விவேகத்தின் திறமையை கடதாசி ஆட்டத்தின் மூலம் மட்டுமன்றி பல துறைகளிலும் கண்டுகொண்டேன். இரவிரவாக ஆடினாலும் முகத்தில் எதுவித களைப்புமின்றி சகலரையும் தமாசாக வைத்துக் கொள்வது அவருக்குச் சர்வசாதாரணமாகும். எவரையும் தாக்காமல் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் இயல்பினைப் பெற்ற துரைசிங்கம் சில நாட்களிலேயே தனது பாரியாருடன் அதிபர் கனகசபாபதி வீட்டில் வசிக்க ஆரம்பித்து விட்டார். அவர் ஆசிரியர் மாணவர் என்ற நிலைமை சற்றுத் தடைசெய்வது போல இருந்தாலும் ஆசிரியர் எவ்விதத்திலும் மாணவனுக்குக் குறைந்தவனாகக் காணப்படவில்லை. அது மட்டுமல்லாமல் விகடத்தனத்திலும் மிகவும் உணர்வு காணப்பட்டது.

பட்டம் பெற்ற டாக்டர்கள் பலரை நான் அறிவேன். ஆனால் உண்மையான டாக்டர் துரைசிங்கம் தான் எங்கள் மத்தியில் இன்றியமையாதவனாய் வாழ்ந்து எங்கள் ஒவ்வொருக்கும் மருத்துவத்துறையிலும் வறண்டிருக்கும் சொக்கொட்டோ மாநிலத்தில் மிகவும் நெருங்கிய மருத்துவ ஆலோசகராக மட்டுமன்றி உடனடியாக வருத்தத்திற்குரிய நிவாரணத்தையும் அளிக்கக்கூடியவராக வாழ்ந்து வந்தார்.

இவரின் சிறந்த மருத்துவ ஆற்றலை அறிந்து குமாவு மருத்துவச் சிகிச்சை செய்யும் மனையொன்று இவரை உடனடியாக அங்கு நிரந்தரமாக நியமனம் செய்தது. அங்கு சிறப்பான பெயரும் புகழும் பெற்று வாழ ஆரம்பித்தார். அந்த மருத்துவ மனைப் பொறுப்பாளர்களே இவருக்கும் இவரின் பாரியாருக்கும் ஒரு பெரிய வதிவிடம் எல்லா வசதிகளோடும் கொடுத்து அமர்த்தினார்கள். அவரின் பாரியாரும் குசோ என்ற இடத்திலேயே உள்ள பெரிய பாடசாலை யொன்றில் விஞ்ஞானப் பட்டதாரியாக நியமனம் பெற்று மிகவும் சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார்.

இவர்களின் சீரும் சிறப்புமான வாழ்க்கை எங்களைப் போன்றவர்களுக்கு மிகவும் வரவேற்கத்தக்கதாக அமைந்தது. குசாவு பட்டினம் எல்லோருக்கும் ஒரு மையமாக அமைந்தது, அந்த இடத்தில் இவர்கள் தங்கியிருந்ததும் அவர்களின் பங்களாவும் என்னைப்போல் பலருக்குக் குருசந்திரயோகம். தூங்குவதற்கு இடம், உறங்குவதற்குப் படுக்கை, ரசிப்பதற்கு சங்கீதம், உண்பதற்குப் பூமணியின் ருசியான உணவு - தண்ணீரில்லாத ஊரில் எந்தநேரமும் ஓடிக்கொண்டிருக்கும் குழாய்நீர் வசதி - இவை எல்லாவற்றிற்கும் மேலாக துரையின் நகைச்சுவை கலந்த வரவேற்பு.

இவையனைத்தையும் அனுபவித்த காலம் ஏறத்தாழ கால்நூற்றாண்டு கழிந்தும் இன்னமும் மிகவும் தெளிவுடன் ஞாபகத்திற்கு வந்துகொண்டே இருக்கின்றது. இடை இடையே கனடா வரும்போது துரையையும் அவரது பாரியாரையும் அவர்களின் இல்லத்தில் ஆறுதலாகச் சந்தித்தலும் அச்சந்திப்பு பழைமையை நினைவூட்டுவதாகத் தான் திகழ்கின்றது.

இவரின் நகைச்சுவை பொருந்திய உட்கதை ஒவ்வொன்றிற்கும் சித்திரவடிவம் மிகவும் சிறப்பாகக் கொடுத்து அவை எல்லாவற்றையும் "காதோடு காதாக" என்ற நூலாகத் தொகுத்து வெற்றி மணி ஆசிரியர் சிவகுமாரன் வெளியிட்டிருப்பது அவருக்கு ஒரு பெரும் அணிகலனாகும்.

அவர் இன்று கனடாவில் ஒரு சமூகத்தொண்டனாகவும் எமது பல நண்பர்களின் நண்பனாகவும் வாழ்ந்து கொண்டிருப்பது அறிந்து நானும் எனது துணைவியாரும் பெருமிதப் படுகின்றோம்.


அவர் பல்லாண்டுகள் பல்வேறு சிறப்புக்களுடன் தொடர்ந்து எல்லோருக்கும் உதவியாக வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும்.

***த. புத்திரசிங்கம்***

***லண்டன்***

# என் பார்வையில் இவர்.... எமக்கு ஒரு வழிகாட்டி

ஓம். எங்கள் கதிர் துரைசிங்கத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகின்றேன். பல வருடங்களாக இணைந்து திரிகிறவன், பல மணிநேரம் பேசிக்களிப்பவன் என்ற வகையிலே ஒரு சில குறிப்புக்கள்....


ஒன்றாகப் பயணித்த வேளை

இவர் ஒரு பல்துறை சார்ந்த விற்பன்னர் என்றே சொல்ல வேண்டும். இவர்களுடைய நண்பர்களுக்கும், இவர் சார்ந்த குடும்பங்களுக்கும் இவர் ஒரு Hero. பழகுகின்ற பண்பு, அனுபவம் வாயந்த அறிவுரைகள், வைத்தியர் என்பதால் மற்றவர் மீதுள்ள உடல்நல அக்கறை எந்நேரமும் இணைந்திருப்போரைச் சிரிக்கவைப்பதிலுள்ள நாட்டம், இவ்வியல்பெல்லாம் சேர்ந்துதான் இவரை ஒவ்வொருவர் மனதிலும் நிலைக்கச் செய்கின்றது.

சமூகசேவையாளர் என்று சாதாரணமாகச் சொல்லிவிடமுடியாது. மற்றவர்களுக்கு உதாரணமாகத் திகழும் தனித்துவமுள்ள ஒரு சேவையாளர். இவரை எந்தவிழாவிலும் காணலாம் என்பார்கள். உண்மை, இவர் முன்னின்று நடத்துகின்ற விழாக்கள் பல. இவர் கையில் ஏற்கின்ற விழாக்களில், இவர் காட்டுகின்ற அக்கறை, விழாவின் வெற்றிக்கு வித்திடுகிறது. சீரான திட்டமிடல், கடிகாரத்தின் செக்கன் முள்ளுக்குக் கொடுக்கும் மரியாதை, நேர்த்தியாக நகர்த்தும் ஆற்றல், திடீர் மாற்றங்களை பௌவியமாகச் சமாளிக்கும் வல்லமை, இவைதான் இவர் கைபட்டால் வெற்றிகாணும் விழாக்களில் பரமரகசியங்கள்.

இவர் தன்னகத்தே கொண்ட கலையுணர்வும், கலைத்துறையிலே ஆழ்ந்த அனுபவமும் தான், இவரை ஒரு நல்ல மேடை நாடக நடிகனாக, வில்லுப்பாட்டின் நெறியாளனாக, திரைப்பட குணசித்திர நடிகனாகக் கண்டுகொள்ள முடிந்தது.

இவர் பேனாவில் இருந்து வரும் காஷ்ய உணர்வோடு சிந்திக்கத் தூண்டும் எழுத்துக்கள், எழுத்தாளர் வரிசையில் நிலைக்கச் செய்தது.

இனி எம் குடும்பத்துக்குள் நுழைவோம். அதுதான் எங்கள் மகாஜன பழைய மாணவர் சங்கம். ஆம். இவர் இதனை ஆரம்பித்த ஸ்தாபகர்களில் ஒருவர். சங்கம் ஆரம்பித்து 25 ஆண்டுகளை எட்டிப்பார்க்கிறது. இதுவரைகாலும் தொடர்ந்து இயங்கிவருவதுடன் உபதலைவர், தலைவர் என்ற பதவிகளிலும் இருந்து, தற்போது போசகராகவும் இருக்கிறார். இவர் பதவிக்காலங்களில் செவ்வனே நடத்தியது மட்டுமன்றி, பல அங்கத்தவர்களை இனங்கண்டு உட்கொணர்ந்த பெருமை இவருக்குரியதாகும். தற்பொழுதும் அவ்வப்போது தேவையான உதவிகள் புரிந்து, உரிய அறிவுரைகள் வழங்கி சங்கத்தை வளர்ப்பதற்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறார்.

இவர் வாழும் பொழுதே இவரின் சுயநலமற்ற சேவையைப் பாராட்டுவோம். உரிமையோடு செய்யும் சேவைகளுக்கு நன்றி சொல்லுவோம். நல்ல மனிதனைப் படம்பிடித்துக் காட்டும் உள்ளார்ந்த பண்பினைப் போற்றுவோம். என்றும் எமெக்கெல்லாம் நல்வழிகாட்டியாக நீடுகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திப்போம்.

***நா. சாந்திநாதன்***

***தலைவர், மகாஜன பழைய மாணவர் சங்கம்***

# ஓர் உற்சாக மனிதர்

கனடாவிற்கு புதிதாக வரும் ஒருவர் ரொரன்ரோ பியர்ஸன் விமான நிலைய வரவேற்பு மண்டபத்தில் நின்று கொண்டு பலத்த சத்தமாக உங்களுக்கு கதிர் துரைசிங்கத்தைத் தெரியுமா? என கேட்பாராயின் அங்கிருப்போருள் ஆகக்குறைந்தது ஐம்பது பேராவது தெரியுமே என்ற தோரணையுடன் திரும்பிப்பார்ப்பார்கள். எல்லோருக்கும் தெரிந்தவர் அவர்.
அதே போல கனடாவிலிருந்து ஒருவர் சென்னைக்குச் சென்று அங்கு வெள்ளித் திரை - சின்னத்திரை கலைஞர்கள் பெரிதும் சங்கமிக்கும் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டால் அங்குள்ள பலரும் கேட்கும் கேள்வி நமது கதிர் துரைசிங்கம் நலமா? என்பதுதான்.

**– எல்லோரையும் தெரிந்தவர் அவர்.**
கனடாவில் கலையோடும் கலாசாரத்தோடும் வாழும் ஓர் உற்சாக மனிதர் அவர்.

**சிரிப்பு அவரது சிறப்பு.**
ஒரு மனிதன் சிரிப்பது சிறந்தது என்ற அவரது ஆழ்மனக் கொள்கை பின்னணியிலிருந்த அவரை முன்னணிக்கு கொண்டு வந்தது. உன்னால் நடக்க முடியும் என்றால் நடனமாடவும் முடியும் என்ற நம்பிக்கை முன்னணியிலிருந்த அவரை உச்சத்துக்கு கொண்டு வந்தது. சிரிப்பைச் சிறப்பானதாக்குவதில் சமர்த்தர். சிறப்பானதை சிரிப்புடன் சொல்வதில் சாதுர்யர். யாரையுமே தாளிக்காத நாகரீகமான நையாண்டியால் சிரிப்புக்கும் கௌரவம் சேர்த்து பிரமிக்க வைப்பார்.

**கலை அவரை மேம்படுத்துகின்றது. அவரால் கலை மேம்படுகின்றது.**
அணுகுவதற்கு எளிமையானவர். இங்கிதமாகப் பழகுவார். திறந்த மனதுடன் உதவுவார். சிந்தித்துச் செயற்படுவார். திட்டமிட்டு காரிய சாதனை புரிவார். மற்றவர்களின் உணர்ச்சிகளை மதிக்கும் பரோபகாரி.

**வேறுபாடு பாராதவர்**
நிஜ வாழ்க்கையில் வேண்டியவர் - வேண்டாதவர் - பெரியவர் - சிறியவர் என்ற வேறுபாடு பாராதவர். சறுக்கல் பின்னடைவு தேக்கநிலை தளர்ச்சி - இப்படித் தமிழகராதி சொல்லும் எந்தச் சொல்லும் இவரது பொது வாழ்விற்குப் பொருந்தாது.

**சாதனையாளர்**
மகாஜனா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் அவர் இருந்த காலம் நேசிப்பு மிக்க காலம். தன்னல மறுப்பும் பொது நல பொறுப்பும் கோலோச்சிய காலம். சுயத்தில் சுத்தமும் நோக்கத்தில் தெளிவும் மேலோங்கிய காலம். மகாஜனா வரலாற்றிலேயே ஒரு நிகழ்ச்சிக்காக சீட்டு விற்பனை மூலம் $3000 வசூலித்த சாதனையாளர்.

**தமிழர் தகவலால் வளர்க்கப்பட்டவர்**
அவர் தமிழர் தகவலால் வளர்க்கப்பட்டவர். தமிழர் தகவல் ஆண்டு விழா கொண்டாட்டங்களில் ஆரம்ப முதலே ஆட்சி புரிபவர். ஒரு முறை விழாவிற்குத் தலைமை தாங்கி அற்புதமான தலைமை உரையால் மகுடம் சூட்டியவர். ஆண்டு மலர்களில் கடந்த பத்து வருடங்கள் தன் எழுத்துக்களால் ஆண்டு வருபவர்.

**வெற்றிமணியில் "காதோடு காதாக"**
வெற்றிமணியால் வளர்ந்து கொண்டிருப்பவர். வெற்றிமணியில் "காதோடு காதாக" எனும் பகுதி மூலம் வெற்றியுடன் மணியடிப்பவர். வெற்றி மணி கனடிய இல்லங்களில் வீறு கொண்டு ஒலிக்கக் காரணமானவர். "காதோடு காதாக" என்பது அவரது துணுக்குகளின் தொகுப்பாக வெளிவந்த முதலாவது நூல் மட்டுமல்ல. அதுவே அவருக்கு ஒரு விசாலமான விலாசமுமாகியது.

**நகைச்சுவை நாயகர்**
கனடா, ஜேர்மனி, இங்கிலாந்து, இலங்கை என அவரது சிரிப்பு சிக்கனமாக விஸ்வரூபமெடுத்து நினைக்கும் பொழுதெல்லாம் சிரிக்கவும் வைத்தது. சிரிப்பின் எல்லையில் சிந்திக்கவும் வைத்தது. அவரது நகைச்சுவை யாரையும் கிள்ளி விட்டு எள்ளி நகையாடுவது கிடையாது.

**மேடை நிருவாகி**
எந்த விழாவும் மேடையில் சோபிக்கின்றது என்றால் மேடைக்குப் பின்னால் அவரது உழைப்பும் இருக்கும். வியப்பின்

விளிம்பில் நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்கள் அதே வியப்பின் விளிம்பில் அவரையும் பார்ப்பார்கள். விழாவிற்கு ஒரு வாரம் முன்பாகவே வீடியோ படப்பிடிப்பாளர் உட்பட தொழில் நுட்ப கலைஞர்கள் அனைவரையும் மேடைக்கு அழைத்துச் சென்று விழாவன்று அவர்களின் பணி எங்கெங்கே எப்படி எப்படி அமைய வேண்டும் என்பதை அவர் விபரித்திருப்பது எவருமே அறியாதது.

"ஸ்பொன்ஸர் ரெடி" தான் அவர் இங்கு நடித்த முதல் மேடை நாடகம். கந்தசாமி, செல்வரத்தினம் போன்ற புகழ் பூத்த நடிகர்களை அந் நாடகத்தில் நடிப்பதற்காகக் கூட்டிச்சென்றவரை நடிக்க வைத்தவர் கலகலப்பு எஸ்.கே.தீசன்.

"என்னத்தைச் சொல்லி" அவர் இயக்கிய முதல் நாடகம். "ஆசை ஆசை" என்பது தான் அவர் முதன் முதல் இயக்கி நடித்தது. "உனக்காக எல்லாம் உனக்காக" என்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை இவரது கதையாக்கத்தில் கலைஞர் திவ்யராஜன் வழங்கியிருந்தார்.

புராந்தகனின் "கோடை" நாடகத்தில் மாணிக்க நாயனக்காரராக கலை இதயங்களில் இன்னமும் மங்கல கீதமிசைக்கின்றார். சாந்தி நாதனின் நெறியாள்கையில் அரங்காடல் கண்ட "ஆக்குவாய் காப்பாய்" லண்டன் வரை சென்ற முதலாவது கனடிய நாடகமும் இவர் பெயர் சொல்லும். அதே போல் மதிவாசனின் "வேலி"யிலும் வேலிக்கப்பால் தெரிந்தார் கதிர் துரைசிங்கம்.

ஸ்ரீ முருகனின் "சுகம் சுகமே" மற்றும் திவ்யராஜனின் "உறவுகள்" இவரை வெள்ளித்திரை நடிகராக்கின.

தோலைக்காட்சி விளம்பரங்களில் அவர் தோன்றும் விளம்பரங்களும் உண்டு. அப்பொழுதெல்லாம் கண்கள் அவற்றைப் பார்க்குமாறு கட்டாயப்படுத்தும்.கவன ஈர்ப்புப் போராட்டத்தை இதயம் முன்னெடுக்கும்.

கலைக்காகவே வாழ்க்கை என்பதனையே தன் வாழ்க்கைக் கலையாகக் கொண்டிருப்பவர் மதிவாசன்.

விழா காணும் கதிர் துரைசிங்கமும் விழா காட்டும் மதிவாசனும் வரலாற்றில் வாழ்வர்.
வாழ்த்துகின்றேன்!

***இளவாலை எஸ். ஜெகதீசன்.***



"காதோடு காதாக"
விழாவில்

# கதிர் துரைசிங்கம் எல்லோர்க்கும் அன்பர்

புன்முறுவல் ததும்பிய முகம், அனைவரையும் தன் நளினமான பேச்சினால் மகிழ வைக்கும் ஆற்றல், உள்ளம்போல் உயர்ந்த தோற்றம், தேனீ போன்று எங்கும் சென்று செயலாற்றும் குணாதிசயம், முடியாது என்ற சொல்லை அகராதியிலிருந்து அகற்றும் செயல் வீரர் இப்படிப் பல தன்மைகளைக் கொண்ட நண்பர் கதிர் துரைசிங்கம் இங்குள்ள தமிழர்களுக்கெல்லாம் கிடைத்த சொத்து. ரொறன்ரோவுக்கு இடம் பெயர்ந்து வந்தும் சிறிது காலம் அவருடன் எனக்குத் தொடர்பு ஏற்படவில்லை. தமிழர் தகவல் விருது வழங்கும் வைபவம் நடைபெற்ற காலத்தில் அங்கு ஒருவர் என்னை மிகவும் கவர்ந்து கொண்டார், எல்லோரையுமே கவர்ந்து கொண்டார் எனவும் கூறலாம். சபை முழுவதும் ஓடியாடிக் கடமை செய்து கொண்டிருந்த அவரது செயல் அவரைப்பற்றி அறியத் தூண்டியது. அதிலிருந்தே எமது நட்பு ஆரம்பித்து இன்றுவரை தொடர்கிறது.

இவர் பன்னாலைக் கிராமத்தில் மையிலப்பையில் 06.11.1939 ஆம் ஆண்டு கதிர்காமத்தம்பி - வரதலட்சுமி தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலையில் மேற்கொண்டு பின்னர் உயர் படிப்புக்காக மகாஜனாக் கல்லூரிக்குச் சென்றார். அங்கிருந்துதான் அவரது பல்வேறு ஆற்றல்களும் குணாதிசயங்களும் வளர ஆரம்பித்தன. பொ. கனகசபாபதி ஆசிரியரிடம் கல்வி கற்றதால் பல திறமைகள் இவருக்கும் ஏற்பட்டு மாணவர் தலைவராகவும் திகழ்ந்தார். 1961-1962ல் அப்போதிக்கரி என்னும் மருத்துவக் கல்வியில் தேர்ச்சிபெற்று 1963ல் குருநாகலையில் உதவி மருத்துவராகப் பதவி பெற்றார். தனது தொழிலைத் திறம்படச் செய்து வந்தபோது திரு. முருகேசம்பிள்ளை அவர்களின் மகளான பூமணி அவர்களை மனம் விரும்பி 1968ல் திருமணம் செய்து கொண்டார். அவரும் சென்னைப் பல்கலைக் கழகத்து B.Sc. பட்டதாரி. மாத்தறையில் தொழில் புரிந்தார். பாமினி, ராதினி என்ற இரட்டைக் குழந்தைகளைப் பெற்று இரட்டிப்பு மகிழ்ச்சி பெற்றார். 1978ல் பதவி உயர்வு பெற்று கொழும்பு மத்திய வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டு அக்குபங்சர் (Acupuncture) மருத்துவத்தைப் படித்து தகைமை பெற்றார். 1982ல் பொலிஸ் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். 1982 அக்டோபரில் நைஜீரியாவுக்குச் சென்று சொக்கொட்டோ என்ற பகுதியில் டாக்டர் முகமதீசா மருத்துவ மனையில் செயலாற்றினார்.

அவரது மறு அத்தியாயம் கனடாவில் தொடங்குகிறது. 1987 ஜனவரியில் மொன்றியல் நகரத்தில் வந்திறங்கிய அவரது குடும்பம் ஜூலை மாதம் ரொறன்ரோவுக்கு வந்து சேர்ந்தது. அடுத்த மாதமே ஒரு கம்பனியில் பாதுகாப்பு சேவையாளராக இணைந்து இன்றுவரை தொடர்ந்து அதே பணி, அதே சுறுசுறுப்பு, அதே உற்சாகம் அவரை ஆட் கொண்டுள்ளது. இவர் தொழிலை விட்டாலும் தொழில் இவரை விடா அளவுக்கு தன் மதிப்பினை நிறுவிக்காட்டினார். இப்படியான சேவையாளரை கனடாவில் காண்பது மிக அபூர்வம். படித்த படிப்புக்கும் அவர் செய்யும் தொழிலுக்கும் தொடர்பு இல்லை. எனினும் செய்யும் தொழிலையே தெய்வமாக்கிய கர்மவீரராக அவர் திகழ்கிறார். நண்பர் துரை அவர்கள் "கதிர்" என்ற சொல்லுக்குள் ஒரு மாயா சக்தியை வைத்திருக்கிறார். சூரியன் எனப் பொருள் கொண்ட "கதிர்" அவருக்குப் பெயராகியது மிகவும் பொருத்தமாயிற்று. அந்த சொல்லாட்சி இன்று எல்லோரது வாய்களிலும் உற்சாகமாக ஒலிக்கிறது. அவரது நண்பர்கள் மத்தியில் பல தடவைகள் ஒலிக்கின்றன. மருத்துவக் கல்லூரியில் படித்து மருத்துவராகப் பணி புரிந்தாலும் அவருக்குள் இருந்த கலை கலாசார உணர்வுகள் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்தன. இங்குள்ள மகாஜனாக் கல்லூரி நண்பர்களும், குறிப்பாக அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் உற்சாகமும் இவரை சமூகம் மதிக்கும் ஒரு சமூகத் தொண்டராகவும், கலாரசிகராகவும், நடிகராகவும், விழா அமைப்பாளராகவும், நகைச்சுவை எழுத்தாளராகவும் அடையாளம் காண முடிகிறது.

நண்பர் கதிர் அவர்களின் பன்முக ஆளுமை கூறுதற்குரிய தொன்றல்ல. சிறந்த சமூக சேவையாளர் என்பதே அவரது முழுமை. சேவைக்கென்றே பிறந்தவர் அவர் என்றே கூறலாம். அவரது படிப்பு, படித்த கல்லூரி, பழகிய நண்பர்கள், நைஜீரிய மண் வாசனை, குடும்ப வரலாறு அனைத்தும் இந்த நிலைக்கு அவரை உயர்த்தியிருக்கக் கூடும். சூரியனைப் பார்க்கும் போதெல்லாம் அவரது பெயர்தான் முதலில் வரும். காலம் தாழ்த்துதல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் என்பன அவரிடம் காணப்படாத பண்புகள். நண்பர்களின் பிறந்த நாட்கள் அவருக்கு அத்துப்படி. முதலில் அழைப்பது அவர்தான். வியப்பு மீறும் பண்பு அவருக்குரியது. தமிழர் தகவல் ஆசிரியர் இவரைப்பற்றிக் குறிப்பிடும்போது இறை அருள், அன்பு பெற்றோர் ஆசி, அருமைச் சகோதரர், நேசம், இதயமான மனைவி, பாசம் கனியும் பிள்ளைகள், துணையான மருகர்கள், விழுதான பேரக்குழந்தைகள், மணியான நண்பர்கள் என்று கூறுவார். நண்பரின் ஆனந்த வாழ்வுக்கு வேறென்ன வேண்டும். இதுவே அவரது பரந்த சமூக சேவைக்கான தூண்கள். நண்பர் துரை அவர்கள் சிறந்த பண்பாளர் என்பதை அவரது நட்புணர்வு என்றும் புலப்படுத்தி நிற்கும்.

அதிபர் கனகசபாபதி அவர்களிடம் கற்றாலும் மாணவராகத் திகழ்ந்தாலும் அவரையே நண்பனாக்கி விட்டார். அதிபர் அவர்கள் இவரைப்பற்றிக் குறிப்பிடும்போது, "மிக இங்கிதமாகப் பழகும் பண்பு, எவர்க்கும் உதவும் இயல்பு இவை இரண்டும் துரைசிங்கம் அவர்களின் தலை சிறந்த பண்புகள்" என்கிறார். இது முற்றிலும் உண்மைதான். இந்த இரண்டு பண்புகள் தான் நூற்றுக்கணக்கான நண்பர்களை அவர் பெற உதவின. கவிஞர் கந்தவனம் இவரைப்பற்றிக் குறிப்பிடும்போது,

"பணிவான பண்பினர் மணியான நண்பர்" என்று கூறுவது மிகவும் பொருத்தம். எனது நட்புக்கூட மிக ஆழமானது. புரிந்துணர்வுடன் கூடியது. இறுதிவரை நிலைபேறுடையது. விழாக்களில் கிடைக்கும் படங்களை எனக்கு மறவாமல் தரும் அன்பர் அவர். இவரது வெகுஜனத் தொடர்பு மிகவும் உச்சம் பெறுவது. இங்கு நடைபெறும் எந்தவொரு முக்கிய விழாவிலும் அதனை தமது விழாவாகக் கருதி தம்மாலான உதவிகளை வழங்கி வருவார். சஞ்சிகைகள், பத்திரிகைகள், வானொலிகள், நூல் வெளியீடுகள், கோயில் விழாக்கள் எங்கும் அவரது தொடர்பு நிச்சயமாக இடம்பெறும். இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே தெரிந்து கொள்வார். உண்மையில் நான்கூட அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது வழக்கம். அந்த அளவுக்கு சமூகப் பற்றுக் கொண்ட வல்லாளர்.

கதிர் நகைச்சுவைப் பேச்சாளர் மட்டுமல்ல, சிறந்த நகைச்சுவை எழுத்தாளர். நகைச்சுவைகளை இங்கிருந்து எழுதி வெற்றி மணிக்கு அனுப்பி அதனை 2005ல் நூலாக்கிய பெருமையும் அவருக்குண்டு. "காதோடு காதாக" என்ற பெயரில் வெளியான அவரது நூல் என் தலைமாட்டில் இருக்கும். மனம் சோர்வுறும்போது அதனைத் திரும்பவும் படித்து மகிழ்ச்சியுறுவது எனது வழக்கம். அழகான அந்த நூல் பல பெரிய பெரிய நூல்களை விடவும் சிறப்பானது. மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் இந்நூலைப்பற்றி எழுதுகையில் சிரியுங்கள்...சிரியுங்கள்...விட்டு விட்டுச் சிரியுங்கள், புத்தகத்தை மட்டும் கைவிட்டு விடாதீர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். நானும் கைவிடவில்லை. உடலுக்கு வைத்தியம் செய்த அவர் மனதிற்கும் வைத்தியம் செய்துள்ளார். தாய்வீடு பத்திரிகையிலும் தனது நகைச்சுவை உணர்வுகளை வெளியிட்டு வருகிறார். சிறந்த நடிகர் என்பதனையும் இங்கு வெளியிடப்பட்ட திரைப்படங்கள் உணர்த்தி உள்ளன. மகாஜனாக் கல்லூரி நாடகங்களில் நடிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை அவர் தவறவிடுவதில்லை. நடிகர் சாந்திநாதனுடன் இணைந்து பல நாடகங்களில் நடித்துள்ளார். மகாஜனாக் கல்லூரியில் நடைபெற்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் அவரே அதற்குரிய பிரதியைத் தயாரித்தவர். இதனை கலைஞர் திவ்வியராஜன் வெகு சிறப்பாக நடத்தி முடித்தார். கலைஞர் திவ்வியராஜன் தயாரித்து வெளியிட்ட "உறவு" திரைப்படத்தில் அரச அதிபராகத் தோன்றி அப்பாத்திரத்தை உணர்வு பூர்வமாக்கியவர் அவர். இதற்கும் முன்பதாக ஜெனகன் பிக்சர்ஸ் சிறீமுருகனின் தயாரிப்பான "சுகம் சுகமே" திரைப்படத்தில் குணசித்திர நடிகராகத் தோன்றி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளார். அத்துடன் அத்திரைப்படத்தினை லண்டனிலும் மற்றும் சில இடங்களிலும் அறிமுகம் செய்து வைத்த பெருமையும் அவருக்கு உண்டு. சிறந்த அறிவிப்பாளர் என்ற தகுதியும் அவருக்கு உண்டு. தமிழர் தகவல் விழாக்களில் விருது பெறுபவர்கள் பற்றிய சிறப்புக்களைக் கணீரென்ற குரலில் எல்லோரும் விளங்கும் படியான உச்சரிப்பில் அவர் கூறும் விதமே தனித்துவமானது. இப்படியான வளர்ச்சியூடாக "பவதாரணியின் பாரதி கலைக் கோயில்" அவரை முழுநேர தமது விழாக்களை ஆரம்பித்து நடத்திச் செல்லும் அறிவிப்பாளராகப் பத்து வருடங்கள் பயன் பெற்றுள்ளது. பாரதி கலைக் கோயிலுடன் இரண்டறக் கலந்தவராகி விட்டாரெனவும் கூறலாம். அக்கலைக்குழு செல்லும் இடமெல்லாம் அவரும் கூடவே செல்வது வழக்கம். ஜேர்மனி, இங்கிலாந்து ஆகிய ஐரோப்பிய மண்ணுக்கும் அவர் சென்று திரும்பியவர். இரவு பகல் பாராது இந்த மண்ணில் வாழும் குழந்தைகளை இசைத்துறையில் ஈடுபடுத்தி மகிழ்ந்த அவரது சேவையை எவராலும் மறக்க முடியாது.

இதைப் போலவே மகாஜனாக் கல்லூரியின் வளர்ச்சியிலும் இடையறாது பங்கு கொண்ட இவர் தலைவராகவும் பணி புரிந்துள்ளார். மகாஜனாக் கல்லூரியை இந்த மண்ணில் மகிமைப் படுத்தியவர்களுள் கதிர் தலைமையானவர். "கடவுள் எங்கும் நிறைந்தவர் எல்லாம் வல்லவர்" என்பதே எமது சமய தத்துவம். ஆனால் கனடாவில் மனித உருவத்தில் எங்கும் நிறைந்தவர் எல்லாம் வல்லவராகத் திகழ்பவர் கதிர் துரைசிங்கம். அவரது மகாஜனா நண்பர் து. ஈஸ்வரகுமார், "கால்களில் சக்கரங்கள் பூட்டியிருந்தாலும் இவ்வளவு கடமைகளையும் செவ்வனே செய்து முடிப்பது இலகுவான காரியமல்ல" என்று இவரைப்பற்றிக் கூறுவது முற்றிலும் உண்மையே. பன்னாலைக் கிராமத்திலிருந்து புறப்பட்டு இலங்கையின் பல்வேறு இடங்களில் பணி புரிந்து நைஜீரியா சென்று மொன்றியல், ரொறன்ரோவில் தனது வாழ்வினை அமைத்துக் கொண்ட கதிர் துரைசிங்கத்தின் முழுமையான பரிமாணங்களையும் எவரும் இலேசாகப் பெற்றுவிட முடியாது. சமூக சேவகரான இவர் எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்த குடும்பத்தலைவர். அவரது மனைவி பூமணி, பிள்ளைகள் பாமினி, ராதினி, மற்றும் பேரக்குழந்தைகள், உறவினர் அனைவரையும் அழகாக மலர வைத்தவர் இவர். கதிர் துரைசிங்கம் வாழும் காலத்தில் நாமும் இங்கு வாழ்வதில் எவ்வளவோ மகிழ்ச்சியும் பெருமையும் உண்டு.

***எஸ். பத்மநாதன்***
***சிந்தனைப் பூக்கள்***

# தமிழன் வழிகாட்டியின் வாழ்த்துச் செய்தி

டாக்டர்

நடிகர்

சமூகசேவையாளர்

எழுத்தாளர்

அறிவிப்பாளர்

அப்பாடா!

வாழ்த்த வயதில்லை!

வாழ்த்துகிறேன்

- செந்தி செல்லையா



Nigeria - Muhammadiya Medical Centre with Medical staff

# உதாரணம் ஒன்று

நல்லதொரு நண்பராகவும், ஓர் அன்பான சகோதரர் போலவும் என்னோடு பழகிவரும் கதிர் துரைசிங்கம் அண்ணாவைப்பற்றி நாலு வார்த்தை எழுதவேண்டும் என்றவுடன் உடனடியாக மனதில் உதித்தது அவரது இயல்பிலேயே ஊறிப்போன "'Sincerity" என்ற உயர் பண்புதான். கூடவே இதற்குரிய தமிழ்ப்பதம் என்ன என்ற கேள்வியும் எழுந்தது. கண்ணியம், நேர்மை என்பவற்றுக்கு அப்பால் தூயநோக்கு, எடுத்த காரியத்தில் அக்கறை, அதற்காக உழைக்கும் மனப்பாங்கு என்று பல உதிரி அர்த்தங்கள் இச்சொல்லுள் பொதிந்திருப்பதாக எனக்குப் படுகிறது.

1994ஆம் ஆணடு. மாஹாஜனக் கல்லூரி, கனடா பழைய மாணவர் சங்கத்தின் முத்தமிழ் விழாவில் "மஹாகவி"யின் "கோடை" நாடகத்தை மேடையேற்றிய காலங்களில் இருந்து அவரோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. நாடகத்திற்கென, 1940களில் இலங்கையின் வடக்கே ஒரு சராசரி நாயனக்காரர் வீட்டில் இருந்திருக்கக்கூடிய - தொண்ணூறுகளில் கனடாவில் கிடைப்பதற்கு அரிதான - வெற்றிலைத் தட்டம், அரிக்கன் லாம்பு, கிளிக்கூடு, செம்பு, சுளகு போன்ற பொருட்களை தேடித்தேடிச் சேகரிப்பதிலும், பொதுவாக நாடக மேடையேற்றத்திலும் இவர் காட்டிய கரிசனையும், ஆற்றிய தீவிர உழைப்பும் இன்றும் பசுமையாக நினைவில் நிழலாடுகின்றன. இந்த நாடகத்தில் மாணிக்க நாயனக்காரர் என்ற முக்கிய பாத்திரத்தை ஏற்று இவர் நடித்தும் இருந்தார்.

அன்றிலிருந்து இன்று, நான் அங்கம் வகிக்கும் மனவெளி கலையாற்றுக் குழுவின் "அரங்காடல்" நிழ்வுகளிற்கு ஆலோசனை, உதவி வழங்குவதுடன் வரவேற்பாளராக பணியாற்றுவது ஈறாக, பலதரப்பட்ட பொதுச் சேவைகளிலும், தனிப்பட்ட முறையிலும், அவரது 'Sincerity" யை நேரடியாக அநுபவித்ததும், அதனால் பயன் பெற்றதுமான சந்தர்ப்பங்கள் ஏராளம். அரங்காடலில் "ஆக்குவாய் காப்பாய்" நாடகத்தில் ஒரு சிறந்த நடிகராகவும் தன்னை நிரூபித்திருக்கிறார்.


பொதுக்காரியங்களில் ஈடுபடும் பலருக்கு பணம், பதவி, புகழ், பிரபல்யம் போன்ற உள்நோக்கங்கள் பல இருக்கக் கூடும். தவிரவும், காலப்போக்கில் குழு மனோபவங்களுக்குள் சிக்கி, சீரழிந்து போகிற துர்ப்பாக்கியமும் உண்டு. இவற்றுள் எதற்குள்ளும் அகப்படாமல், வள்ளுவன் பாஷையில் சொல்வதானால், "வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்" என்பதற்கிணங்க "நல்ல விடயங்கள் நல்லபடி நடந்தேற வேண்டும்" என்ற தூய நோக்கோடு செயற்படுபவர்கள் மிகச் சிலரே. அத்தகையோருள் ஒருவர் தான் திரு. கதிர் துரைசிங்கம்.

குடும்ப வாழ்விலும் சரி, பொதுவாழ்விலும் சரி, சீரான ஓர் ஒழுங்குமுறை, எதனையுமே பிற்போடாமை, என்றும் இளைஞராக ஹாஸ்ய உணர்வோடு எல்லோருடனும் பழகும் இனிய சுபாவம், மற்றவர்க்குதவும் மனப்பாங்கு என்று பலவற்றை அவரின் சிறப்பியல்புகளாகப் பட்டியலிட முடியுமாயினும், இவற்றுள் தலையாயதும், நான் அழுத்திக் கூற விரும்புவதும், அவரின் 'Sincerity" தான்.

கனடாவில் எமது சமூகத்தின் பெரும்பாலான பொது அமைப்புகளுக்கு மிகவும் வேண்டியவராகவும், பல "புள்ளி"களை அறிந்தவராகவும், இந்தப் "புள்ளி"களின் அன்புக்குப் பாத்திரமாகவும் இவர் இருப்பதற்கு அடிப்படைக்காரணமும் இதுவே.

முடிவில் "Sincerity" என்பதற்கான சரியான தமிழ்ப்பதம் அகப்படாமல் விட்டாலும் இதற்கு இல்க்கணமாக வாழும் ஒருவரை உதாரணம் கூற வேண்டுமாயின் என்னுடைய விரல்கள் முதலில் சுட்டுவது "துரைசிங்கம் அண்ணா" வாகத்தான் இருக்கும்.

*அ. புராந்தகன்*



ஆழ்ந்த ரசனையில்

# நல்ல நட்புக்கு எடுத்துக்காட்டு

நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே
ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே

\- வெற்றிவேற்கை

நல்லவர்களுடன் ஒருநாள் பழகினாலே வலிமையான பூமியைப் பிளந்து கொண்டு செல்லும் வேரைப்போல அந்த நட்பு உறுதியாகிவிடும். தனக்காக வாழாது, தன்னை மேன்மைப்படுத்தாது, மரத்திற்காக வாழ்வதுதான் வேர். அந்த வேரைப் போன்று வெளியே காட்டிக் கொள்ளாததுதான் கதிர் துரைசிங்கத்தின் நட்பு.

2000ம் ஆண்டில் டாக்டர் கதிர் துரைசிங்கத்தின் மணிவிழாவின் போது நண்பர் என்ற தலைப்பில் கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் கனடாவில் மணிவிழா மலர் ஒன்று வெளியிட்டிருந்தார்கள். அந்தத் தலைப்பு எவ்வளவு பொருத்தமானது என்பதை அவரோடு பழகிய எல்லோரும் கட்டாயம் அறிந்திருப்பார்கள். நல்ல நட்புக்கு உதாரணம் அவர்தான் என்பதில் யாருக்கும் எவ்வித சந்தேகமுமில்லை.

அவரது உயர்ந்த தோற்றத்திற்கேற்ற உயர்ந்த உள்ளம். தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் என்பது போல, வெய்யிலோ, மழையோ, பனியோ விருப்பு, வெறுப்பு எதுவும் அற்றவராய் எங்கே எமது சமூக விழாக்கள் நடந்தாலும் அங்கே எல்லாம் குறித்த நேரத்தில் சிரித்த முகத்தோடு அவரைக் காணமுடியும். அவர் நிற்கும் இடமெல்லாம் கலகலப்பாய் இருக்கும்.

கனடாவிற்கு முதன் முதலாக வந்தபோது எனது மூத்த சகோதரி திருமதி பொ. கனகசபாபதி அவர்களின் வீட்டில்தான் முதலில் தங்கியிருந்தேன். அவர்களின் குடும்ப நண்பராகையால், எனது முதல் விருந்தினராக திரு. கதிர் துரைசிங்கம் தான் வந்து எங்களை வரவேற்றார். வரவேற்றது மட்டுமல்ல உடனடித் தேவைகளை அறிந்து பலவிதமான உதவிகளையும் அவ்வப்போது செய்தார். அன்று தொடக்கம் இன்று வரை எமது குடும்ப நண்பராக எந்த உதவி கேட்டாலும் அவர் செய்யத் தயங்குவதில்லை. மகாஜனன் என்ற உறவும் எங்களை மேலும் வலுப்படுத்தியது. 1988 இல் ரொறன்ரோவில் மகாஜனா பழைய மாணவர் சங்கம் அமைப்பதற்கு முன் நின்று பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர். மகாஜனாக் கல்லூரி 100 ஆண்டு மலரைக் கனடாவில் தொகுத்தபோது அவரைப் பற்றிய ஆக்கபூர்வமான பல விடயங்களை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

சிறந்த குணசித்திர "நடிகரான இவர்" "பல மேடை" நாடகங்களிலும், ஸ்ரீ முருகனின் தயாரிப்பில் எனது திரைக்கதை வசனத்தில் வெளிவந்த "சுகம் சுகமே", "சிவரஞ்சனி", மதிவாசனின் தயாரிப்பில் எனது கதைவசனத்தில் வெளிவரவிருக்கும் "வேலி", பரராஜசிங்கத்தின் தயாரிப்பில் வெளிவந்த "மலரே மௌனமா", திவ்வியராஜனின் தயாரிப்பில் "உறவு" ஆகிய படங்களில் நடித்திருக்கின்றார். இதைவிட அவர் நகைச்சுவை துணுக்குகள் கொண்ட ஒரு நூலும் வெளியிட்டிருக்கின்றார்.

சமீபத்தில் இலங்கைக்குச் சென்றபோது "தினக்குரல்" பத்திரிகைக்கு ஒரு நேர்காணல் கொடுத்திருந்தார். நீங்கள் வாசிக்கும் நூல்கள் எழுத்தாளர்கள் பற்றிக் கூறுங்கள் என்று கேட்டபோது எனது பெயரையும் குறிப்பிட்டு எனது எழுத்துக்கள் தனக்கு மிகவும் பிடித்தமானது என்றும் குறிப்பிட்டிருந்தார். இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் இவர் முகத்துக்கு நேரே புகழாமல் எங்கே சென்றாலும் தனது மனதில் பட்டதை, உண்மையை அப்படியே பளீச்சென்று சொல்லிவிடும் இயல்பு கொண்டவர்.

பவதாரணியின் பாரதி கலைக்கோயில் இன்னிசை விருந்துகளில் எப்பொழுதும் அவரை மேடையில் காணமுடியும். அவர்களின் இசை நிகழ்ச்சியை முன்னின்று நடத்த அவர் தயங்கியதில்லை. கலைக்கோயில் இசைக்குழுவினரை வெளிநாடுகளுக்குப் பொறுப்போடு அழைத்துச் சென்று அந்த நாடுகளில் கனடியத் தமிழர்களின் புகழைப் பரப்பிய பெருமை அவரையும் சாரும். இதே போலத்தான் "உதயன்" பத்திரிகை விழாவானாலும் சரி, "தமிழர் தகவல்" விழாவானாலும் சரி அவரை அங்கே கலகலப்பாகக் காணமுடியும். கொடுத்த பொறுப்பை அப்படியே செய்து முடிப்பதில் மிகவும் வல்லவர்.

சமூகசேவையில் ஈடுபாடு கொண்ட இவர், இதுவரை வாழ்ந்தது போலவே எல்லோருக்கும் நண்பனாக மட்டுமல்ல, மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகளுடன் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்றும் நானும் எனது குரும்பத்தினரும் இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

***குரு அரவிந்தன்***

# Kathir Thuraisingam

I feel privileged to be asked to write a few words about Kathir Thuraisingam whom I have known for well over sixty five years. It is during our primary school days that I met him in school and the friendship began spontaneously due to our common interests and mutual personalities which cemented like adhesive tapes. His home was very near the school Sir Kanagasabai Vidyasalai and his parents expressed their approval and actively promoted our friendship. I used to visit his home on weekends and play with him and his father who taught at the same school used to give us arithmetic sums to do and correct our completed papers. We both enjoyed playing and studying together. His mother and his aunt also showed much love and affection towards me.

Both of us proceeded to Mahajana College, Tellipalai in 1949 continued our studies our friendship got stronger. Kathir had a very amiable personality which won him many friends. His sense of humour is infectious and admired by all including children. One can quote several examples of his jokes but there is one that I cannot forget that happened in our H S C class during physics lessons. Mr. S. Sathiosatha Iyer was the teacher and the class was full waiting for the teacher to arrive. Kathir hurriedly wrote a small piece of poetry about the teacher on a paper and passed it round the class. The poetry had been read by all the students when the teacher arrived .The classroom burst into loud laughter and the teacher was perplexed as to the cause. He demanded that the reason for laughter be told or else the whole class may be sent out and the lesson could be cancelled. One of the students produced the paper with the poem which read thus 'Paalum thezhi thenum paahum paruppum naalum kalanthunakku naan tharuven, Kannadkkarumuhaththu Piramanieye nee enakku powtheeha sikkalai vadivaha solli thaa". Ayyaa master did know whether to laugh or show anger. His face turned reddish and he demanded to know who was responsible for the poem. After some time Kathir volunteered the information that he was responsible and had a smile on his face. Kathir was excluded from that class that day.

When he visited our home in the UK a few years ago our children were young teenagers. Kathir used to amuse them with little jokes and jovial stories. The children used adore him and even now when I mention about Kathir they show there appreciation of his stimulating sense of humour. Kathir has a unique capability to live in any group of people with his rather harmless humour. I have also had a chance to read a compilation of his jokes in book form with great interest.


Another admirable quality that I have observed in Kathir is his desire to help other and serve the needy at their crucial time of need. He will not wait until it is covenient for him but rush to help as soon as possible. The Thirukkural 'Udukkai Elanthavan Kai poal iddukkan kazhaivathaam Nadpu" There is no equal to Kathir on this count. He is always there when a friend needs him.
He has a great sense of community spirit and activates and organises educational activities, music concerts and form fine arts. He keeps in touch with media news papers, television channels and community organisations. Kathir is patriotic about his mother country and has great concern regarding the plight of Tamils in Sri Lanka. He shows a great deal of interest in the old schools where he studied and is a leader of the Mahajana College old student association of Canada.

He has another highly appreciated talent which is acting on stage and cinema. We have been able to see a picture directed and acted along with other actors by Kathir which was shown in the UK and Sri Lanka among other countries where Tamils live. It was a great effort worthy of our appreciation.


One often wonders how he finds time to do all these while being a devoted husband to Poomani, good and caring son to his mother and loving brother to his sisters and brother to his younger sibling in Sri Lanka, a loving father to his daughters and proud grandfather to his grand children. I know for certain that he does not leave any room for complaint from any source.

He was a well respected medical practitioner in Sri Lanka and Nigeria and since coming to Canada continues to work and fills up his time usefully and swells the family coffers. If I were to look for a complete human being Kathir stands tall and clear among all the people I know. I am so delighted to be his friend for so long without a break .Let me wish him a healthy and happy prosperous future and prey to God to shower him with long healthy life.


**Dr. S. Navaratnam MBBS. FRCP, DCH, D.Phys.Med (Eng)**
**United Kingdom.**



இங்கிலாந்தில் காதோடு காதாக



இங்கிலாந்தில்



மருத்துவக் கல்லூரியில்

# காலம் இடம் அறிந்து உதவும் பண்பாளர்

கண்ணன் என் சேவகன் என்று சொல்வதிலும் பார்க்க மேலாக கதிர் எம் சேவகன் என்று உரைப்பது மிக மிகப் பொருத்தமானது. பொதுச் சேவையில் மனநிறைவைத் தானும் பெற்று மற்றவர்களையும் மனநிறைவு கொள்ளவைக்கும் மகத்தான மனிதநேயன் திருவாளர் கதிர் துரைசிங்கம் அவர்கள்.

இடம், காலம் இரண்டையும் சொன்னால் போதும் குறித்த நேரத்திற்கு முன்பே அங்கு வந்திருந்து எமக்கு ஒத்தாசையாக அனைத்துப் பணிகளிலும் தானே முன்நின்று உழைத்து எமக்க உதவிக் கரம் நீட்டும் ஓர் அன்புள்ளம் கொண்டவர் கதிர் துரைசிங்கம் அவர்கள். இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைநிகழ்ச்சியாகட்டும், வாணிவிழாவாகட்டும் அல்லது இசை அரங்கேற்றமாகட்டும் அனைத்திலும் அவர் முன்நின்று எமக்கு உதவிக்கரம் நீட்டும் ஒரு உன்னத பண்பாளனாக நாம் அவரைக் காணலாம். எந்தவித பிரதியுபகாரமும் எதிர்பாராமல் அவர் நடந்துகொள்ளும் பாங்கு அவரிடம் எமக்குள்ள மதிப்பையும், பற்றுதலையும் அதிகரித்துள்ளது.

அவரிடம் காணப்படும் மிக உன்னதமான கொள்கையும் நடைமுறையும் அவர் யார்? இவர் யார்? என்றோ அல்லது அவர் எந்த அணி அல்லது இவர் எந்த அணி என்றோ பாகுபாடு காட்டாது எல்லோருடனும் ஒத்துப்போகின்ற ஒரு மனிதப்பண்பு. இது எல்லோரிடமுமே காணப்படுவதில்லை. ஆனால் இவற்றை நாம் கதிர் துரைசிங்கத்திடம் காண்கின்றோம். அவருக்கு எதிரி என்றோ அன்றிப் பகைவர் என்றோ அல்லது வேண்டாதவர் என்றோ யாரையும் விரல் சுட்டிக் காட்டமுடியாத அளவிற்கு அனைவரோடும் அன்பாகப் பழகுவதோடு மட்டுமன்றி அவரவருக்கு என்ன தேவை எந்தச் சந்தர்ப்பதில் என்பதனை உணர்ந்து அந்த இடத்தில் முன்நின்று உழைக்கும் நட்பு உள்ளம் கொண்ட அவருக்கு "நட்பாம் கிளமை தரும்" என்பதற்கமைய எல்லோருமே நண்பர்கள். வயது வேறுபாடின்றி அனைவரோடும் அன்பாகப் பழகம் பாங்கு அவருக்குப் பெருந்தொகையான நண்பர்களைப் பெற்றுத் தந்துள்ளது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேலாக அவர் கனடிய மண்ணில் பல்வேறு அமைப்புக்களோடு இணைந்து செயற்பட்டு வருகின்றார். அவரது பணி எங்கெங்கு தேவைப்படுகின்றதோ அங்கெல்லாம் அவரைக் காணமுடியும். கலை நிகழ்ச்சிகள் எங்கெங்கு நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் அவரது பிரசன்னமும் சேவையும் காணப்படும். உதயன் விழா, பாரதி கலைக்கோயில் நிகழ்வுகள், தமிழர் தகவல் விழாக்கள், தமிழ் இலக்கியத் தோட்டத்தில் விருது விழா மட்டுமன்றி ஆலயங்களில் நடைபெறும் விழாக்களிலும் அவரைக் காணலாம்.

எங்கிருந்தோ வந்தான் கண்ணன்.... என்னும் பாடலுக்கேற்ப எமக்குக் கேட்டவரம் அளிக்கும் கண்ணனாக மேடை நிகழ்ச்சிகளுக்கு வேண்டியவற்றைச் செய்து தரும் கண்ணனாக திருவாளர், கதிர் துரைசிங்கம் இருப்பது நாம் பெற்ற நற்பயனே எனலாம். மேடை நிகழ்ச்சிகளை மிக கச்சிதமாக தாமதமின்றி நடத்துவதற்குத் தன்னாலான உதவியினைச் செய்வது அவரிடம் இயல்பாகக் குடிகொண்டுள்ள பண்பாகும். மேடைக்கும், நிகழ்ச்சி நடத்துபவர்களுக்கும் இடையே ஒரு ஊடகமாக அவர் செயற்படும் அந்தச் செயற்திறன் எம்மை மனங்குளிரவைப்பதோடு சற்று மனம் பதட்டப்படும் போது அவர் அந்த இடத்தில் நின்று செயற்படுவது எமது பதட்டத்தைத் தணித்து நிகழ்வு மிகவும் செவ்வையாக நிகழ்ந்தேற உதவி செய்கின்றார் என்றால் அவரது உதவி காலத்தால் மாணப்பெரிதாகவே அமைகின்றது. நன்றி மறப்பது நன்றன்று என்பதனை மனதில் கொள்ளுதல் வேண்டும்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு - குறள்

என வள்ளுவப் பெருந்தகை சொல்லிப்போந்த பொய்யாமொழிக்கமைய உள்ளத்தால் அவரது நன்றியை நாம் பாராட்டினாலும் அவரது பணிக்கு ஒரு பாராட்டுவிழாவை முன்கூட்டியே செய்திருக்க வேண்டும் என்பது எனது ஆதங்கம். இன்று பாரதி கலைக்கோயில் அதிபர் திரு. மதிவாசன் அவர்கள் அந்த நிகழ்வினை மிகச் சிறப்பாகச் செய்ய முன்வந்திருப்பது பாராட்டப்படவேண்டியதே. ஒருவர் உயிரோடு வாழுங் காலத்தில் அவரைப் பாராட்டுவதனால் அவரது உள்ளம் உவகை கொள்கின்றது. அதனால் அவர் செய்த பணிகளின் பிரதிபலனை அவர் அறுவடை செய்யும் வாய்ப்புக்கிட்டுகின்றது. அதனால் உள்ளத்தில் உவகையும், பூரிப்பும் ஏற்படுகின்றது. இந்த நிலைமை அவரை மேலும் பொதுவாழ்வில் ஈடுபடத் தூண்டுவதாக அமைவதோடு அவர் செய்யும் பணிக்கு உள்ள மதிப்பும் அளிக்கப்பபடுகின்றது. பாரதி கலைக்கோயில் அதிபர் திரு. சீனிவாசகம் மதிவாசன் அவர்கள் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளமை மிகவும் பொருத்தமானதும் உயர்ந்த தன்மை கொண்டதாகவும் அமைகின்றது. நாங்கள் இதனை முன்கூட்டியே செய்யவில்லையே என்ற ஆதங்கத்தையும் எமது உள்ளத்தில் ஏற்படுத்துகின்றது.

இந்த பாராட்டு நிகழ்வில் எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருப்பது நான் பெற்ற பாக்கியமே! உயிரோடு இருக்கும்போது அவரை நேரடியாகவே பாராட்டி வாழ்த்தும் நற்பயன் கிட்டியுள்ளது. அதற்கு விழாக்குழுவினருக்கு நன்றிக்கடப்பாடுடையேன்.


***இன்னிசை வேந்தர் – பொன். சுந்தரலிங்கம்***

***இளங்கலைஞர் மன்றம் – கனடா***

## K.Thuraisingam - the Multi-Talented Mahajanan

I deem it a great pleasure and honor to offer my congratulations and felicitations to my devoted old student, Mr. K. Thuraisingam on this occasion when we are celebrating his manifold contributions and achievements to the greatness of his Alma Mater, Mahajana College, Tellippalai and to the Tamil Diaspora in Canada.

Hailing from Pannalai, Tellippalai, he comes of a distinguished family held in high esteem by the people of Vali-North, Jaffna. His father, the late Mr. K. Kathirgamathamby, had been the reputed Head-Master of Pannalai Sir Kanagasabai Tamil Vidhiyasalai, himself, a Tamil Scholar and devout Hindu, well-versed in Tamil Literature and Hindu Scripts. To him belong the greatness of having organized the First-ever Conference celebrating the greatness of the Hindu Saint, Sekkilaar, in Pannaalai attended by learned Scholars and Hindu Dignitaries of that time. The last two days of this conference was presided over by no less important persons than the late Sir Kanthaiah Vaithianathan , the then Permanent Secretary of the Ministry of Public Administration, Sri Lanka, and by the Colossus of Education, the late T.T. Jeyaratnam, the then Principal of Mahajana College, Tellippalai. Mr. Thuraisingam, during these formative years of his youth was deeply influenced by the leadership qualities of his revered father whose exemplary parental guidance impregnated his son with skills of leadership and with a spirit of service to his compatriots. This quality of leadership which he imbibed from his loving father enabled him to gain recognition and precedence in Assemblies of Eminent Men of Learning and of outstanding Achievements in the future.



பழைய மாணவர் சங்கத் தாபகர்களுள் ஒருவராக

Mahajana stands proud of him. He continues to be the pillar of strength of Mahajana O.S.A, Canada since its inception twenty four years ago. During his tenure of Presidency, the membership of the Mahajana O.S.A rose up by leaps and bounds.

A versatile Speaker, Writer, Social-Worker and Actor on the stage, he has endeared himself to us by his amiable ways and continues to be a source of inspiration for all of us. He has been gifted with an innate ability to organize functions for worthy causes, to preside over functions and to moderate events at functions and to introduce Guest-Speakers to the audience; in this task, he evokes the fun and laughter of the attendees at the meetings by narrating for their enjoyment and enlightenment stories and anecdotes always full of humour and thought provoking morals; Indeed, he is a multi-talented accomplisher worthy of remembrance by us forever!

Our Greetings and Appreciation go to his devoted wife, Mrs. Poomany Thuraisingam and their loving daughters, Mrs.Bhamini Sathish, Mrs. Rathini Varathan and their families who have been a source of strength and support for him in all his endeavours.

My wife, Mrs.Muthunayaki joins me in invoking Bhagavan"s Blessings on Mr. and Mrs. Thuraisingam and their families for their Excellent Health and all Success in all the years to come.

M. Kathigesu
Fmr. Chairman, T. C, Kankesanturai, Fmr. Teacher, Mahajana.

# கதிரா? துரையா?

துரையென்றால் பலர் தூர விலகி விடுவாரென நினைத்து, கதிர் என்று அழைப்பதை அன்பாக ஏற்றுக்கொண்டவர் நண்பர் துரைசிங்கம். கனடாவில் கதிர் என்றால் கலையுலகம் கைகாட்டும் அளவுக்கு அறிமுகமான அறிவிப்பாளர்.

கதிரும் நானும் தெல்லிப்பபழை துரையப்பா பிள்ளையின் கல்லூரி மாணவர்கள். அது தான் மகாஜனக் கல்லூரி. நாம் இருவரும் வாழ்ந்த சுற்றாடலும் மிக அயலாக அமைந்திருந்தது. தந்தை கதிகாமத்தம்பி அவர்கள் தலைமை ஆசிரியர், நன்கு தெரிந்தவர். இதைவிட முக்கியமானது இவரது இளவலும், நானும் ஒரே திணைக்களத்தில், ஒரே விதமான கடமையில் இருந்தோம். எனவே கதிருடனான நட்புறவில் கிழிசல் ஏற்படாது இருந்தது.

இருவரும் ஒரே வகுப்பில் படிக்கவில்லை, அன்றும் இன்றுபோல் கல்லூரியில் வயதிற்கு ஏற்ற வயிறு குலுங்க வைக்கும் துணுக்குகள் சொல்வதில் சாமர்த்தியமானவர். துணுக்குகளை சொல்லி விட்டு இலை மறை காயாக இருந்து விடுவார்.

கல்லூரிக்காலம் முடிந்தபின் எமது சந்திப்பு மிகவும் குறைவு. இருவரும் வெவ்வேறு பணிகளில் இருந்தமையே காரணம். அதுவும் இவர் நைஜீரியாவில் இருந்தகால விடயங்கள் இவர் தம்பி மூலம் காலத்துக்கு காலம் அறிந்துகொண்டேன்.

கதிர் கனடாவுக்கு வந்த பின் தான் நானும் கனடாவுக்கு வந்தேன். என்னைச் சந்திக்க வந்த முதல் நண்பன் இவர். அன்று தொட்டு இன்று வரை மாணவ கால நண்பராக பழகி வருகிறோம். இன்று இங்கு வசிக்கும் மகாஜனாவின் மூத்த மாணவர்களில் நாம் இருவரும் அடங்குவோம். எமது கல்லூரி நிகழ்வுகளிலும் ஏனைய பொது நிகழ்வுகளிலும் தவறாது சந்திப்போம்.


எவருடனும் இலகுவாகவும், நிலைமைக்கு ஏற்றபடி நடந்துகொள்ளும் தன்மை கொண்டவர்களில் இவர் ஒருவர். ஒருவருக்கு நன்மையாக அமையுமானால் தனது நிலையை அல்லது கொள்கையை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு அடுத்தவரிடம் தூது போய் விடயங்களைச் சீர்படுத்தும் தன்மை கொண்டவர். அதில் கதிர் மிகவும் சாணக்கியர். அன்றைய சாணக்கியர் இன்று இருந்தால் இவரை சாணக்கியை என்று சொல்வார். சாணக்கியமாக எதிரும் புதிருமாக உள்ளவர்களுடன் மிகவும் இலகுவாக பழகிக்கொள்வார். இது இவரின் தனித்தன்மை.

"தூற்றுபவர் தூற்றட்டும், போற்றுபவர் போற்றட்டும்" என்ற கருத்தைப் பின்பற்றும் நண்பர், பகைத்தல் தெரியாது பக்குவமாக நடந்து கொள்வதில் பண்பு உள்ளவர்.

கனடாவில் கலை நிகழ்வுகள் என்றால் கதிர் ஏதோ ஒரு வடிவில் அங்கு அவதாரம் எடுத்திருப்பார். கவசகுண்டலம் கர்ணனுக்கு எப்படியோ கலைக்கவசம் கொண்டவராக காட்சி தருவார். எல்லா அரங்குகளும் ஏற்றிடும் கதிர் வண்ணன். அரங்கங்களில் அழகாக அடைமொழி முன் வைத்து கலைஞர்களை அழைத்து அறிமுகம் செய்வதில் தனித்துவமான தனிச்சிறப்புடையவர்.

பாரதப்போர் நடக்குமென்று தெரிந்தும் தூதுவராக நடித்தவர் பரந்தாமன். இவர்கள் இணையமாட்டார்கள் என்று தெரிந்தும் இணைக்க நினைப்பார் இந்த கனடா கண்ணன். கதிர் ஒலி கடல் கடந்தும் மேடைகளிலும் காதோடு காதாகவும் ஒலிக்கிறது. அவரது ஒலி தொடர்ந்து ஓங்கி ஒலிக்கட்டும்! எமது பாராட்டுக்களும் வாழ்த்தும்! நீண்டு வாழட்டும் வளத்துடன்.

***க. முத்துலிங்கம்***



# இன்சொல்லன் இன்முகத்தன் இனிய சமூகசேவகன் நண்பர் துரைசிங்கம்

ரொறன்ரோவில் வாழும் சான்றோர்கள் மிக அன்பாகவும் பண்பாகவும் நம்பிக்கையோடும் பழகும் மாந்தருள் நண்பர் துரைசிங்கமும் ஒருவராவர். சிரித்த முகத்துடன் எப்போதும் கலகலப்பாகப் பேசி மற்றவர்களை மகிழ்விக்கும் இன்சொற் பிரியன். "சிரித்து வாழ வேண்டும் சிரிக்க வாழக் கூடாது". சிரிப்பு ஒருவரது ஆரோக்கியத்திற்கு மிகவும் இன்றியமையாதது. மருத்துவராகக் கடையாற்றியதாற் போலும் துரைசிங்கம் அவர்கள் சிரிப்பு மருத்துவத்தை மற்றவர்களுக்கு அளித்து வருகிறார் எனலாம். பகிடியாகப் பேசி எல்லோரையும் சிரிக்க வைக்கும் பண்பு துரைசிங்கம் அவர்களிடம் காணப்படும் தனித்துவமாகும். அவர் பகிடி கூறுவது மட்டுமன்றி இனிமையாகப் பேசி எல்லோரையும் தன் பக்கம் கவரும் ஆற்றல் படைத்தவர். அதனால் அவர் வள்ளுவர் கண்ட மானுடனாகத் திகழ்கிறார்.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு
அணியல்ல மற்றுப் பிற. (திருக்குறள் 95)

நண்பர் துரைசிங்கம் அவர்களைக் கண்டாலோ அல்லது அவரது பெயர் பேசப்பட்டாலோ "காதோடு காதாக" என்ற அவரது பகிடிகளின் தொகுப்பு நூல் நினைவுக்கு வரும். தனது பகிடிகளை அவ்வப்போது பத்திரிகைகளில் அவர் எழுதி வந்துள்ளார். ஜேர்மனி நாட்டிலே வெளிவரும் "வெற்றி மணி" என்ற பத்திரிகையில் தொடர்ச்சியாக அவரது பகிடிகள் கேலிச் சித்திரங்களுடன் வெளிவரலாயின. தான் அனுபவித்துப் பெற்ற சொந்தமான பகிடிகளையும் தான் அறிந்த பகிடிகளையும் வாசகர்களின் நன்மை கருதி சேகரித்துத், தனி நூலாக வெளியிட்டு அவற்றை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அந்நூலை இடையிடையே நான் வாசித்து மகிழ்வதுண்டு.

நட்புரிமை கொண்டாடுவதில் துரைசிங்கம் நிகரற்றவர். நான் கனடாவிலேதான் துரைசிங்கம் அவர்களுடன் அறிமுகமானேன். அதிபர் கனகசபாபதி அவர்களின் ஆப்த நண்பர் அவர். எப்போதும் இருவரையும் ஒன்றாகவே சந்திப்பேன், பேசுவேன், பழகுவேன். பார்த்தசாரதி போன்று அதிபருடன் அவர் எப்போதும் காட்சி தருவார். அதிபர் மூலமாக துரைசிங்கம் அவர்களின் நட்பைப் பெற்றுக் கொண்டேன். நட்பெனப்படுவது, சிரிப்பதற்கும் பொழுது போக்குவதற்கும் மட்டும் உரியதன்று. இயலும் போதெல்லாம் மற்றவருக்கு உதவி செய்வதே நட்பு. நட்புக்கு இலக்கணமாகவும் துரைசிங்கம் விளங்குகின்றார்.

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லுவாய் உன்னும் நிலை (திருக்குறள் 789)

அவர் பலருடன் மிக நெருக்கமாக நட்புடன் பழகுவதை அவதானித்திருக்கின்றேன். அந்த அவதானிப்பிலும், எனது எண்ணத்திலும் அவரது நட்புறவின் அடையாளம் அல்லது வெளிப்பாடு பயன்கருதா நட்பாகவே அமைந்திருப்பதைப் பார்த்திருக்கின்றேன்.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் மக்கட் பண்பாளர் நம் சமூகத்தில் அரிதினும் அரிதாகவே காணப்படுகின்றனர். புலம்பெயர்ந்து வாழும் இக்கனடா நாட்டிலே பொதுப்பணிக்காக நேரத்தை ஒதுக்குவோர் நம்மிடையே மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். தானுண்டு தன் குடும்பம் உண்டு என வாழ்வதால் வாழ்க்கையில் என்ன பயனைத்தான் காணமுடியும்? எதனைத்தான் சாதிக்க முடியும்? "நில்லா உலகின் நிலையின்மை கண்டறிந்தோர் தம் புகழ் நிறீத் தாம் மாய்ந்தனரே" என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளும் ஈண்டு நினைவுக்கு வருகின்றன. பொதுப்பணிக்கு அழைத்தால் "வேலை வேலை" என்று ஒதுங்குபவர்களின் மத்தியில் அறுபதுகளைத் தாண்டியும் பொதுப்பணிக்காகத் தனது பெரும்பாலான நேரத்தை ஒதுக்கி அதில் இன்பங் காண்பவர்களில் துரைசிங்கமும் ஒருவராவார்.

ரொறன்ரோவில் நான் அறிந்த சுமார் இருபது ஆண்டு காலம் முதலாக துரைசிங்கம் அவர்களின் சமூகப் பங்களிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்றே வந்துள்ளது. தமிழர் நடத்தும் கலைவிழாக்கள், கருத்தரங்குகள், மகாநாடுகள், இசை நடன அரங்கேற்றங்கள், கலை மன்றங்கள், கலைக்கல்லூரிகளின் ஆண்டு விழாக்கள் முதலான நிகழ்ச்சிகளிலே துரைசிங்கம் அவர்கள் அந்நிகழ்ச்சிப் பொறுப்பாளர்களுடன் இணைந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பதில் எப்போதும் முன்னணியில் திகழ்வார். முக்கியமாகப் "பவதாரணியின் பாரதி கலைக்கோயில்" கலைப்பள்ளியின் கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் அவரே முன்னின்று உழைத்துவருதையும் குறிப்பிட வேண்டும். அக் கலைக்கோயிலுடன் நெருங்கிய ஈடுபாடுள்ள துரைசிங்கம் அவர்கள் இக்கலைப்பள்ளி மாணவர் இலங்கை, இந்தியா, மற்றும் ஐரோப்பா நாடுகளுக்குக் கலைப்பயணம் மேற்கொண்டபோது அவர்களுடன் தானும் சென்று அவர்களுக்கு உதவியாகச் செயற்பட்டவர் என்பதையும் குறிப்பிடுதல் பொருத்தமாகும். அத்துடன் தமிழிலும் ஆங்கிலத்திலும் மேடை நிகழ்ச்சிகளை அறிவிப்புச்


செய்வதிலும் (Master of Ceremony) அவர் வல்லவராக விளங்குகிறார்.

துரைசிங்கம் அவர்கள், பதிவு செய்யப்பட்ட மருத்துவச் செயலராக (R.M.O) இலங்கையின் பல பகுதிகளிலும் பணியாற்றியவர். பின்னர், நாடு கடந்து நைஜீரியாவிலும் பல ஆண்டுகள் தொழிலாற்றியவர். மக்களுடன் நேரடியாகப் பழகுவதற்குரிய வாய்ப்பினை மருத்துவப் பணி இவருக்கு வழங்கிற்று. நோயாளர்களுடன் இன்முகத்துடன் இனிமையாகப் பேசி மருத்துவம் செய்வதிலேயே மருத்துவரின் வெற்றி தங்கியுள்ளது. அவ்வகையில் பக்குவப்பட்டனவே துரைசிங்கத்தின் தனித்துவப் பண்புகளாகும்.

துரைசிங்கம் அவர்கள் சிறந்த நாடக நடிகர். ரொறன்ரோவில் இடம்பெற்ற பல நாடகங்களில் அவர் பாத்திரமேற்று நடித்திருக்கிறார். கனடாவில் தயாரிக்கப்பட்ட இரு திரைப்படங்களில் நடித்த திரைப்பட நடிகரும் ஆவார். தொலைக்காட்சி விளம்பரத்திலும் பங்குபற்றியுள்ளார். இவ்வாறு ஊடகங்கள், கலைத்துறை முதலியவற்றோடும் கலைஞர்களோடும் தன்னை இணைத்துக் கொண்டுள்ள துரைசிங்கம் அவர்கள் ஜனரஞ்சகமுள்ள ஒரு மனிதராகக் கனடாவில் திகழ்கிறார். உலகில் நல்லவர்கள் பலர் வாழ்வதாலேயே இவ்வுலகம் நிலைத்திருக்கிறது என்பது வள்ளுவர் வாக்கு.

*"பண்புடையார்ப் பட்டுண்டு உலகு"*

*பேராசிரியர். இளையதம்பி பாலசுந்தரம்*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,*
*தமிழ்த்துறை, கனடா வளாகம்.*



சேர் சபாரத்தினம் அருட்குமரன் வருகை தந்தபோது

# கோடை நாடகத்தின் நாயனக்காரர் 'இவர்'

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவது என்பது இழுக்கு.


என்ற திருக்குறள் துரைசிங்கத்தின் தாரக மந்திரம். துரைசிங்கம் தூணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார் திரும்பினாலும் நிற்பார். கண்மூடினாலும் உறங்கார். எங்கும் நிற்கும் ஆற்றல் அவரிடம் உண்டு. களங்கம் இல்லாத சிரிப்பால் குழந்தை முதல் முதியோர் வரை கவரும் சிறப்பும் கவர்ச்சியும் மிக்கவர். எடுத்த கருமத்தை சிறப்பாகச் செய்யவேண்டும் என்பதில் அதீத அக்கறையும் கவனமும் உடையவர். நேர்மையானவர், நேர்த்தியானவர் மகாஜனாவிலும் நிற்பார். மனவெளியிலும் உறைவார். தில்லைச்சகூத்தரை ஒத்த ஒர் ஒட்டக்கூத்தரே இவர்!




குடும்பம் என்ற நிறுவனம் குலையாமல் ஒன்றுகூட்டிப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளை வாஞ்சையுடன் கவனிப்பதற்கான தூண் என நிற்கும் பூமணித் துணையுடன் மிக நெருக்கமான உறவுப் பிணைப்பைக் கொண்டவராக பலருக்கும் எடுத்துக்காட்டாக காட்டும் குடும்ப உறவுகளை கட்டிக்காக்கும் பெருமைக்கு உள்ளானவர்.

"அப்போதிக்கரியான என்வாழ்வு இப்படியாகிவிட்டதே" என அலுத்துச் சலித்து ஏங்கும் எம் கனடாத் தமிழரிடையே கதிர் துரைசிங்கம் கவலையற்ற காவலராக வாழ்ந்து "செய்யும் தொழிலே பெருந்தனம்" என்று திடமான, சந்தோசமான, கவலையற்ற வாழ்வை வாழ்ந்து காட்டுபவர்.

நவீனமயமாக்கலுக்கு உட்பட்டு பொருள் தேடும் போக்கின் இரண்டாம் கட்டமாக எழுபதுகளில், குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்களுக்கு ஆபிரிக்க நாடுகளுக்கு செல்லும் போக்கு காணப்பட்டது இதற்கு யாழ்ப்பாணத்தவரின் ஆங்கிலக்கல்வி உறுதுணையாக இருந்தது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சிங்கப்பூர் மலேசியாவிற்கு யாழ்ப்பாணத்வர் பலர் 'கிளறிக்கல்' சேவகராகச் சென்று பொருளீட்டிய நிலைமையை நாம் அறிவோம். இவர்களில் சிலர் யாழ்ப்பாணம் மீண்டனர். பலர் அங்கேயே தங்கினர். தங்கள் புத்திரச்செல்வங்களின் விவாகத்திற்காக மீண்ட குடும்பங்கள் சில. சிங்கப்பூர் பென்சன்காரர் மலேயாப் பென்சன்காரர் என அழைக்கப்பட்டனர். சென்றவர்களில் பலரும் மலேசியா - சிங்கப்பூரில் தங்கி காணிகளை வாங்கி பொருளாதார மேம்பாட்டைக் கண்டு நிரந்தரக் குடிகளாகினர். அவர்களுக்கான தமிழ், தென்னாசியச் சூழல் அங்கே களைகட்டியிருந்தமையும் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் நிரந்தரமாக இருப்பதற்கான நிலைமை காணப்பட்டது. போலாலம்பூரில் காணப்படும் ருவின் ரவர் என்பது இதற்கான ஒரு முத்திரையாகும்.



"ஆசை ஆசை" யில்

இரண்டாவது புலம்பெயர்வு ஆபிரிக்காவை நோக்கியதாக இருந்தது. நைஜீரியா, சாம்பியா ஆகிய ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்றோர் அங்கு தங்குவதற்கான பண்பாட்டுச்சூழல் காணப்படாமயால் தங்களுடைய குழந்தைகளின் கல்விவாய்ப்பை முன்நிறுத்தி கனடாவை நாடினர். இச்சந்தர்ப்பத்தில் இலங்கைக்குத் திரும்பிச் செல்லும் சூழ்நிலையும் யுத்த அனர்த்தங்களால் பாதகமாக இருந்தபடியால் ஆங்கில கல்வி படைத்த இலங்கைத் தமிழர்களான இவர்கள் கனடாவில் காணப்பட்ட புலம்பெயர் மக்களுக்கான வரவேற்பினால் அங்கே சென்று தமிழ்ச் சூழல் அமைந்த ரொறன்ரோ மாநகரில் குடியேறினர். இவ்வாறு வந்தவர்களில் ஒருவர்தான் கதிர் துரைசிங்கம்.

"போரூர் எல்லாம் ஒரூர் என்னும் ஆரூர்" - அப்பர் அடிகளுடைய இத்திருவாக்கு துரைசிங்கம் வாழ்விலும் ஒரு வாக்காக அமைந்துள்ளது. இத்தகைய அக நிலைச் சமுதாயச் சித்தியாளர்கள்தான் தாழ்வியல் சீர்கேடுகளை எடைபோடக்கூடியவர்கள். அகநிலைச் சமுதாய வெற்றியினால் முதன்மை பெறுகின்றார்கள். அதனால் புனிதர்களாகின்றார்கள். அத்தகைய புனிதத்தினால் தான் அவர்களால் புறநிலைச் சமுதாயச் சீர்கேட்டை அறியவும் உணரவும் செம்மைப் படுத்தவும் முடியும். இதனைத் தொண்டுச் சேவையை செய்யும் கதிர் துரைசிங்கம் பெற்றிருக்கின்றார்.

சுறுசுறுப்பு என்றால் கதிர் துரைசிங்கம்தான். எங்கும் எந்நேரத்திலும் கதிர் இளைஞர் போல பம்பரமாக சுழல்காற்றில் சுழன்று சுழன்று வேலையும் சேவையும் செய்வது பலரது கண்களிலும் பட்டுச்செல்வது உறுதி. உறுதியான உள்ளமும் திடகாத்திரமான உடல்வலுவும் மரக்கறி மனிதத்தின் இயங்கு சக்தியின் இரகசியங்கள்.

1994 "மகாகவியின் கோடை" நாடகத்தின் மூலம் பிரதம நடிகையான எனக்கு "இவர்" ஆக அறிமுகப் படுத்தப்பட்ட பிரதம நடிகர், நாயனக்காரர்தான் துரைசிங்கம். நாடகம் நடித்த அனுபவமே இல்லாத என்னை கோடை நாடகத்தில் நடிக்கவைத்து, சூசைதாசனால் மேடையில் சிறந்த நடிகைப் பட்டம் பெறவைத்த மகாஜனாவின் புகழ் பரப்ப நீண்ட நெடுநாளாக உழைத்து வரும் அதிபர் கனகசபாபதி, அதை அழகாக நெறியாளுகை செய்து வெற்றி கண்ட புராந்தகன். அழகிய நட்டுவக்காரரின் வீடு செதுக்கிய பிரதீபனும் பாமினியும் என் மனக்கண்ணில் என்றும் மறையாது வலம் வருவர்.

இந்தக் கோடை நாடகத்தினால் துரைசிங்கம் குடும்பம் என்குடும்பம் போன்ற உறவை ஏற்படுத்தியது. துரைசிங்கத்தின் மகள் ராதினி எனது மகளாகவும், பிரதீபன் அன்னலிங்கம் எனது மகனாகவும் நடித்தனர். இந்த நாடகத்தின் மூலம் துரைசிங்கம் எனது அன்பு கனிந்த சகோதரர்களில் ஒருவர் போல ஆகிவிட்டார். அவருடைய அகவை நீண்டு வளம் பெருகிச் செல்ல என் உளமார்ந்த ஆசிகள்.

*முனைவர் பார்வதி கந்தசாமி*



முத்தமிழ் விழாவில் 'விவாகரத்து' நாடகத்தில்

# எல்லோருக்கும் இனியவர் - கதிர்

பொதுவாக எல்லோராலும் விரும்பப்படுபவராக, எல்லோராலும் மதிக்கப்படுபவராக, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுபவராக, சுருக்கமாகச் சொல்வதானால் எல்லோருக்கும் இனியவராக யாராலும் இருக்கமுடியாது என்று நான் ஒரு காலத்தில் நினைத்திருந்தது உண்டு. அந்த நினைப்பை தகர்த்தெறிந்தவர் என் அன்பின் நண்பர் கதிர்.

அவருக்கு பேதங்கள் இல்லை. அவர் பிரிவுகளுக்குள் கட்டுப்படுவது இல்லை. சித்தாந்தங்களால் பிளவு பட்டதுமில்லை. நல்லதை நயக்கும் பண்பு அவரிடம் உண்டு. நடக்கின்றது நல்லதைத் தரும் என்று அறிந்தால் அங்கே அவரது பிரசன்னம் இருக்கும். ஆங்கிலத்தில் Omnipotent, Omnipresence என்று இரண்டு வார்த்தைப் பிரயோகங்கள் உண்டு. அவை பொதுவாக சமயரீதியாக கையாளப்படுவது வழக்கமெனினும், நண்பர் கதிரைப்பற்றி ஒரு மேடையில் அவற்றை நான் குறிப்பிட்டிருந்தேன். மனிதருக்கு இருக்கும் சாத்தியங்களை வைத்துப்பார்க்கும்போது இந்த அடைமொழிகள் அவருக்குப் பொருத்தமாகவே எனக்கு படுகின்றன.

ரோரன்ரோவில் நடைபெறும் இலக்கிய விழாக்களில், கலைவிழாக்களில், நாடக விழாக்களில், ஊடகவிழாக்களில் அவரது பங்களிப்பு அனேகமாக இருக்கும். இவ்வளவுதூரம் தனது காலவிரயம், சிரமம் எதையும் பாராது அர்ப்பணிப்புடன் செயற்படும் அவரது தன்மையைப் பார்த்து பலமுறை வியந்திருக்கிறேன். கவிஞர் கந்தவனம் தனது கவிதையில் சொன்னதுபோல "ஆறரைக்கு கூட்டமென்றால் ஏழரைக்கே ஆரம்பிப்பார்" என்ற சங்கதியெல்லாம், அவர் சம்பந்தப்படும் விழாக்களில் நிகழாது. அவர் நிகழ விடமாட்டார். அறிந்தவர்கள் அறிவார்கள்.



நூல் வெளியீட்டு விழாவில்


கதிரிடம் இயற்கையாக இருக்கும் நகைச்சுவை உணர்வு, அவரது பேச்சிலும், எழுத்திலும் பிரதான இடம் வகிக்கும். முன்னதற்கு அவரது ஏராளமான நண்பர்களும், இரண்டாவதற்கு அவரது "காதோடு காதாக" நூலும், கட்டுரைகளும் சான்று.

அவர் எனக்கு என் 50 வயதுக்குமேல் கனடாவில் கிடைத்த நண்பர். அவரது நட்பினால் பலவகையிலும் பலன்பெற்றவன் நான். சுகயீனமுற்று இருந்தவேளையில் அவரது உதவிகளும், ஆதரவும் என்னை தேற்றின. இதையே தன் நண்பர்கள் பலருக்கும் அவர் செய்தார் என்பதை நான் அறிவேன்.

கதிர் தான் தொட்டதெல்லாம் துலங்கச்செய்தவர். அவரது நட்பு எனது சோர்வு அகற்றி என்னையும் துலங்கச்செய்வது.

"சந்திரனுக்கு ஒளி கொடுத்தது கதிர் (அவன்)"
வாழ்க.. வளமெல்லாம் பெற்று..

***கே. எஸ். பாலச்சந்திரன்.***




# 'கடி' டாக்டர் கதிர் துரைசிங்கம்

இவர் கதை, கதை எண்டு கதைச்சு, உங்களை அறு, அறு எண்டு அறுத்து, அதனாலை இந்தப் பட்டம் எடுத்திருப்பார் எண்டு நீங்கள் நினைச்சால் இவரைப்பற்றி முழுமையாக நீங்கள் புரிந்திருக்கவில்லை. அல்லது அவ்வப்போது இவர் அடிக்கும் 'timing jokes" உங்களுக்கு புரிந்திருக்கவில்லை. துரைசிங்கம் அண்ணையை நினைத்து இன்றும் நான் ரசிக்கும் ஒரு கதை. தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்கள் கனடாவில் கலந்து கொண்ட கூட்டமொன்றில் இடைவேளையின்போது துரைசிங்கம் அண்ணையும், பிரபஞ்சன் அவர்களும் புகைப்பதற்காக ஒதுங்கியிருக்கிறார்கள். இதைக்கண்ட திவ்யராஜா அண்ணை "சிநேகிதனே, சிநேகிதனே ரகசிய சிநேகிதனே..." என்று இவர்களைப் பார்த்துப் பாட, 'பக்' கெண்டு துரைசிங்கம் அண்ணையிடமிருந்து வந்த பதில் "ஓமோம் நாங்கள் secret friends (cigarette friends)" எண்டு. இதனை பிரபஞ்சனும் மிகவும் ரசித்தார்.

துரைசிங்கம் அண்ணரின் நகைச்சுவை உணர்விற்கு இது ஒரு சிறு உதாரணம். இப்படி ஏகப்பட்ட நகைச்சுவையை இவரிடம் நன்கு பழகியவர்கள் இவரிடமிருந்து ரசித்திருப்பீர்கள். இது எங்ஙனம் இவருக்கு சாத்தியமாகிறது என்று நான் பலதடைவைகள் யோசித்ததுண்டு. பலரும் தமது வாழ்வில் நடந்த சம்பவங்களை, தாம் கேட்டவற்றை, தாம் வாசித்த, ரசித்த விடயங்களை நகைச்சுவையாக சொல்லலாம். ஆனால் 'timing jokes" சொல்பவருக்கு அவருடைய மனம் தெளிவாக இருக்க வேணும். தன்னைவிட வயது குறைந்தோரையும் மதிக்கும் பக்குவம் இருக்க வேணும். ஹாஸ்ய உணர்வு மிகுதியாக இருக்க வேணும். எதிரே இருப்பவரை எந்தவிதத்திலும் குறைத்து மதிப்பிடாத தன்மை இருக்க வேணும். இவை எல்லாம் இவரிடம் இருப்பதால் தான் டொரொண்டோவில் கலை, இலக்கியம் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முக்கியமான அமைப்புகளின் விழாக்களிலும், முன்னணி ஊடகங்களிலும் இவரும் ஒரு பிரதான தூணாக இருந்து, அமைப்புக்களுக்கும், ஊடகங்களுக்கும் இடையிலான ஒரு பாலமாக செயற்பட்டு வருகின்றார். இவருக்கு தெரியாத ஆட்களில்லை, தெரியாத விசயமில்லை. இவரது இன்னொரு பலமான அம்சம், இருக்கிற இடத்தை கலகலப்பாக வைத்திருப்பது. இதனால் தான் இவர் பங்கேற்கும் நிகழ்வுகளில் இறுக்கமான விசயங்களுக்கும் இலகுவான தீர்வு காணப்பட்டு தடங்கலின்றி நடந்தேறுகின்றன.

***செல்வன்***




'ஆக்குவாய் காப்பாய்' நாடகத்தில்

# எனது அயலவர்

சைவமும் தமிழும் எமது சமுதாயத்தின் இரு கண்ணெனப் போற்றுதல் எமது பண்பாட்டின் பெருமை. இப்பணியில் ஆன்றவிந்து அடங்கிய சான்றோர் வாழ்ந்து காட்டிய வழியைப் பின்பற்றிய கிராமம் பன்னாலையாகும். இம்மண்ணில் 1939ஆம் ஆண்டு துரைசிங்கம் அண்ணா பிறந்தார். இவர் எனது அயலவர். திரு. துரைசிங்கம் அண்ணாவின் தந்தையார், கதிர்காமத்தம்பி 'சேர் கனகசபை வித்தியாசாலை' அதிபராக இருந்து பாடசாலைக்கும், ஊர் வளர்ச்சிக்கும் உழைத்தவர். சைவத்தையும் தமிழையும் எமது கிராமத்தில் பேணி வளர்த்தவர்களில் இவரின் தந்தையாரும் ஒருவராவார். தந்தையார் கதிர்காமத்தம்பி அவர்கள் மற்றும் சைவப் பெரியார்களுடன் சேர்ந்து பன்னாலைக் கிராமத்தில் சேக்கிழார் விழாவை மிகச் சிறப்பாக, நான் சிறுவனாக இருக்கும்போது நட்த்தியமை என் மனதில் இன்றும் இருக்கிறது.

திரு. துரைசிங்கம் அவர்கள் பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்று, பின் மகாஜனக் கல்லூரியில் படித்தார். 1961ஆம் ஆண்டு அப்போதிக்கரிப் படிப்புக்கு இலங்கை மருத்துவக்கல்லூரிக்கு சென்றார். பட்டப் படிப்பு முடிந்தபின் குருநாகல், அவிசாவலை, கொழும்பு போன்ற இடங்களில் பணி புரிந்து 1982இல் நைஜீரியா சென்று ஐந்து வருடங்கள் மருத்துவப் பணியாற்றி அங்குள்ள மக்களுக்கு பெரும் தொண்டு புரிந்தார்.



1987ஆம் ஆண்டு கனடா வந்தார். தந்தை கதிர்காமத்தம்பி அவர்களின் வழியைப் பின் பற்றி கனடாவில் பல பணிகள் புரிந்துவருகிறார். கனடாவில் எல்லோருக்கும் நன்கு தெரிந்தவரும், எல்லோராலும் நன்கு அறியப்பட்டவரும், சிறந்த மக்கள் சேவையாளருமான துரைசிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்துக்களைத் தெரிவிப்பத்தில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

அண்ணன் அவர்கள் இங்கு இடம்பெறும் எந்தவொரு முக்கியவிழாவிலும், அதனைத் தமது விழாவாகக் கருதி தம்மாலான உதவிகளை வழங்கி வரும் சிறந்த சேவையாளர் ஆவார். தாம் பிறந்த வீடு, தாம் கற்ற கல்லூரி மகாஜனா, தாம் வளர்ந்த நாடு அகியவைகளில் விசுவாசம் கொண்டு அவைகளின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் பங்களித்து வருவதைக் காணலாம். துரைசிங்கம் அண்ணா அவர்களுக்கு கலை, கலாச்சார விருப்பு அதிகம். நல்ல நடிகர். மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க வளர்ச்சிக்கும், கல்லூரியின் வளர்ச்சிக்கும் தொடர்ந்து உழைத்து வருகிறார். இவர் சஞ்சிகைகள், வானொலிகள், பத்திரிகைகள், ஊர்ச் சங்கங்கள் போன்ற சகல வெகுஜன தொடர்புச் சாதனங்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றின் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றி வருகிறார். அண்ணா துரைசிங்கம் அவர்கள், மனைவி, மக்கள் குடும்பத்துடன், பலலாண்டுகள் வாழந்து பல சேவைகள் செய்ய எல்லாம் வல்ல மயிலை வைரவப் பெருமான் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

*வே. நந்தீஸ்வரன்*



கொழும்பில் எழுத்தாளர் சோமகாந்தன் தலைமையில் 'காதோடு காதாக' அறிமுக விழாவில்

# உள்ளத்தாலும் உயர்ந்தவர்



எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் திரு.துரைசிங்கம் அவர்களது நட்புக் கிடைத்தது சில ஆண்டுகளுக்கு முன்னர்தான். லண்டனில் வசிக்கும் "புதினம்" பத்திரிகை ராஜகோபால் மூலம் ஏற்பட்ட தொடர்பு ஒரு இறுக்கமான நட்பாகப் பரிணமித்து நிற்கிறது.

கே.ரி. துரையர், துரைசிங்கம் டாக்டர் எனப் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படும் இவரை நாம் "துரைசிங்கண்ணை" என்று உரிமையோடு அழைக்கும் ஒரு குடும்ப அங்கத்தவராக மாறிவிட்டதை நினைக்கப் பெருமையாக இருக்கின்றது.

இவரிடம் நாம் கண்டறிந்த பண்புகளை சுட்டிக்காட்டவேண்டும். எல்லோருக்கும் நண்பராகவும் இனியவராகவும், வேண்டப்பட்டவராகவும் பொதுவானவராகவும் வாழ்ந்து காட்டுவது இலகுவானதல்ல. குறிப்பாக கனடாவில் இவர் ஈடுபாடு கொண்டிருக்கும் ஊடகத்துறையில் கருத்து முரண்பாடுகளைக் கடந்து ஆரம்பத்தில் இருந்தது போலவே தற்போதும் எல்லோருடனும் ஒனறுபட்டு நிற்பது மெச்சத்தகுந்தது. எதிரிகள் இல்லையோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

தாம் பிறந்த நாடு. தாம் கற்ற கல்லூரி, தம்மைச் சார்நத நண்பர்கள் எல்லோரிடமும் விசுவாசம் கொண்டு அவர்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இயலுமானவரை பங்களித்துச் செயற்படுவது இவரது இயற்கையான சுபாவம். சொல்வதைச் செய்வார், செய்வதையே சொல்வார். எடுத்த எடுப்பில் யாராக இருந்தாலும், அல்லது எந்த நிகழ்வாக இருந்தாலும் அலசி ஆராய்ந்து ஆலோசனை வழங்கிவிடுவது இவருக்குக் கைவந்த கலை. மற்றவர்கள் ஏற்பார்களோ, அல்லது எதிர்ப்பார்களோ அதுபற்றிக் கவலைப்படமாட்டார். தனக்குச் சரியென்று படுவதைச் சொல்லத் தவறமாட்டார். அதேவளை மற்றவர்கள் விடும் பிழைகளை தயக்கமின்றிச் சுட்டிக்காட்டவும் பின் நிற்க மாட்டார்.

பல சந்தர்ப்பங்களில் நான் இவரைப் பல விழாக்களில் பார்வையாளனாகப் பார்த்ததையும், அடுத்த அடுத்த ஆண்டு அதே விழாக்களில் இவர் பார்வையாளன் என்ற நிலையிலிருந்து மாறி விழாவை நடாத்துகின்றவராக மாறி இருந்ததை நினைத்துப் பார்க்கிறேன். விசாரித்துப் பார்த்தால், ஆலோசைனைகள், திருத்தங்கள் கூறல்போல் பொறுப்பு முழுவதுமே இவரது தலையில் கட்டப்பட்டதாகவும், அன்றுமுதல் குறிப்பிட்ட நேரத்தில் முறைதவறாது இவர் தலையில் கட்டப்பட்ட விழாக்கள் நடப்பதையும் பலர் கூறக்கேட்டிருக்கிறேன்.

இயல்பாகவே நகைச்சுவை கலந்து கதைக்கும் பண்புதான் இவரை எல்லோரும் உள்வாங்கும் நிலைக்குக் கொண்டு செல்கின்றதோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. சாதாரண இயல்பு வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை நகைச்சுவை கலந்த துணுக்குகள் ஆக்குவதில் இவருக்கு நிகர் இவர்தான் "காதோடு காதாக" வெற்றி மணியில் ஆரம்பித்த இவரது நகைச்சுவைத் துணுக்குகள் பெருவெற்றி அடைந்தது. பின்னர் தமிழர் தகவல், தாய்வீடு, புதினம், உதயன் எனப் பல பத்திரிகைகளிலும் வெளியானது இவரது எழுத்துக்குக் கிடைத்த அங்கீகாரமே.

இவர் எழுத்தாளன் மட்டுமல்ல, நல்ல நடிகன். மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவில் "கோடை" நாடகத்தில் பிரதான பாத்திரம் ஏற்றுத் திறம்பட நடித்தமையை இன்றும் பலர் பேசுவதைக் கேட்கக்கூடியதாக


உள்ளது. நாடகப் பிரதி எழுதுவதிலும் வெற்றி கண்டவர். "ஆசை ஆசை", "என்னத்தைச் சொல்லி" என்பன இவர் எழுதிப் புகழ்பெற்ற நாடகப் பிரதிகள்.

எனது மகள் கண்ணா டாக்டராக பட்டம் பெற்றதை அறிந்ததும் சுமார் முன்று அடி உயரமான வாழ்த்து மட்டை ஒன்றை அனுப்பிவைத்தது இவரது உயர்ந்த உள்ளத்தை, எம்மவர்மீது கொண்டுள்ள பற்றுதலை படம் போட்டுக்காட்ட ஒரு நல்ல சான்று. இன்று எங்கள் வீட்டில் பல ஆண்டுகள் கழிந்தாலும் அவரது உயர்ந்த வாழ்த்து உயர்ந்த இடத்தில் பாதுகாப்பாக இருக்கின்றது.

வெளிநாட்டு மோகத்தினாலும், மேற்கத்திய கலாச்சாரக் கலப்பினாலும் எமது சமய, கலாச்சார நிகழ்வுகளும் முறைதவறி நடப்பதைப் பார்த்துப் பெரும் கவலை கொள்ளபவர் இவர். பல சந்தர்ப்பங்களில் தமது ஆதங்கத்தை நகைச் சுவையுடன் சுட்டிக் காட்டினாலும் நாய்வாலை நிமித்திய கதைதான். அந்த வகையில் ஒரு திருமண விழா என்பது எத்தகைய ஒழுங்கில் எவ்வாறு நடைபெற வேண்டும் என இவர் தொகுத்த அட்டவணை மிகப் பயன் உடையது. எமது மகளின் திருமணவிழா பெரிய அளவில் நடைபெற்றபோது ஒரு நிமிடம் கூடப் பிந்தாத வகையில் சகல சடங்குகளையும் விசை தப்பாது செய்வதற்கு இவரது அட்டவணை எமக்குப் பெரிதும் உதவியதை மிக்க நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். அந்த அட்டவணை நாம் மட்டுமல்ல, வெளிநாடுகளில் உள்ள பலரும் அதன் பிரதிகளைப் பெற்று பயன் பெற்றதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அதுவும் இவருக்குக் கிடைத்த ஒரு வெற்றிதான்.

1987இல் கனடாவில் காலடி வைத்த இவர் இன்றுவரை சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக பொதுச் சேவையிலும், பலருக்கும் தானே முன்வந்து உதவுவதிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருபதைப் பாராட்டுவதில் நாமும் பங்குகொள்வதை ஒரு பொருட்டாகவே கருதுகிறோம். இவரது சேவைக்கு உற்ற துணையாக இருக்கும் திருமதி. பூமணி அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர். மணிவிழாக்கண்ட நாயகன் இன்னனும் பவளவிழா, சதாபிஷேக விழா, போன்ற பல விழாக்களைக் கண்டு எமக்கும் எமது சமூகத்திற்கும் ஒரு நல்ல வழிகாட்டியாக நீண்டகாலம் நலமுடனும் சகல வளங்களுடனும் வாழ, எல்லாம் வல்ல இறைவனது ஆசிகளை வேண்டி நிற்கின்றோம்.

*வேலா சுப்பிரமணியம்.*



விருந்துபசார வைபவத்தில்

# இன்முகக் கலைஞர் - பெருமை கருதாது உதவும் பெருந்தகை டாக்டர். கதிர் துரைசிங்கம்



'காதோடு காதாக' நூல் வெளியீட்டில்

கற்றாரை கற்றாரே காமுறுவர் என்பது சான்றோர் வாக்கு! - அதிலும் தான் கற்றறிந்த கலை இலக்கியப் புலமையை இயல், இசை, நாடகம் என பல கலை மேடைகளில் வலம் வந்து - இனிய தமிழ் சொல்லாற்றலால் நயம்பட உரைத்தும், எழுதியும், அறிஞராய் வாழ்ந்து காட்டுவதும், நம்மில் எத்தனைபேருக்கு இப்பேறு கிட்டும்!

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதானது உலகெங்கும் காணேன்" என முண்டாசுக் கவிஞன் மகாகவி பாரதியாரின் கூற்றிற்கேற்ப யான் அறிந்த மேடைக் கலைஞர்களில் - கலை இல்க்கியப் படைப்பாளியாய், திறன் வாய்ந்த நாடக மற்றும் திரைப்பட நடிகராய், பல்வேறு சமூக மற்றும் கலை விழாக்களின் நிகழ்ச்சித் தொகுப்பாளராய், நகைச்சுவைத் திலகமாய், சமூக சேவையில் முன்னின்று சேவை புரியும் தொண்டராய், உலகம் சுற்றும் வாலிபராய், என்னைக் கவர்ந்த பன்முகக் கலைஞராய், மனிதநேயம் காக்கும் அற்புத மாமனிதரான டாக்டர். கதிர் துரைசிங்கம் அவர்களைப் பாராட்ட என்னிடம் வார்த்தைகளே இல்லை, - வாழ்த்துதலுக்கும் பாராட்டுதலுக்கும் அவருக்கு பெருமை சேர்க்கும் இன்றைய இனிய விழாவிலே "ஜனகன் பிக்சர்ஸ்" சார்பில் எனது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

கலை இலக்கியப் பூங்காவில் மணம் வீசும் மல்லிகை மலராய் தமிழுக்கும், தாயகத்திற்கும், தான் வாழும் மண்ணிற்கும் மணம் பரப்பி தமிழ்கூறும் நல்லுலகத்தினர் அனைவரின் பாராட்டுதல்களையும், அன்பினையும் மூலதனமாய் பெற்று தன்னை உயர்த்திக்கொண்ட மனிதநேயப் பண்பாளர்! சிறந்த ரசிகர்! விமர்சகர்! படைப்பாளர்! இவரது சேவைகள் அளப்பரியது என அனைவரும் அறிவோம். அதே தகமையுடன் கலை இலக்கிய வானில் நம்பிக்கை நட்சத்திரமாய் ஒளி வீசி தொடரட்டும் அவரது பணி-நம் அனைவரையும் என்றும் மகிழ்ந்திடவும், நாம் அனைவரும் தொடர்ந்து அவரைப் போற்றும் வண்ணமும்

நான் தாயரித்த "சுகம் சுகமே" படத்தில் குணசித்திர நடிகராக வந்து ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்துகொண்டதோடு பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டதை நான் அறிவேன். எங்கள் மக்களுக்குத் தேவையான குடும்ப ஆலோசனையை வழங்கும் ஒரு நண்பராக வந்து நல்லதொரு அறிவுரையைத் தந்த அவரது நடிப்பு இயல்பானதாகவே அமைந்திருந்தது.

மகாஜனா விழாவில் நான் செய்த வில்லுப்பாட்டை எழுதியதோடு அதனை நெறிப்படுத்தியவரும் அவரே. எனது மகளின் திருமணத்தில் எனக்கு வலக்கரம்போல நின்று அதனை சிறப்பாக நடத்துவதற்குப் பலவழிகளிலும் உதவி, வழிப்படுத்திய ஒரு பெரும் பண்பாளராக நான் அவரைப் பார்க்கின்றேன். நிறைகுடம் வைக்கப்படும் இடத்தில் கோலம் போடப்படாததைப் பார்த்துவிட்டு ஓடோடிச் சென்று டாக்டர். கதிர் ஐயாவும் சாந்திநாதன் அவர்களும் கோலத்தைப் போட எடுத்த முயற்சியும் அதற்கான பெரும் பொறுப்பும் என்றும் என் மனதைவிட்டு அகலாது. எந்தவிடயமானாலும் மனமுவந்து நல்ல ஆலோசனைகளை அவர் தரத் தவறுவதில்லை. கேட்டதை இல்லையென்னாது செய்யும் கனவான் அவர்.

உதயன் விழாவா, பாரதிக்கலைக்கோயில் விழாவா, நாடகப் பெருவிழாவா, மகா ஜனாவின் முத்தமிழ் விழாவா, சிவத்தமிழ் விழாவா, நூல் வெளியீட்டு விழாவா, சமூக கலாச்சார ஆன்மீக விழாவா இவர் இல்லாமல் ஒரு விழா என்றால் அது மிக அரிதாகும் - அனைவரையும் தன் இன்முகத்தால் கவரும் அவரது இயல்பே தனிதான், எனவே தான் "இன்முகக் கலைஞர்" என்ற அடைமொழி தந்து அறிஞர் பெருமக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து நடத்தும் இனஎ்றய அவரின் பாராட்டு விழாவில் குற்றால அருவியும், நயாகரா நீர்விழ்ச்சியும் கொட்டும் இன்பத் தேனருவிச் சாரலில் நானும் கலந்து அனைவருக்கும் நன்றி பாராட்டி டாக்டர். கதிர் அவர்கள் நல்லூர்க் கந்தன் அருளால் வளமும் நலமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்.

*ஸ்ரீ முருகன்*

*ஜனகன் பிக்சர்ஸ் – கனடா*

# பெருமை இல்லாதவர் பெருமைக்குரியவர்

எங்கள் உள்ளம் எல்லாம் நிறைந்து வியாபித்திருப்பவர்.
எப்பொழுதும் எதிலும் கலங்கமில்லாதவர்.
தான் பொறுப்பெடுத்துக் கொண்ட விடயத்தில் தளர்வு இல்லாதவர்.
முதுமையிலும் இளமையாய் இருப்பவர்.


தான் உண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவர் அனேகர். ஆனால் இவரோ தன் கடமையுடன் பிறர் வேலையை தானே முன்னெடுத்துச் செய்பவர். எல்லோரிடமும் பழகுவார், ஆனால் எல்லோரையும் நண்பராக ஏற்றுக்கொள்ளமாட்டார். ஏற்றுக் கொண்டால் அவர்கள் கைவிட்டாலும் இவர் கைவிடார்.

இத்தனை பண்புகளும் ஒருங்கே அமையப்பெறுவது உலகில் ஒரு சிலர்க்கே. அந்த ஒரு சிலரில் எங்களுடனும் ஒருவர் வாழ்கின்றார் என்றால் அவர் வேறு யாருமில்லை, பெருமையே இல்லாத எங்கள் Doctor ஐயா அவருடன் நாம் நண்பராக இருப்பதனால் நாமும் பெருமைக்குரியவர்கள் ஆகின்றோம்.

இவரை பதினாறு வருடங்களாக எனக்கு நன்கு தெரியும். ஆனால் அவருக்கு என்னை பதினான்கு வருடங்களாகத் தான் தெரியும். இவரை உதயன் பத்திரிகை மூலமாகவே எனக்குத் தெரிவதற்கும், நெருங்கிப் பழகுவதற்கும் வாய்ப்புக் கிட்டியது. அதன் பிற்பாடு அவரை எனது உள்ள வீட்டில் உயர்த்தி வைத்தேன். இவரை ஒரு நல்ல ஆசான் என்பதா? அல்லது வழிகாட்டும் வழிகாட்டி என்பதா? இல்லையேல் நல்ல நண்பன் என்பதா? உயர்விலும் தாழ்விலும் எம்மோடு இருக்கும் பங்காளன் என்பதா? தினமும் விசாரித்து அறிவும், ஆறுதலும் கூறும் சகோதரன் என்பதா? இல்லையேல் நல்ல தந்தை என்பதா? இவையெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற தெய்வமாகவே எனக்கும் எனது குடும்பத்திற்கும் அவர் இருக்கின்றார்.

இவரின் கதையில் நகைச்சுவை கலவாத பேச்சுக்கள் குறைவாகவே இருக்கும். அத்தோடு இன்னுமொரு பெருமை, என்னுடைய பிறந்தநாளுக்கு அவர் வாழ்த்துச் சொல்லும் போது நான் "same to you" என்று சொல்லக்கூடிய ஒருவர். ஏனெனில் நானும் அவரும் ஒரே நாளில் பிறந்தவர்கள். அப்படியான உத்தமனுக்கு பாராட்டு எடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அவரை நானும் எனது குடும்பமும் உடல், சுக ஆரோக்கியத்துடன் இன்னும் பல ஆண்டுகள் வாழ மனதார வாழ்த்துகிறோம்.

***எஸ். ஜே. சோதி***
JJ Print President



பிறந்தநாள்
விழாவின் போது
"same to you"

# ஒரு தொலைபேசி அழைப்பில் வந்து நிற்பவர்

எனது பால்ய நண்பரான துரையை எனக்கு அறுபது வருஷங்களாக தெரியும். இவர் அன்றும் இன்றும் ஒரே மாதிரித்தான் பழகுவர். ஹாஷ்யம் இவருடன் பிறந்தது. அவருக்கு கவலைகள் இருக்கின்றதோ இல்லையோ எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருப்பார். எங்களையும் மகிழ்வாக இருக்கச் செய்வார். இவைகளெல்லாம் இவருக்கு கிடைத்த பொக்கிஷம் என்றுதான் சொல்லவேண்டும்.

துரை கனடாவில் சமூகப்பணியில் தன்னை அர்ப்பணித்து 25 வருடங்கள் பூர்த்தி செய்துள்ளார்.


பால்யம் தொட்டு பழகி வந்த எங்களது நட்பு கனடாவில் மேலும் பரிணமித்து அவர் எங்கள் குடும்பத்தில் ஓர் அங்கத்தவர் போன்று பழகும் அளவிற்கு மாறிவிட்டது. என்ன உதவி தேவையோ ஒரு தொலை பேசி அழைப்பு கொடுத்தால் போதும் வந்து எல்லாம் தனது குடும்ப வேலை மாதிரியே செய்வார். இவர் பேச்சில், நடிப்பில் வல்லவர். ஆனால் நிஜ வாழ்க்கையில் நடிக்கத் தெரியாதவர். மற்றவர்களுக்குப் உதவும் பரோபகாரியாகவே அவர் திகழ்கின்றார்.

எங்கள் குடும்பத்தின் சார்பாக அவருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்



'காதோடு காதாக' நூல் வெளியீட்டில்

*திரு. மகேந்திரன்*




ஜேர்மனி விஜயம்

# 'பவதாரணியின் பாரதி கலைக்கோயில்' மாலுமி அவர்

உள்ளத்தால் உண்மையாக பழகும் பண்பாளர் கதிர் துரைசிங்கம் அவர்களின் நட்பு எமக்குக் கிடைத்தமை, எமக்கு மட்டுமல்லாது எம்மைச்சார்ந்த பலருக்கும் பெரும் பாக்கியம் என்று சொல்ல வேண்டும்.

"உலகத்தமிழர் மகா நாட்டில்" அண்ணன் கே. எஸ். பாலச்சந்திரன் அவர்கள் எழுதி இயக்கிய "எங்கோ தொலைவில்" என்ற மேடை நாடகம் நிறைவுற்று கலைஞர்கள் நண்பர்கள் எம்மை மேடையின் பிபுறமாக வந்து வாழ்த்திக் கொண்டிருந்த வேளை, உயர்ந்த ஒரு மனிதர் வந்து "மதிவாசன் அருமையான நடிப்பு.... எல்லாரையும் அழவைச்சிட்டீங்களே...., எல்லாரும் நல்லா நடிச்சவை.... உம்மட "நச்சுரல் அக்டிங்" எனக்குப்பிடிச்சிது....!. யார் இந்த உயர்ந்த மனிதர், நான் இதற்கு முன்பு பார்த்திராதவர், என்றும் அறிமுகமில்லாதவர். தானே அறிமுகம் செய்துகொண்டார் "ஐ ஆம் கதிர் துரைசிங்கம்..." அது எமது முதல் அறிமுகம். அதன்பின் இடையிடையே நிகழ்ச்சிகளில் சந்தித்துக் கொண்டோம்.

2003ஆம் ஆண்டு பாரதி ஆர்ட்ஸ், Ontario Science Centre இல் நடத்திய "திறன் காணல்" நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்ததுவே இவரது முதல் வரவாக அமைந்தது. நிகழ்வில், மாணவர்களை வாழ்த்தி விட்டு பின் பவதாரணியை இவருக்கு அறிமுகம் செய்து வைத்தேன். இவர் ஒரு டாக்டர், கலைப்பிரியர் என்றெல்லாம் சொல்லி முடிய பாதாரணி "டொக்டர் ஐயா, நிகழ்ச்சி எப்பிடி இருந்தது?" என்று கேட்டதன் பின் இவரை நாங்கள் எல்லோருமே "டொக்டர் ஐயா" என்று செல்லமாக அழைக்கத் தொடங்கிவிட்டோம்.


வைத்தியசாலைக்கு நன்கொடை அளித்தபோது

அடுத்த நாள் என்னுடன் தொலைபேசியில் பேசும் போது என்ன திருத்தங்களைச் செய்தால் எங்கள் நிகழ்வு இன்னும் சிறப்பாக அமையும் என்று ஆலோசனை கூறியவுடனேயே எமக்கு ஒரு அருமையான (இலவச) மந்திரி கிடைத்த பேரானந்தம். பணமோ பதவியோ இவரிடத்தில் எப்போதும் விலை போவதில்லை. நேர்த்தியான இவரது சேவை பாரதி ஆர்ட்ஸ் பெற்றோரிடையே பெரும் அபிமானத்தைப் பெற்றுவிட்டது.

பாரதி ஆர்ட்ஸ் நடாத்திய "ஆஹா 2003" நிகழ்வைப் பற்றி முதலில் உதயன் பத்திரிகையில் விமர்சனம் ஒன்றை எழுதி Toronto வாழ் மக்களுக்கு எம்மை அடையாளம் காட்டிய பெருமையும் இவரையே சாரும். அன்று முதல் இன்று வரை, சிறிய அளவிலான நிகழ்வோ, பெரிய அளவிலான நிகழ்வோ. இவரது ஈடுபாடு இல்லாமல் நடந்ததில்லை.

நான் என்னுள்ளே எண்ணிக்கொள்ளும் ஒரு விடயம் "நல்லன எல்லாம் வேண்டும்" என்று இறைவனிடம் கேட்பதை விட "நன்மையையே எண்ணுகின்ற நல்ல நட்பு வேண்டும்" என்று எண்ணியிருக்கிறேன். எமது நிகழ்வெல்லாம் தனதாக எண்ணும் பரந்த உள்ளமும் சிறந்த சிந்தனையும் கபடமில்லா எண்ணங்களும் யாரைத்தான் கவராமல் இருக்கமுடியும்?

பாரதி கலைக்கோயிலில் "டாக்டர் ஐயா" அவர்களது ஈடுபாடு அதிகரித்தது. அதற்குக் காரணம் எமது செயற்பாடுகளுக்கு அவர் மனதில் கிடைக்கப்பெற்ற அங்கீகாரமே. இவரது அனுமதியின்றி சில விடயங்கள் நடைபெறாமாட்டாது என்ற நிலை உருவாகியது. நாங்கள் சாதனை படைக்கவேண்டும் என்று எண்ணுகிற போதெல்லாம் என்னுடைய ஒரு மூத்த சகோதரர் போல் இருந்து, எம் சாதனைகள், பெரும் சாதனைகளாக அமைய அதனை மாற்றி, மெருகூட்டி, பலரும் வியக்கும் வகையில் நடத்தி முடிக்க இரவு பகலாக சிந்திப்பவர். அதன் விளைவில் ஒன்று பலரும் அறிந்த எமது "ஐரோப்பிய இசைப்பயணம்" அவருடைய ஒருங்கிணைப்பும், ஒழுங்கமைப்பும் இல்லாவிடின் அப்பயணம் சாத்தியமாகியிக்காது என்பது உண்மை.

பாரதி கலைக்கோயிலின் பாராட்டுக்கும் நன்மதிப்புகும் உரிய ஒரு சொத்து "டாக்டர் ஐயா". அவர் செய்த பணிகளில் என்னை மிகவும் கவர்ந்தது, அவருக்குத் தெரிந்த, நன்கு மதிக்கப்பட வேண்டிய, பெருமைகளுக்குரிய, பாதுகாக்கப்பட வேண்டிய இன்னும் நம் சமூகச் சொத்துக்கள் பலரின் தொடர்பை எமக்கு ஏற்படுத்தித்தந்தமையே. மஹாஜன பழையமாயவர் சங்கம், ஸ்கந்தவரோதயா பழையமாணவர் சங்கம், வெற்றிமணி - ஜேர்மனி போன்ற பல்வேறு அமைப்புகளுக்கும் பாரதி கலைக்கோயிலுக்கும் பாலமாக அமைந்தவர் எங்கள் "டாக்டர் ஐயா" என்பதும் குறிப்பிடத்தக்கது.

எமக்கு மேலும் மேலும் பாராட்டுக்கள் பல கிடைக்க வேண்டும் என்று எண்ணி அவ்வப்போது எம் நிகழ்ச்சிகளில் சில மாற்றங்கள் செய்யப் பணித்தார். அதன்படி எல்லோரும் பாராட்டும் ஒரு வித்தியாசமான இசைக்குழுவாக எம்மை மக்கள் அடையாளம் காண வைத்தார். இவரது சிறிய ஆலோசனைகள்கூட எனக்கு பெரிதாகவே இருந்தது.

நாட்கள் உருண்டோடின, பாரதி கலைக்கோயின் இசைத்தாய், என் மனைவி "பாவதாரணி" பிரிந்த வேளை, பிரிவின் துயரம் என்னை ஆழம் அறியா ஆழ்கடலின் கீழ்நோக்கித் தள்ளியது. என்செய்வேன் ஐயா? என்று என் ஐயப்பனை வேண்டி உள்ளும் வெளியும் தனியாக அழுது கொண்டிருந்த வேளை, "இதுவும் வாழ்கையின் ஒரு பாடம், உனக்கு முன்னால், நிறைவேற்றப்படாத பவதாரணியின் பல குறிக்கோள்கள் வரிசையாக நின்றுகொண்டிருக்கிறதே அதை செய்தாற்தானே அந்த ஆத்மா சாந்தியடையும், நீ உன்னை மாற்றி உன்னால் முன்னெடுத்து செல்ல வேண்டிய சேவைகளைத் தொடர உன்னுள் இருக்கும் கவலை தானாக போய்விடும்" என்று உணர்த்துவது போல தினமும் என்னுடன் உரையாடி, "பவதாரணியின் பாரதி கலைக்கோயில்" தன் சேவையைத் தொடர காரணமாக இருந்தவர் என்றால் அது மிகையாகாது.




ஜேர்மனி - வெற்றிமணி விழாவில்

இப்படிப்பட்ட சிறந்த ஒரு மனிதரின் பல நல்ல அம்சங்களை எல்லாரும் பல வடிவில் இம்மலரில் பதிவு செய்திருக்கிறார்கள். அவருடைய பங்களிப்பு எமக்குக் கிடைத்த சிறந்த அனுபவம். திரு. கதிர் துரைசிங்கம் "டாக்டர் ஐயா" அவர்களுக்கு ஒரு பாரட்டுவிழா நடாத்த எண்ணினோம், அதை சாத்தியமாக்க, பிள்ளைகள் எப்படி தந்தையிடம் ஆலோசனை கேட்ப்பார்களோ அதுபோன்று, நானும் பவதாரணியும் தங்தையாய் எண்ணும் எங்கள் மதிப்புக்கும் பாசத்திற்கும் உரிய அதிபர் பொ. கனகசபாபதி மாஸ்டரை அனுகினோம். பிள்ளைகளின் முயற்சிக்கு தந்தை என்ன சொல்லுவார்? ஆமாம் என்றார், ஆலோசனைகள் வழங்கினார். இவ்விழாவின் தலைமைப் பொறுப்பு அவருக்குத்தானே தகுதியானதாக இருக்கும், அவரையே சம்மதிக்க வைத்தோம். மலர் ஒன்றின் முக்கியத்துவத்தை, ஆசிரியரும் சிறந்ததொரு நண்பரும், பாரதிகலைக் கோயிலின் நலன்விரும்பியுமான த. சிவபாலு அவர்கள் குறிப்பிடார். "பாரதி ஆர்ட்ஸ்" என்ற பெயரை "பாரதி கலைக்கோயில்" என பெயர் மாற்றச்செய்த பலரின் நன்மதிப்பைப் பெற்ற கவிநாயகர் கந்தவனம் ஐயாவின் ஆலோசனைகளையும் மனதில் கொண்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டது.

திரு. கதிர் துரைசிங்கம் அவர்களைப்பற்றி எம்முடனான அனுபவங்கள் எல்லாவற்றையும் விபரித்தால் அதுவே தனிப் புத்தமகிவிடும். ஆகையால் சுருக்கி எழுதி, அவரின் நட்பை தந்து, அவருக்கென ஒரு பாராட்டு விழாவை நடத்த அருள் புரிந்த இறைவனுக்கு நன்றி கூறி "டாக்டர் ஐயா" பல்லாண்டு காலம் வாழ அவரையும் அவர்தம் துணைவியாரையும், "பவதாரணியின் பாரதி கலைக்கோயில்" பெற்றோர் சார்பிலும் மாணவர் சார்பிலும் வாழ்த்துகிறேன்.

"இருந்தாலும் மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும்!
இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்!!"

வாழ்க கதிர் துரைசிங்கம் ஐயா! வையம் போற்ற வளர்க நும் சேவை!!

***எஸ். மதிவாசன்***
***பவதாரணியின் பாரதி கலைக்கோயில்***

# கரும வீரன் கதிர் துரைசிங்கம்

உன்னத உழைப்பாளி உலகுக்குத் தினம்
சன்னத மாகவே உழைத்திடும் கருமவீரர்
மன்னினம் மேவிடும் தாராள மனத்தினர்
தன்னலம் இன்றியே பொதுநலன் நல்குவார்

ஆண்டாண்டு காலமாய் மேடை நாடகம்
தாண்டாத காலுமே இல்லையே இடரினும்
கொண்டாடும் விழாக்களில் கதிர்துரையரை
தீண்டாத எவருமே இல்லையே உளமதில்.

நலத்துடன் நல்வினை நயந்துமே நல்குவார்
தலத்திலே இரவுபக லெலாம் உறக்கமின்றியே
புலத்திலே மருத்துவம் மேவிய மேலவர்
வலத்திலே விழாக்களில் சேவைகள் தருகிறார்.

மனத்திலும் செயலிலும் பொதுச் சேவையே
கனத்திலும் கருத்திலும் பெரும் உள்ளமே
தினந்தினம் திரிந்தலைந்து உருகும் பாங்குமே
தினவுற உள்ளத்து உணர்வின் பணியாமே!

உதயன் விழா ஒழுங்கமைப்பில் சிறக்கவே
கதையென் உளத்தைக் கவரவே பிறப்பிலே
நகையென் சிந்தையில் தந்தவன் புன்னகை
வதனத்தன் கதிர் துரைசிங்கம் புரக்கவே!

ஆச்சி என்றாலும் அரிவை என்றாலும்
தாச்சி நானென முன்னின்று உழைக்கிறார்
ஓச்சி நாளெலாம் நயம் பெற்றிட
வீச்சில் விரைந்துமே விளைகின்றார்!

நற்பணி நன்றுடன் தன்னல மின்றியே
சொற்பணி செந்தமிழுடன் ஆங்கிலம்
கற்பணி மனதுடன் தருபவர் துரையரோ
தற்பணி தந்தவர் பொதுப்பணி உய்யவே!

உலகு புரிந்திட பற்பல சேவைகள்
அலகு நிறைந்திட அற்புத உள்ளமும்
நிலவ நிறைவிலே தந்திடச் சேவையே
குலவ நித்தமும் உன்னதம் ஓங்கவே!

த. சிவபாலு

# நன்றி நவில்கின்றோம்

முகம்நக நட்பது நட்பன்று உள்ளத்து
அகநக நட்பது நட்பு.

இந்த விழாவிற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கியதோடு தலைமை தாங்கி இந்த விழாவைச் சிறப்பாக நடத்தித்தர முன்வந்த அதிபர் பொ. கனகசபாபதி அவர்களுக்கு நாம் என்றென்றும் கடப்பாடுடையோம்.

திரு. கதிர் துரைசிங்கம் அவர்களின் சேவைகளை நண்பர்களிடமிருந்து உள்வாங்கி "கதிர் உலா" என்ற இச் சிறப்புமிகு மலரை உருவாக்க எம்மோடு அரும்பாடுபட்ட எம் மதிப்புக்குரிய நண்பர் த. சிவபாலு அவர்களுக்கும், ஆக்கங்களைத் தந்து அதனை முழுமைபெற வைத்த அனைத்து அன்பர்களுக்கும்,

இந்த நூலையுருவாக்க மனமுவந்து அதற்கான ஆதரவினைத்தந்த அதிபர். பொ. கனகசபாபதி, கவிநாயகர் வி. கந்தவனம், உதயன் ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம், சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன், திரு. த.சிவபாலு, பொன். சுந்தரலிங்கம், பண்டிதர் மா.சே.அலக்சாந்தர், பாரதி கலைக்கோயில் எஸ். மதிவாசன் ஆகியோருக்கும்,

இந்த அழகிய நூலை வடிவமைப்புச் செய்த Artlink உரிமையாளர் செ. அமுதீசன் அவர்களுக்கும், எழுத்து ஒப்புநோக்கி உதவிய நண்பர் அ.புராந்தகன் அவர்களுக்கும் அச்சுப்பதிவாக்கி நூலாக்கிய J.J. Printers திரு. திருமதி. சோதி அவர்களுக்கும்,

இந்தப் பாராட்டுவிழாச் சிறப்படையத் தங்களாலான ஒத்துழைப்பை நல்கிய கலைக்கோயில் மாணவர்கள், கலைஞர்கள், பெற்றோர்கள், நண்பர்கள் அனைவருக்கும்,


எமது அழைப்பை ஏற்று வருகைதந்து இந்த விழா ஒரு நிறைவான விழாவாக நடைபெற ஒத்துழைப்புத் தந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,

**எமது மனமார்ந்த நன்றி.**

***விழாக்குழு***



உடன்பிறப்புக்களுடன் கொழும்பில்



பாரதி கலைக்கோயிலின் 'நட்சத்திர இரவு' நிகழ்வில்



IMHO மகாநாட்டிற்கு வருகைதந்த நண்பர்களுடன்



வெள்ளிவிழாத் தம்பதியினரை வாழ்த்தும்போது



தாயாரின் 90வது பிறந்தநாளில்




“Help for Love அன்பின் பணி”

இசைத்தாய்

பவதாரணியின் ஆசியுடன்,

திரு. கதிர் துரைசிங்கம்

அவர்களை

வாழ்த்தும்

மாணவர்கள், பெற்றோர்கள்,

அங்கத்தவர்கள்



Bavatharani's Bharradhi

Temple of Fine Arts

பாரதி

கலைக்கோயில்

Tel: 416.754.9338

www.bharradhiarts.com | bharradhiarts@yahoo.ca

JJ PRINT 416-298.9322